பக்கங்கள்: 20

விலை: 30.00

# தீம்புனல்
THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:35 25.12.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



பாதுகாப்புத் தரப்புக்கு
பாடம் சொல்லும் பாதுகாவலர்!
அவதானி
பக்கம்
05



பிரபஞ்சநேசம்
வேதநாயகம் தபேந்திரன்
பக்கம்
07

ஊடுருவி






# தமிழ்க்கட்சிகளிடையே தோன்றும் ஒற்றுமையும் வேற்றுமையும்



“ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிதைத் தேர்ந்திடல் வேண்டும் இந்த
ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும்.”

இது மகாகவி பாரதியின் நினைவு நூற்றாண்டு காலம். அவரது மேற்குறித்த வைர வரிகளை இங்கு நினைவூட்டவேண்டிய தேவை வந்தமைக்கு அண்மையில் இலங்கைத் தலைநகரில் கூடிப்பேசியிருக்கும் தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களின் சந்திப்புத்தான் பிரதான காரணம்.

இந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் வெவ்வேறு கால கட்டங்களில் ஒன்றாக இருந்தவர்கள்தான்.

பல்லாண்டுகளுக்கு முன்னர், சமகாலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தாத்தா, புகழ்பெற்ற வழக்கறிஞர் ஜீ. ஜீ. பொன்னம்பலமும் சம்பந்தனின் தந்தையார் இராஜவரோதயமும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியில்தான் அங்கம் வகித்திருந்தனர்.

அந்தத் தமிழ்க்காங்கிரஸ்தான் பின்னர் பிளவுண்டு தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக்கட்சி உருவானது. பொன்னம்பலத்திற்குத் தேர்தலின் சின்னம் “சைக்கிள்.” செல்வநாயகத்தாருக்குச் சின்னம் “வீடு.”

பிற்காலத்தில் காலத்தின் தேவை கருதி, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் 2010 ஆம் ஆண்டின் பின்னர் - அதாவது நீடித்த முப்பது ஆண்டு காலப்போர் முடிவுக்கு வந்த பின்னர், உள்வாங்கப்பட்டவர்தான், அதுவரையில் ஆன்மீகம் பேசிக் கொண்டிருந்தவரும் கம்பன் கழக மேடைகளில் சொற்பொழிவாற்றிக்கொண்டிருந்தவருமான நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனால் அழைத்துவரப்பட்டவர்கள்தான் மதியாபரணம் சுமந்திரனும்

▶16




தீம்புனல்
THEEMPUNAL
அனைவருக்கும் தீம்புனல் குழுமம் சார்பாக
நத்தார் பண்டிகை வாழ்த்துகள்



# உக்ரைனை மையப்படுத்தி மீள யுரேசிய அரசியலில் ரஷ்ய ஆதிக்கம் எழுச்சியடைகிறதா?

ஐ.வி.மகாசேனன்

உக்ரைனை மையப்படுத்திய அரசியல் கொதிநிலை சமகாலத்தில் சர்வதேச அரசியலில் தலைப்பு செய்தியாகத் தொடர்கிறது. பனிப்போர்க்கால இருதுருவ உலக ஒழுங்கின் வல்லாதிக்க அரசுகளாகிய அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே உக்ரைனை மையப்படுத்தி மீளவும் பனிப்போருக்கான களம் உருவாகியுள்ளது. எனினும், இப்பனிப்போர் சூழலில் முன்னர் அமெரிக்காவுக்கான படைத்தள ஆதரவை வழங்கிய நேட்டோ அதே வீச்சோடு ஆதரவு வழங்குமா என்பது சந்தேகங்களை உருவாக்கி உள்ளது. ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் தொடர்பான அமெரிக்காவின் உரையாடல்களுக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆதரவு சமிக்ஞைகளை அரைகுறையாக வெளிப்படுத்துகின்ற போதிலும், படைக்குவிப்புத் தொடர்பான உரையாடல்களிலிருந்து பின்வாங்கும் நிலையினையே அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இக்கட்டுரையும் ரஷ்யா-உக்ரைன் போர்ப்பதற்றம் சர்வதேச அரசியல் பரப்பில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.



உக்ரைன் எல்லையின் ரஷ்ய நிலப்பரப்பில் இவ்வருட ஆரம்பத்திலிருந்தே ரஷ்யா இராணுவ பிரசன்னத்தை அதிகரித்து வருகிறது. இத்தொடர் நடவடிக்கை 2022 இன் தொடக்கத்தில் முழு அளவிலான படையெடுப்புக்கான தயாரிப்பு என்று அமெரிக்க உளவுத்துறை மதிப்பிட்டுள்ளது. உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, மேற்கத்திய சக்திகள் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைத் தடுக்க தடுப்புத் தடைகளை விதிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக மேற்கு நாடுகளிடம் கோரி வருகிறார். மேலும், "எந்தவொரு பிராந்தியத்திலும் ரஷ்யாவின ஆக்கிரமிப்பு சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு சக்திவாய்ந்த தீவிரமான தடுப்புத் தடைகள் இருக்க வேண்டும். ஏனெனில் இது உக்ரைனைப் பற்றியது மட்டுமல்ல" என்று அவர் கூறியுள்ளார். இதனடிப்படையில், உக்ரைன் எல்லைக்கு அருகே ரஷ்யாவின் தொடர்ச்சியான இராணுவக் கட்டமைப்பிற்கு மத்தியில் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ரஷ்யாவை மேலும் பகைமையின் விளைவுகள் குறித்து எச்சரித்துள்ளன. இவ்வருடத்தில் ஒருமுறை நேரடியாகவும், மெய்நிகர்வழியிலும், தொலைபேசி ஊடாகவும் கலந்துரையாடியுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு இடையில் உக்ரைன் விவகாரமே முதன்மை பெறலாயிற்று. எனினும் தொடர்ச்சியாக அமெரிக்காவின் எச்சரிக்கைகளை ரஷ்யா உதாசீனம் செய்தே வருகிறது.

டிசம்பர் முதல் வாரங்களில் இடம்பெற்ற மெய்நிகர் வழியிலான இரு நாட்டுத் தலைவர்களிடையிலான சந்திப்பில் ரஷ்யா உக்ரேனை ஆக்கிரமித்தால் 'பயங்கரமான விலை' கொடுக்கப்படும் என்று பைடன், புடினை எச்சரித்தார். எனினும், நூற்றுக்கணக்கான ரஷ்ய டாங்கிகள், ஹோவிட்சர்கள், சுயமாக இயக்கப்படும் பீரங்கிகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான துருப்புக்களை முன்னோக்கி அனுப்புவது திரும்பப் பெறப்படவில்லை. ஜனாதிபதிகள் பேசிய இரண்டு நாட்களுக்குப் பிறகு, செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் இருந்து மோட்டார் பொருத்தப்பட்ட காலாட்படை பிரிவுகள் உக்ரைன் எல்லையில் இருந்து 100 கிலோமீற்றர் தொலைவில் உள்ள குர்ஸ்கிற்கு கிழக்கே உள்ள முகாமுக்கு மாற்றப்பட்டன என்று பிரிட்டனில் உள்ள உலகளாவிய திறந்த மூல உளவுத்துறை நிறுவனமான ஜேன்ஸ் தெரிவித்துள்ளது.

மேலும், உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு தொடர்பாக ரஷ்யாவிற்கு அமெரிக்காவும் நேட்டோவும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், "நட்பற்ற நடவடிக்கைகளுக்கு கடுமையாக நடந்து கொள்ள" தனது நாட்டிற்கு "எல்லா உரிமையும்" இருப்பதாக புடின் கூறியுள்ளார். அத்துடன் டிசம்பர்-17 அன்று ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட வரைவு முன்மொழிவின்படி, நேட்டோ மேலும் கிழக்கே விரிவடையாது மற்றும் உக்ரைனை இராணுவக் கூட்டணியில் சேர அனுமதிக்காது என்ற உறுதிமொழிகள் உட்பட அமெரிக்கா மற்றும் நேட்டோவிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதங்களை புடின் கோரியுள்ளார். ரஷ்யா ஒரு ஆக்கிரமிப்பு சக்தியாக பொதுவெளியில் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் முதன்மையான பிரச்சாரத்தை மேற்கொள்கின்றது. இந்நிலையில், ரஷ்யாவின் இராஜதந்திர நகர்வாய் தேசிய நலனை மையப்படுத்திய பாதுகாப்பு உத்தரவாதக் கோரிக்கை அமெரிக்க மற்றும் நேட்டோ நாடுகளை ஆக்கிரமிப்பு சக்தியாக அடையாளப்படுத்தும் களத்தை திறந்துள்ளது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து நேட்டோவின் விரிவாக்கம் காரணமான ஐரோப்பாவின் தற்போதைய பதட்டங்களை புடின் குற்றம் சாட்டியுள்ளதுடன், ரஷ்யா பதிலளிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது எனக்குறிப்பிட்டுள்ளார். எனவே, ரஷ்யாவின் இவ் இராஜதந்திர நடவடிக்கை தொடர்பில் நுணுக்கமாக அவதானிக்க வேண்டும்.

ஒன்று, ரஷ்யா ஐரோப்பிய நாடுகளைத் தனித்து கையாள ஆரம்பித்துள்ளது. உக்ரைன் விவகாரம் மற்றும் பாதுகாப்பு உத்தரவாத வரைபு தொடர்பில், டிசம்பர்-21(2021) அன்று ஜேர்மன் சான்சிலர் ஓலாப் ஸ்கோல்ஸ் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனுடன் புடின் நிலைமையை விவாதித்தார் என்று கிரெம்ளின் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. கிரெம்ளின் வெளியிட்ட அறிக்கையின் படி புடின் ரஷ்யா, "யூரேசிய விண்வெளி முழுவதும் சமமான மற்றும் பிரிக்க முடியாத பாதுகாப்பை" எதிர்பார்க்கிறது என்று புடின் கூறினார். மேலும், தொடர்ச்சியாக அமெரிக்கா மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்தி ஐரோப்பாவை நம்பிக்கைக்குரியவர்களாய் குறிப்பிட்டிருந்தார். அதாவது "அமெரிக்காவுடன் நீண்ட கால சட்டப்பூர்வமாக பிணைக்கப்பட்ட உத்தரவாதங்களை கூட நம்ப முடியாது. ஏனென்றால், அமெரிக்கா அனைத்து சர்வதேச ஒப்பந்தங்களிலிருந்தும் எளிதாக விலகுகிறது. மற்றொன்று அவர்களுக்கு ஆர்வமற்றதாகிவிடும்." என அமெரிக்காவின் போக்கை கடுமையாக சாடி யூரேசியா உறவின் தேவையை குறிப்பிட்டார். இது ஐரோப்பிய நாடுகளினை அமெரிக்கா கூட்டிலிருந்து பிளவுபடுத்தி தனித்து கையாள முனையும் உத்தியாகவே அவதானிக்கப்படுகிறது.

இரண்டு, அமெரிக்கா மற்றும் அதன் பாதுகாப்பு கூட்டாகிய நேட்டோ ரஷ்யாவிற்கு எதிராக மத்திய ஆசியாவில் குவிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் தொடர்பில் கடுமையாக குற்றம்சாட்டியுள்ளது. இதனூடாக மத்திய ஆசியா ரஷ்யாவின் தேசிய நலன்சார்ந்த பிராந்தியமாகவும், அமெரிக்காவின் உலக ஆதிக்கம் சவாலுக்கு உட்படுவதையும் ரஷ்யா சுட்டிக்காட்டுகிறது. அதாவது, மத்திய ஆசியாவில் ரஷ்யாவின் அனுமதியின்றி அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னகர்த்த முடியாது என்ற எச்சரிக்கையை முன்னகர்த்தியுள்ளது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னரான உலக ஒழுங்கில் ரஷ்யா முதன்முறையாக நேட்டோவின் மத்திய ஆசியாவில் இராணுவ குவிப்புக்களை தடுக்கும் வகையிலான முழுமையான கோரிக்கைகளை இந்த வாரம் அமெரிக்காவிடம் ஒப்படைத்துள்ளது. அதில், 1997க்குப் பிறகு அமெரிக்க கூட்டணிக்குள் நுழைந்த போலந்து, முன்னாள் சோவியத் நாடுகளான எஸ்தோனியா, லிதுவேனியா, லாட்வியா மற்றும் பால்கன் நாடுகள் உட்பட கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதியை உள்ளடக்கிய நாடுகளுக்கு நேட்டோ அனுப்பிய துருப்புக்கள் அல்லது ஆயுதங்களை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உக்ரைன், கிழக்கு ஐரோப்பா, ஜார்ஜியா போன்ற காகசஸ் நாடுகளில் அல்லது மத்திய ஆசியாவில் ரஷ்யாவின் முந்தைய ஒப்பந்தம் இல்லாமல் பயிற்சிகளை நடத்தக் கூடாது என்றும் ரஷ்யா கோரியுள்ளது. இது அமெரிக்கா வின் ஏகாதிபத்தியத்திற்கான நேரடி சவாலாகவே அமைகிறது.

மூன்று, உக்ரைனின் எல்லையில் இராணுவ பிரசன்னத்தை அதிகரித்துக்கொண்டு ரஷ்யா முன்னகர்த்தியுள்ள கோரிக்கை பனிப்போர்க்கால இராஜதந்திரங்களையே மீள காட்சிப்படுத்துகிறது. ரஷ்யாவின் கருத்துக்களும் அதனையே உறுதி செய்கிறது. எட்டு அம்ச ஒப்பந்த வரைவு ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட போது, "அதன் நலன்களைப் புறக்கணிப்பது 1962 கியூபா ஏவுகணை நெருக்கடியைப் போன்ற ஒரு இராணுவ பதிலுக்கு வழிவகுக்கும்" என்ற எச்சரிக்கையை ரஷ்யா விடுத்துள்ளது. மேலும், மாஸ்கோவிற்கான முன்னாள் அமெரிக்க தூதர் மைக்கேல் மெக்பால் நேட்டோ விரிவாக்கத்தால் வலிமைமிக்க ரஷ்யாவிற்கு அச்சுறுத்தல் இல்லை. நேட்டோ ரஷ்யாவை ஒரு போதும் தாக்கவில்லை. புடின் தனது சமீபத்திய கட்டாய இராஜதந்திரத்தை நியாயப்படுத்த இந்த அச்சுறுத்தல் என்று அழைக்கப்படுவதை மீண்டும் கண்டு

> **நூற்றுக்கணக்கான ரஷ்ய டாங்கிகள், ஹோவிட்சர்கள், சுயமாக இயக்கப்படும் பீரங்கிகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான துருப்புக்களை முன்னோக்கி அனுப்புவது திரும்பப் பெறப்படவில்லை. ஜனாதிபதிகள் பேசிய இரண்டு நாட்களுக்குப் பிறகு, செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் இருந்து மோட்டார் பொருத்தப்பட்ட காலாட்படை பிரிவுகள் உக்ரைன் எல்லையில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள குர்ஸ்கிற்கு கிழக்கே உள்ள முகாமுக்கு மாற்றப்பட்டன என்று பிரிட்டனில் உள்ள உலகளாவிய திறந்த மூல உளவுத்துறை நிறுவனமான ஜேன்ஸ் தெரிவித்துள்ளது.**

பிடித்துள்ளார். தொடர்ச்சியாக உக்ரைனில் இராணுவத் தலையீட்டை அதிகரிக்கலாம்" என்று ட்வீட் செய்துள்ளார்.

எனவே, உக்ரைன் விவகாரத்தை மையப்படுத்தி ரஷ்யா மீள தனது ஆதிக்கத்தை மத்திய ஆசியாவில் யுரேசியா பகுதியில் உறுதிப்படுத்துவதற்கான இராஜதந்திர நகர்வுகளையே முதன்மைப்படுத்தி வருகின்றது. அமெரிக்கா சீனாவிற்கு எதிரான வல்லாதிக்க போட்டியை முதன்மைப்படுத்தி சமீபத்திய இராஜதந்திர நகர்வுகளை இந்தோ-பசுபிக் பிராந்தியத்திலே அதிகரித்து வருகிறது. அத்துடன் குவாட்-01,02 எனும் வடிவங்களில் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை மையப்படுத்திய புதிய பாதுகாப்பு கூட்டுக்குள்ளையும் உருவாக்கி வருகிறது. இதனால் ஐரோப்பியநாடுகள் மற்றும் நேட்டோ கூட்டு தொடர்பான கரிசனைகள் ஒப்பீட்டளவில் குறைவடைந்து வருகிறது. ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தமும் அதனோர் சாட்சியமாகவே அமைகிறது. இவ்வாறான சூழ்நிலையை நுணுக்கமாக ஆராய்ந்துள்ள ரஷ்யா ஐரோப்பாவுடன் நெருக்கத்தை பேணி ஐரோப்பாவை அமெரிக்கக் கூட்டிலிருந்து தனித்துகையாளுவதுடன் யுரேசியாவில் மீள ரஷ்யாவின் முதன்மையை உருவாக்குவதில் உக்ரைன் விவகாரத்தை தளமாக கொண்டு நுணுக்கமான இராஜதந்திர நகர்வுகளை நகர்த்தி வருகின்றது. சீனா மற்றும் ரஷ்யாவின் நெருக்கடிக்குள் அமெரிக்கா தனது உலக வல்லரசு சக்தியை பாதுகாத்துக்கொள்ளுமா என்பது அதிக சந்தேகங்களையே உருவாக்கியுள்ளது. எனினும் அமெரிக்கா கடந்த கால வரலாற்று அனுபவங்களை கொண்டு அமெரிக்காவை எளிதில் இடைபோடுவதும் ஆரோக்கியமான மதிப்பாய்வாக அமையாது. ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்ததால் அல்லல்படும் மக்கள்

எரிவாயு தட்டுப்பாடும், பொருட்களின் விலை ஏற்றமும் அப்பாவிப் பொது மக்களின் வயிற்றில் அடித்துள்ளது. என்னதான் தலை போற பிரச்சினையாக இருந்தாலும் சாப்பாடு முக்கியம். முன்னொரு காலத்திலே வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போதுதான் பொருட்களின் விலை அதிகரிக்கும். இன்று என்ன பொருளின் விலை எப்போது அதிகரிக்கும் எனச் சொல்ல முடியாத நிலை உள்ளது. இதுவரைகாலமும் இரண்டொரு பொருட்களின் விலைதான் உயர்ந்தது. இப்போது அனைத்துப் பொருட்களின் விலையும் தறிகெட்டு உயர்ந்துள்ளது.

சமையல் எரிவாயுப் பிரச்சினை மேல்தட்டு மக்களையும் அடித்தட்டு மக்களையும் ஒரு சேரப் பாதித்துள்ளது. தட்டுப்பாடு என்றால் நிலமை சீரானதும் கிடைக்கும். சமையல் எரிவாயுவை வாங்குவதற்கு மக்கள் அச்சப்படுகிறார்கள். பெரு நகரங்களில் மாற்று வழி இல்லை. புதிதாக மண்ணெண்ணெய் அடுப்பு வாங்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். கிராமத்து மக்கள் விறகு அடுப்பை நாடத்தொடங்கி விட்டார்கள். விறகுச் சமையலும், மண்சட்டிச் சாப்பாடும் சுவையும் ஆரோக்கியமானதும் என புகழ்கிறார்கள்.

எரிவாயுத் தட்டுப்பாடு, பொருட்களின் விலை உயர்வு காரணமாக சுமார் 3,500 பேக்கரிகளும், 12 ஆயிரம் ஹோட்டல்களும் மூடப்பட்டதாக செய்தி வெளியாகி உள்ளது. ஹோட்டல்களும் பேக்கரிகளும் மூடப்பட்டால் நகரத்தில் தங்கி வேலை செய்பவர்கள் சாப்பாட்டுக்கு என்ன செய்வார்கள்? குடும்பம் இன்றி தனி ஆளாக கடைச் சாப்பாட்டை நம்பி இருப்பவர்களின் நிலை மோசமாக உள்ளது. கொரோனா மூர்க்கமாக இருந்த காலத்திலும் நகரங்களில் வேலை செய்தவர்கள் சாப்பாடு கிடைக்காமையால் தமது ஊருக்குச் சென்றனர்.

பெற்றோல், டீசல் விலையுயர்வு, பேக்கரிப் பொருட்களின் விலை உயர்வு, முட்டை, கோழி விலை உயர்வு, மீன் விலை உயர்வு, மரக்கறிவகைகள் விலை உயர்வு என காலையில் வெளியாகும் செய்திகளில் விலை உயர்வே முதலிடம் பிடிக்கிறது. பாண், பணிஸ் போன்றவையே அன்றாடம் அதிகமாக விற்பனையாகும் உணவுப் பண்டங்களாகும். அவற்றின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது. வருமானம் குறைந்த மக்கள் வாங்கும் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்தமையால் அரசின் மீது எதிர்ப்பலை ஆரம்பித்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மக்களால் அதிகம் பேசப்படுகிறது. உலகமே பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கு இலங்கை விதிவிலக்கல்ல உலகச் சந்தையில் டொலரின் பெறுமதி அதிகரித்தமை, ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை, ஏற்றுமதி, இறக்குமதி வரையறுக்கப்பட்டமை, கொரோனாத் தொற்றினால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி போன்றவையே அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்துக்குக் காரணம் என்பது அரசாங்கத்தின் வாதம். மக்களின் அன்றாடத்தேவையான பால்மா, சீனி, எரிவாயு, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை சமாளிக்க முடியாதுள்ளது. மருந்துகள், கட்டட நிர்மாணப் பொருட்கள் என்பனவற்றின் விலை அதிகரித்துள்ளது. மருந்துகளின் விலையும் அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை ஏற்றத்தால் பாடசாலை சேவை வாகனங்களின் கட்டணம் உயரப் போகிறது.

அத்தியாவசியப் பொருட்களுடன் சுமார் ஆயிரம் கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். டொலர் பற்றாக்குறையால் கொள்கலன்களை துறைமுகத்துக்கு வெளியே கொண்டு வர முடியாத நிலை உள்ளது. கொள்கலன்களுக்குச் செலுத்த வேண்டிய டொலரைப் பெறுவதற்காக உயர் மட்டக் குழுவுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இந்த நிலை நீடிக்குமானால் ஜனவரியில் அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கலாம்.

இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலா மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது கொரோனாக் காலகட்டம் என்பதால், சுற்றுலாத்துறையின் வருமான வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையில் ரூபாய் மதிப்பும் தொடர்ந்து குறைந்துகொண்டே வருகிறது. தொடர்ந்து இலங்கையின் அந்நியச் செலாவணியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருட்கள் இறக்குமதி குறைந்ததன் காரணமாக உணவுப் பொருட்களின் விலை கிடுகிடுவென அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கித் தரவுகளின் படி 2019 ஆம் ஆண்டு இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் டொலராக இருந்தது. கடந்த ஜூலை மாத நிலையில் இந்தக் கையிருப்பு வெறும் 2.8 பில்லியன் டொலர் என்ற அளவுக்குக் குறைந்துள்ளது. இந்த ஆண்டில் மட்டும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 7.5 சதவிகிதம் என்ற அளவுக்கு குறைந்துள்ளது. குறைந்து வரும் இலங்கை ரூபாயின் மதிப்பை அதிகரிக்க, இலங்கை மத்திய வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தியதுடன், வராக்கடனை வசூல் செய்வதில் தீவிரம் காட்டிவருகிறது. இந்த ஆண்டுத் தொடக்கத்திலேயே குறைந்து வரும் அந்நியச் செலாவணி கையிருப்பைச் சேமிக்க, பல்வேறு பொருட்களை இறக்குமதி செய்யத் தடை விதித்திருந்தது. இருந்தபோதிலும் நிலைமை சீராகவில்லை.

பாஸ்போட் பெறுபவர்களின் தொகை சடுதியாக அதிகரித்துள்ளது. வெளிநட்டில் வேலை பெறுவதற்காகவும், வெளிநாட்டில் குடியேறுவதற்காகவும் பாஸ் போட் பெறுபவர்களின் தொகை அதிகரித்துள்ளது. பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்கவும், பொருட்களின் விலையை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கவும் உரிய நடவடிக்கைக்கு அரசாங்கம் முன்னுரிமை வேண்டும். ■

# கடன் சுமையால் தடுமாறும் இலங்கை

“கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்” கம்பன் தந்த அற்புதமான கவிவரி. கடன் வாங்கியவன் எப்படி துயருறுவான் என்பதைச் சொல்லும் அற்புதமான வரி அது. உலகில் உள்ள பல நாடுகள் கூச்சம் எதுவும் இல்லாமல் கடன் வாங்குகின்றன. வாங்கிய கடனைக் கட்டுவதற்கு வழி தெரியாது வட்டியைக் கட்டுவதற்கு இன்னொரு தரப்பிடம் இருந்து கடன் வாங்குகின்றன. கடன் சுமை அனைத்தும் மக்களின் தலையில் சுமத்தப்பட்டிருக்கின்றன.

யுத்தத்தால் சீரழிந்த இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கு உலக நாடுகள் முன்வந்தன. சீனாவும், இந்தியாவும் போட்டி போட்டு உதவி செய்தன. யுத்தம் முடிவுற்றதால் அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட்டது. நாடு தன்னிறைவு பெறும் என எதிர்பார்த்திருந்த வேளையில் கடன் சுமை மக்களின் தலையில் இடியாக இறங்கியது. கடன் சுமை என்ற அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கிடையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கிடுகிடுவென அதிகரித்தது.

விலை உயர்வை எப்படிச் சமாளிக்கலாம்? என, சிந்தித்துக் கொண்டிருக்கையில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இப்படி ஒரு இக்கட்டான நிலை வரும் என அப்பாவி மக்கள் எதிர்பார்க்கவில்லை.

மொத்தத் தேசிய உற்பத்தி - கடன் விகிதம் என்பது 86% ஆக உள்ளது. அடுத்த ஆண்டில் இது 100% ஆக அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகளவில் காணப்படுகின்றன. இலங்கையின், உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக, அரசாங்கம் பெருமளவு நிதியை கடனாகப் பெற்றிருந்தது. ஆனாலும், முதலீடுகளை ஊக்குவிக்க முடியாமல் போனதுடன், ஏற்றுமதிக்கான கேள்விகள் எதிர்பார்த்ததுபோல கிடைக்கவில்லை. தற்போது நிலவும் கொரோனா வைரஸ் பரவலுடனான சூழலில் முன்னேற்றம் ஏற்படாவிடின், 2021 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகைகளைச் செலுத்துவது சவால்கள் நிறைந்ததாக அமையும். அத்துடன், இலங்கை ரூபாவின் பெறுமதியை, தற்போதைய மட்டத்தில் தொடர்ந்து பேணுவதும் சவாலான விடயமாக இருக்கும்.

ரமணி




இலங்கை மிகவும் பாரதூரமான கடன் நெருக்கடிக்குள் சிக்குண்டதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்தும் நடவடிக்கைக்கு முன்னுரிமை கொடுத்ததே முக்கிய காரணமாகும். பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தால் இவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டிருக்காது.

64.9 பில்லியன் டொலர் கடன் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் 8 பில்லியன் டொலர் சீனாவிற்குச் செலுத்தவேண்டும். நாட்டின் மொத்த தேசிய வருமானத்துடன் கடன் வீதத்தை ஒப்பிட்டால் அது 75 வீதமாகக் காணப்படுகின்றது. அரசாங்கத்தின் வருவாயில் 95.4 வீதம் கடனைச் செலுத்துவதற்காகவே செலவாகின்றது. கடன் நிலை என்பது தொடர்ந்து தாங்க முடியாதவொன்று. ஆனால், இதனை விட வேறு விடயங்களும் உள்ளன. முன்னைய அரசாங்கம் வழமையான வழிமுறைகளுக் கூடாக கடன்களைப் பெற்றதிற்கு அப்பால், அரச நிறுவனங்களை தனது சார்பில் கடன்களை பெறுமாறு கேட்டுக்கொண்டமையும் தற்போது தெரியவந்துள்ளது. இதன் முழுமையான அளவு இன்னமும் தெரியவராத அதேவேளை, தற்போது வரையான மதிப்பீடுகளின் படி 9.5 பில்லியன் டொலர் கடன் இந்த வழியில் பெறப்பட்டிருக்கலாம் என நம்ப முடிகின்றது. இவை எவையும் நிதியமைச்சின் ஆவணங்களில் காணப்படவில்லை. “இலங்கையின் கடன் நிலவரம் குறித்த துல்லியமான புள்ளிவிபரங்கள் எங்களிடம் இல்லை” என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

4.5 பில்லியன் டொலரை இலங்கை செலுத்த வேண்டியுள்ளது, அடுத்த வருடம் 4 பில்லியன் டொலர் கொடுக்க வேண்டும். இதனை எவ்வாறு செலுத்துவது என இன்னமும் திட்டமிடவில்லை.

சில நிபந்தனைகளுடன் கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் முன் வந்துள்ளது. பழைய கடன் அப் படியே இருக்க புதிதாகக் கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் தயாராக இருக்கிறது.

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய வியாபாரிகள் தயாராக இருக்கிறார்கள். இறக்குமதியாகும் பொருட்களுக்கு கொடுப்பதற்குரிய அந்நியச்செலாவ வணியை விடுவிக்க வங்கிகள் தயாராக இல்லை.

இந்தியாவிடம் இருந்து 11 சதவீத கடனும், சீனாவிடமிருந்து 8 சதவீத கடனும் இலங்கைக்குக் கிடைத்திருக்கிறது. மிகுதியான கடன்கள் வேறு வகைகளில் பெறப்படுகின்றன. இந்தக் கடன்களை மீளச் செலுத்துவதற்குக் கடன் பெற வேண்டிய நிலை உள்ளது. நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயம் கடனுக்கானது என்றே கருதப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னைய அரசாங்கம் செய்த கடன் பெறல் நிபந்தனைகளை இன்றைய அரசாங்கம் கைவிட்டுள்ளது. தேயிலையைக் கொடுத்து ஈரானிடம் எரிபொருளை இலங்கை வாங்கியது. தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது, உரப்பிரச்சினை மிக முக்கிய பிரச்சினையாக உள்ளது. இரசாயன உரம் பாவிப்பதை அரசாங்கம் விரும்பவில்லை. அதனை உடனடியாக அமுல்படுத்தியதால் தேயிலை மட்டுமல்லாது ஏனைய பயிர்ச் செய்கைகளும் பாதிக் கப்பட்டுள்ளன. உரமாற்றத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அமுல்படுத்தியிருந்தால் இந்த நிலமை ஏற்பட்டிருக்காது. ■

# சரிந்துகொண்டிருக்கும் ஒரு சரித்திரம்

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்வி சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 2

## கல்வியில் புகுந்த இன அரசியல்

இன்றைய தலைமுறையில் உள்ள பல இளைஞர்களுக்கு எங்கள் இன்றைய கல்விநிலையின் தொடர்ச்சியான சரிவுகளும் அவ்வப்போது நாங்கள் ஈட்டும் சாதனைகளும் மட்டுமே தெரியும். ஆனால், இற்றைக்கு 60 வருடங்களுக்கு முன்னர் எங்களுடைய சமூகம் கல்வியில் எவ்வாறானதொரு சிம்மாசனத்தில் உட்கார்ந்து இருந்தது என்பதுவும் அந்த சிம்மாசனம் எவ்வாறு இன அரசியலால் சரிக்கப்பட்டது என்பதுவும் இந்தக் கட்டுரைத்தொடரின் ஆழமானபார்வைக்கும் தொடக்கத்திற்கும் மிக முக்கியமானதாகும். அந்தவகையில் சில பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரையில் கிடைத்த தரவுகளையும் பாதிப்புகளின் நேரடி சாட்சியங்களின் கருத்துகளையும் ஆதாரமாகக் கொண்டு இந்த அத்தியாயம் வரையப்படுகிறது.

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்துக்கு முன்பிருந்தே கல்வித்துறையில் அதி உச்ச பெறுபேறுகளை தமிழ் பேசும் மாணவர்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகக் கொண்டிருந்தார்கள். இதற்கு எமது முன்னோர்கள் பாடசாலைகளை தோற்றுவித்து கல்வி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டமை ஒரு முக்கிய காரணமாகும். பல பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலக் கல்வி இருந்தமையால் தென்பகுதியில் இருந்தும் சகோதர இனமக்கள் இலங்கையின் வடபகுதியின் தமிழ்ப்பாடசாலைகளில் கற்ற வரலாறுகள் பல உண்டு.

1970 ஆம் ஆண்டுவரை இந்த வெற்றிச் சரித்திரங்கள் தொடர்ந்தன.

| 1970-1971 | Sinhalese | | Tamil | | Moor/Malay | | Others | | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | No. | % | No. | % | No. | % | No. | % | |
| Phy. Science, Bio Sc. & Architecture | 307 | 68.0 | 129 | 28.6 | 8 | 1.8 | 7 | 1.6 | 451 |
| Engineering | 85 | 55.9 | 62 | 40.8 | 3 | 2.0 | 2 | 1.3 | 152 |
| Medicine | 132 | 53.5 | 101 | 40.9 | 6 | 2.4 | 8 | 3.2 | 247 |
| Dental Surgery | 17 | 41.5 | 23 | 56.1 | 1 | 2.4 | - | | 41 |
| Agriculture | 23 | 53.5 | 17 | 39.5 | 2 | 4.7 | 1 | 2.3 | 43 |
| Vet. Science | 15 | 71.4 | 5 | 23.8 | 1 | 4.8 | - | | 21 |
| Total Science Group | 579 | 60.6 | 337 | 35.3 | 21 | 2.2 | 18 | 1.9 | 955 |
| Arts Oriented Studies (excluding Law) | 2200 | 89.7 | 171 | 7.0 | 81 | 3.3 | 2 | - | 2454 |
| Law | 26 | 54.2 | 16 | 33.4 | 5 | 10.4 | 1 | 2.1 | 48 |
| Total Arts Group | 2226 | 88.9 | 187 | 7.6 | 86 | 3.4 | 3 | 0.1 | 2502 |
| Grand Total | 2805 | 81.1 | 524 | 15.2 | 107 | 3.1 | 21 | 0.6 | 3457 |

1971 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இன நீதியான தரப்படுத்தல் முறைமையால் தமிழ் பேசும் மாணவர்களுடைய பல்கலைக்கழக அனுமதிகள் நியாயமற்ற முறையில் சூறையாடப்பட்டன.

இந்த இன ரீதியான தரப்படுத்தல் என்பது இன்றுள்ள விகிதாசாரத் தரப்படுத்தல் முறையிலிருந்து முற்றிலுமாக மாறுபட்ட முறை என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

அதாவது, பாடத்திட்டங்களும் பரீட்சைகளும் ஒன்றாக இருக்க சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு மிகக் குறைவான வெட்டுப்புள்ளி வழங்கப்பட்டு அதிக அளவிலான சிங்கள மொழி மூல மாணவர்கள் உள்வாங்கப்பட தமிழ் மொழி மூலம் தோற்றுபவர்களுக்கு அதிக வெட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டு அவர்களின் பல்கலைக்கழக அனுமதிகள் பறிக்கப்பட்டிருந்தன.

TABLE – I

| Faculty | 1969 | 1970 Dec. | 1972 June | 1973 Feb. | 1974 May |
|---|---|---|---|---|---|
| | % | % | % | % | % |
| Medicine | 50.0 | 43.3 | 41.4 | 38.0 | 27.3 |
| Dentistry | 42.1 | 57.5 | 55.3 | 49.0 | 27.5 |
| Agriculture | 51.4 | 42.5 | 41.4 | 52.3 | 15.3 |
| Bio-Science | 70.6 | 25.0 | 37.0 | 13.6 | No detailed information |
| Biology | – | – | – | 15.1 | 13.0 |
| Physical Science | 28.4 | 29.6 | 30.1 | 35.0 | 34.9 |
| Architecture | – | – | – | 16.7 | 23.7 |
| Engineering | 48.3 | 42.2 | 36.3 | 26.6 | 28.5 |

1969 இல் இருந்து 1974 வரை தமிழ் பேசும் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியின் சதவீதம் எவ்வாறு மாறியுள்ளது என்பதைத் தெளிவாக அறியலாம். இது சதவிகிதம் தானே, எண்ணிக்கை அதிகரிக்கும் போது அல்லது இயல்பாக அதிக சிங்கள மாணவர்கள் உள்வாங்கப்படும் போது சதவீதம் மாற்றமடைவது வழமை என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், துறை ரீதியாக 1971 இற்கு முன்னர் எண்ணிக்கையில் எத்தனை மாணவர்கள் இரண்டு மொழிகளிலும் உள்வாங்கப்பட்டிருந்தார்கள் அதில் எவ்வாறு மாற்றங்கள் நடந்து தமிழ் பேசும் மாணவர்களின் கல்விச் சரித்திரங்கள் கல்வியில் புகுந்த இன அரசியலால் சரிக்கப்பட்டு இன்றுவரை மேலும் மேலும் பல்வேறு காரணிகளால் சரிந்து கொண்டிருக்கிறது என்பதை அனைவரும் புரிந்து கொள்ளலாம்.

இந்த இடத்தில் இன்னுமொரு மிக முக்கியமான தரவையும் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

EMPLOYMENT OF TAMILS IN GOVERNMENT SERVICES

| | 1956 % | 1965 % | 1970 % |
|---|---|---|---|
| 1. Ceylon Administrative Services | 30 | 20 | 5 |
| 2. Clerical Service (including Postal, Railway, Hospital and Customs) | 50 | 30 | 5 |
| 3. Professions (Engineers, Doctors and Lecturers) | 60 | 30 | 10 |
| 4. Armed Forces | 40 | 20 | 1 |
| 5. Labour Forces | 40 | 20 | 5 |

பல கால கல்விச் சரித்திரங்களின் விளைவாக இலங்கை அரச நிர்வாகத் துறையில் தமிழ் பேசும் மக்களுடைய வகிபாகம் கிட்டத்தட்ட எவ்வாறான சதவிதத்தில் இருந்தது என்பதையும் 1956 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள சட்டத்தின் பாதிப்புகள், கல்வியில் புகுந்த அரசியலின் விளைவுகளால் காலப்போக்கில் அதாவது, 1965, 1970 காலப்பகுதியில் அந்த வகிபாக சதவீதங்கள் எவ்வாறு மாறிப்போயின என்பதையும் அட்டவணையில் இணைத்துள்ளேன். ஆக 1070 வரை அரச நிர்வாகத்துறையில் இன அரசியலின் பாதிப்புகளின் தொடர்ச்சியாக 1971 இல் கல்வியில் குறிப்பாக பல்கலைக்கழக அனுமதியில் கொண்டுவரப்பட்ட இன ரீதியாக வெட்டுப்புள்ளி, தமிழ் பேசும் மாணவர்களின் வெற்றி சரித்திரங்களை மிகப்பெரிய அளவில் சரிக்க ஆரம்பித்தது.

இந்தப் பாதிப்புகளின் பிரதிபலிப்புகளால் பல தகுதி மிக்க மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல முடியாமலும், பிற வேலை வாய்ப்புகளில் உள்வாங்க முடியாமலும் வீதியில் விடப்பட்டார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட பலரின் கண்ணீர்க் கதைகளை கேட்டிருக்கிறேன்.

சிலர் இருக்கின்ற சொத்துகளை விற்று கல்வியைத் தேடி வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்ல ஆரம்பித்த காலமும் அதுதான்.

ஆனால், பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாட்டுக்கு பணத்தைக் கொண்டு செல்வதிலும் கட்டுப்பாடுகள் வர வெளிநாடு சென்று கற்கும் வாய்ப்பும் பறிபோனது. வெறுப்புற்று விரக்தியுற்ற பலர் வீதியில் இறங்கியதன் விளைவுகளும் 30 வருட உள்நாட்டுப் போரின் விளைவுகளும் நாம் யாவரும் அறிந்ததே.

பல்வேறு தரப்புகளும் இந்த இனரீதியான வெட்டுப்புள்ளிக்கு எதிராகப் போராட ஆரம்பிக்க, சில வருடங்களின் பின்னர் மாவட்ட ரீதியான தரப்படுத்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மாவட்ட ரீதியாக எல்லா மாவட்டங்களில் இருந்தும் மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். ஆனால் ஆரம்பத்தில் இந்த முறைகூட அதிக சிங்கள மொழி மாணவர்கள் உள்வாங்கப்பட உதவியதே அன்றி ஏற்கனவே இருந்த அளவு தமிழ் மாணவர்களின் சதவீதம் எட்டிப் பிடிக்க முடியாத அளவு தள்ளிப்போக ஆரம்பித்தது. 1975 இன் மாவட்ட ரீதியான தரவுகளை இணைத்துள்ளேன். சில மாவட்டங்களில் சில பிரிவுகளுக்கு எந்த தமிழ் மாணவர்களும் உள்வாங்கப்பட முடியவில்லை. அத்தோடு 1981- 1983 வரையான காலப்பகுதியின் தமிழ் பேசும் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி சார்ந்த தரவுகளையும் உங்கள் சுய கற்றலுக்கும் புரிந்து ணர்வுக்கும் இணைத்துள்ளேன்.

1983 இனக்கலவரத்தின் பின் தமிழ் மாணவர்களின் கல்வியின் சரிவுகள், சரிவுகளுக்கிடையிலான பல சாதனைகளும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன.

இன்று இருக்கும் தரப்படுத்தல் முறையானது மெரிட்(Merit), மாவட்ட ரீதியான தரப்படுத்தல் (Quota) இணைந்த ஒரு தரப்படுத்தல் முறையாகும். போரினால் சிக்கிப் பல்வேறு சமூகப் பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கும் இன்றைய சமூகத்திற்கு இன்றைய தரப்படுத்தல் முறையை ஏதோ ஆறுதல் அளிப்பது போல தோன்றினாலும் இது தமிழ் பேசும் மாணவர்களின்

(18 ஆம் பக்கம் பார்க்க...)

**“1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்துக்கு முன்பிருந்தே கல்வித்துறையின் அதியுச்ச பெறுபேறுகளை தமிழ் பேசும் மாணவர்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகக் கொண்டிருந்தார்கள். இதற்கு எமது முன்னோர்கள் பாடசாலைகளை தோற்றுவித்து கல்வி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டமை ஒரு முக்கிய காரணமாகும். பல பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலக் கல்வி இருந்தமையால் தென்பகுதியில் இருந்தும் சகோதர இனமக்கள் இலங்கையின் வடபகுதியின் தமிழ்ப்பாடசாலைகளில் கற்ற வரலாறுகள் பல உண்டு.”**

The different qualifying marks fixed in 1971, for the Sinhala and Tamil students to enter the University were as follows[11] :

| | Sinhale Students | Tamil Students |
|---|---|---|
| Medicine and Dentistry | 229 | 250 |
| Physical Science | 183 | 204 |
| Bio-Science | 175 | 184 |
| Engineering | 227 | 250 |
| Veterinary Science | 181 | 206 |
| Architecture | 180 | 194 |

# பாதுகாப்புத் தரப்புக்கு பாடம் சொல்லும் பாதுகாவலர்!

அவதானி

**“சாதாரண மக்களிடம் இருந்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்படுவது ஒரு தலைவரின் பொறுப்பாகும். இடையிடையே இடையூறுகள், தடைகள் ஏற்பட்டாலும் மக்களுக்கான நமது பணியில் கவனம் செலுத்த வேண்டும். பின்னடைவுகள் என்பன ஒரு பயணத்தின் ஒரு பகுதியே ஆகும். அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு துணிச்சலான தீர்மானங்களை எடுக்கக் கூடியவராகத் தலைவர் ஒருவர் இருக்க வேண்டும்.”**

“ஓர் இராணுவ அதிகாரியின் வாழ்க்கையில், ஒழுக்கம் என்பது மிக உயர்ந்த நற்பண்பாகும். நம்பிக்கை, தன்னம்பிக்கை மற்றும் குழுவில் உள்ள ஏனையவர்கள் மீதான நம்பிக்கையே ஒரு தலைவரது வெற்றியின் ஆன்மாவாகக் கருதப்படுகிறது. எளிமையான பணிகளில்கூட அதிக கவனத்தைச் செலுத்துதல் மற்றும் கூட்டாகச் செயற்படும் திறனை வளர்த்துக்கொள்ளல் என்பன இராணுவத்தினருக்கான பண்புகளாகும்.

ஒருவர் எவ்வளவு திறமையானவராக இருந்தாலும், மற்றவர்களின் ஒத்துழைப்பின்றி வெற்றிபெற முடியாது.

நீங்கள் ஒரு தலைவராக உங்கள் பயணத்தைத் தொடங்கும்போது, உங்களுக்குக் கீழ் உள்ள வீரர்கள் சாதாரண மனிதர்களே. அவர்கள் சூப்பர் வீரர்கள் அல்லர் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.”

இவ்வாறு சொல்லியிருப்பவர், இலங்கை தேசத்தின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ.

அண்மையில் தியத்தலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற 96 ஆவது விடுகை அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அவ்வாறு கூறினார்.

இலங்கையின் அதிமுக்கிய பாதுகாப்புத் தரப்புக்கு அவர் ஆற்றிய அவ்வுரையில் பொதிந்திருக்கும் உண்மைகளை நாம் கவனத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது.



ஆயுதப்படைகளுக்கு மற்றும் ஒரு பெயர்தான் பாதுகாப்பு படை. அதாவது, நாட்டையும் மக்களையும் பாதுகாக்க எத்தகைய தியாகங்களையும் செய்ய முன்வரல் வேண்டும். அதனாலும் அவர்களை இராணுவ வீரர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

ஜனாதிபதியின் கூற்றில் உறை பொருளாகவும் மறைபொருளாகவும் இழையோடியிருக்கும் வரலாற்றையும் நாம் திரும்பிப்பார்க்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.





1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மக்கள் விடுதலை முன்னணி தொடங்கிய ஆயுதக் கிளர்ச்சியின்போது, புனித நகரமான கதிர்காமத்தில் இராணுவத்தைச் சேர்ந்தவர்களினால் கதறக்கதற இழுத்துச்செல்லப்பட்டு, மானபங்கப்படுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட பிரேமாவதி மனம்பேரி இப்போது நினைவுக்கு வருகிறார்.

இலங்கையில் கோணேஸ்வரி, கிருஷாந்தி உட்பட பல பெண்கள் ஆயுதப்படையினரால் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதற்கான வரலாறுகள் இருக்கின்றன. அந்த வரலாற்றின் முதல் அத்தியாயத்தில் இருப்பவள் கதிர்காமம் பிரேமாவதி மனம்பேரி.

கைதடியில் 1996 செப்டெம்பர் மாதம் கொல்லப்பட்டு, செம்மணியில் புதைக்கப்பட்ட கல்லூரி மாணவி செல்வி கிருஷாந்தி குமாரசாமி, அவளது அம்மா இராசம்மா குமாரசாமி என்ற பாடசாலை ஆசிரியை, கிருஷாந்தியின் சகோதரன் பிரணவன், குடும்ப உறவினர் கிருபாமூர்த்தி ஆகியோரும் நினைவுக்கு வருகிறார்கள்.

2000 ஆம் ஆண்டு, நீடித்திருந்த போர்க்காலத்தின்போது தென்மராட்சியில் தமது வீடுகளை விட்டு வெளியேறிய சிலர் தமது வீடுகளை மீளச் சென்று பார்ப்பதற்காகச் சென்றனர். அவர்களின் வீடுகள் மிருசுவிலில் அமைந்திருந்தன. அவ்வாறு சென்றவர்களை, அங்கிருந்த இராணுவத்தினர் கைதுசெய்தனர். இச்சம்பவம் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி நடந்திருப்பதாக அறியப்படுகிறது. அத்துடன் கைதானவர்கள் எட்டுப் பேரும் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இவர்கள் உடுப்பிட்டிக்கு முன்னர் இடம்பெயர்ந்து சென்றவர்கள். தாம் விட்டு வந்த உடைமைகளையும் வீடுகளையும் பார்க்கச்சென்றபோது, அங்கே அவர்கள் கண்ட காட்சியினால் அதிர்ச்சியடைந்துள்ளனர். அந்தப்பகுதியில் ஒரு இளம்பெண்ணின் சடலம் அரைகுறையாக புதையுண்டிருந்ததைக் கண்டுவிட்டனர்.

இதுபற்றி, தமது குடும்ப உறவுகளுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றனர். மறுநாள் குறித்த சடலத்தை அடையாளம் காண்பதற்காகச் சென்றவர்களை அங்கிருந்த இராணுவம் பிடித்துக்கொண்டது. அவ்வாறு பிடிக்கப்பட்டவர்களில் ஒருவர் காயங்களுடன் தப்பி வந்துள்ளார். ஏனையோர் எட்டுப் பேரும் படுகொலை செய்யப்பட்டு அப் பகுதியிலுள்ள வீட்டு மலசலகூடக் குழியினுள் வீசப்பட்டிருந்தனர்.

பலத்த காயங்களுடன் தப்பிவந்த ஒருவர் தமது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்ததை அடுத்தே இக் கொலைகள் பற்றிய விபரங்கள் வெளியே தெரிய வந்தது.

அவர் வழங்கிய தகவலினால், படுகொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் மலசலகூட குழியிலிருந்து பின்னர் காவல்துறையினரால் மீட்கப்பட்டன. முதலில் காணப்பட்ட இளம்பெண்ணின் சடலத்தை நீதிமன்றத்தினாலும் பொலிஸாரினாலும் இறுதிவரையில் கண்டுபிடிக்க முடியாமல் போய் விட்டது.

யார் அந்த இளம் பெண்...? இன்னமும் மர்மம் தொடருகிறது!

2000 ஆம் ஆண்டு நடந்த இந்த படுகொலைச் சம்பவத்தின் தொடர்கதை, விசாரணை என்ற பெயரில் சாவகச்சேரி - அநுராதபுரம் - கொழும்பு என பயணித்து, இறுதியில் மரண தண்டனை தீர்ப்புடன் முடிவடைந்திருந்தது. இந்தத் தீர்ப்பினை உறுதிசெய்வதற்கே 17 ஆண்டுகள் ஓடியிருந்தன.

குறிப்பிட்ட மரணதண்டனைக் கைதி இராணுவ அதிகாரி சுனில் ரத்னாயக்கவிற்கு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, தனது விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளமையால், மனித உரிமை ஆர்வலர்களிடத்திலும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச மன்னிப்பு சபை, மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடத்திலும் இந்த விவகாரம் பேசு பொருளாகியிருக்கிறது.

இந்த வரலாற்றுப் பின்னணிகளுடன்தான் அதே ஜனாதிபதியின் மேற்கண்ட உரையை அவதானிக்க வேண்டியிருக்கிறது. அத்துடன் அவர் மேலும் சொன்ன கருத்தையும் கவனிக்கவேண்டியிருக்கிறது.

“சாதாரண மக்களிடம் இருந்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்படுவது ஒரு தலைவரின் பொறுப்பாகும். இடையிடையே இடையூறுகள், தடைகள் ஏற்பட்டாலும் மக்களுக்கான நமது பணியில் கவனம் செலுத்த வேண்டும். பின்னடைவுகள் என்பன ஒரு பயணத்தின் ஒரு பகுதியே ஆகும். அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு துணிச்சலான தீர்மானங்களை எடுக்கக் கூடியவராகத் தலைவர் ஒருவர் இருக்க வேண்டும்.”

ஜனாதிபதி அவர்கள் கூறுவதுபோன்று துணிச்சலான தீர்மானம்தானா, ஒரு மரண தண்டனைக் கைதிக்கு பொது மன்னிப்பு வழங்குவதும் என்றும் கேட்கத் தோன்றுகின்றது.

கடந்த காலங்களில் இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்கள், மானபங்கப்படுத்தப்பட்ட பெண்கள் அனைவரும் அப்பாவிப்பொதுமக்களே.

அதிலும் மானபங்கப்படுத்துவதற்கு அவர்களுக்கு தேவைப்பட்டது பெண்கள்தான். அதில் சிங்களம் - தமிழ் என்ற பாகுபாடுகள் இல்லை.

அதனால்தான் பிரேமாவதி மனம்பேரியையும் கிருஷாந்தியையும் கோணேஸ்வரியையும் பற்றி நாம் இன்னமும் நினைத்துக்கொண்டிருக்கின்றோம்.

“ஓர் இராணுவ அதிகாரியின் வாழ்க்கையில், ஒழுக்கம் என்பது மிக உயர்ந்த நற்பண்பாகும். என்ற ஜனாதிபதியின் கூற்று, சமகாலத்தில் அவருக்கு அணிவகுப்பு மரியாதை செலுத்தும் இராணுவத்தினர் சிந்தனையில் ஆழப்புதைய வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணையும் தனது தாயாக, மகளாக, சகோதரியாக பார்க்கவேண்டும் என்பதையும் இந்த வரிகளிலிருந்து ஜனாதிபதி சொல்வதன் உறை பொருளையும் பாதுகாப்புத் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்.

இல்லையேல் சாத்தான் வேதம் ஓதும் செயலுக்குத்தான் இத்தகைய உரைகளை ஒப்பிட முடியும். ■

பிதாமகன்

ரேலோவின் ஏற்பாட்டில் தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைந்த கலந்துரையாடலில் புதிதாக ஏதாவது பேசப்படும் என்றால் மீண்டும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக்கொண்ட சமஷ்டி தீர்வும் அதிகார பரவலாக்கம் பற்றியே அனைவரும் குரல் கொடுத்துள்ளனர். 1987 ஆம் ஆண்டு, இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறையால் இந்த நாட்டின் தமிழ் மக்கள் என்ன நன்மைகளை இதுவரையிலும் பெற்றிருக்கின்றார்கள் என்று ஆராய்ந்து பார்த்தல் மிக முக்கியம்.

இந்த சட்டத்தின் பிரதான அம்சமான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இல்லாது காற்று போன பலூன் போன்ற மாகாண சபை முறை 30 வருடங்களுக்கும் மேல் அமுலில் இருந்து வருகின்றது. முதலமைச்சர் ஏடாகூடமாக ஏதாவது செய்து விடுவதைத் தடுக்க ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியாக முதலமைச்சரை விட அதிகாரமிக்க ஆளுநர் அங்கு இருக்கிறார். 13 ஐ முழுமையாக அமுல்படுத்த இந்தியாவின் தலையீடு அவசியம் என்று காலங்காலமாகத்தான் இந்த தமிழ்ப்பிரதிநிதிகள் மட்டுமே கத்தி வருகின்றனர்.

அதற்குக் காரணம் 87 இல் இருந்தது போன்று இருதரப்பிலும் மிதவாத கொள்கைகள் கொண்ட இராஜதந்திரிகள் இப்போது குறைவு. ஜனநாயக பண்புகளுடன் இந்திய தேசத்தில் பலர் இருந்தாலும் கூட



# 13 ஐ மட்டும் தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கும் தமிழ்க்கட்சிகள்

## வடக்கு – கிழக்கு மட்டுமின்றி மலையகத்துக்கும் எந்தப் பயனுமில்லை

> **ஜனாதிபதியே பௌத்த சிங்கள கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரே நாடு ஒரே சட்டம் என்று முழங்குகையில் அவருக்கு தூபம் போடும் பணியைத் தான் அருகிலுள்ளவர்களும் செய்வர். பண்டாரநாயக்க கொண்டு வந்த ஒரே நாடு ஒரே மொழி என்ற அடிப்படையிலான தனி சிங்கள சட்டத்துக்கும் கோட்டாபாயவின் ஒரே நாடு ஒரே சட்டத்துக்கும் வேறுபாடுகளை காணமுடியாதுள்ளது.**

இலங்கையில் அதிகரித்துள்ள இனவாதப் போக்குக் காரணமாக பேரினவாத சிந்தனைகள் கொண்டவர்களே இப்போது அரசாங்கத்தின் பக்கம் இருக்கின்றனர்.

ஜனாதிபதியே பௌத்த சிங்கள கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்ட ஒரே நாடு ஒரே சட்டம் என்று முழங்குகையில் அவருக்கு தூபம் போடும் பணியைத் தான் அருகிலுள்ளவர்களும் செய்வர். பண்டாரநாயக்க கொண்டு வந்த ஒரே நாடு ஒரே மொழி என்ற அடிப்படையிலான தனிச் சிங்களச் சட்டத்துக்கும் கோட்டாபாயவின் ஒரே நாடு ஒரே சட்டத்துக்கும் வேறுபாடுகளைக் காண முடியாதுள்ளது.

இந்நிலையில் தற்கால சூழ்நிலைகளுக்கேற்ப அதிகாரப் பரவலாக்கம் என்றாலோ அல்லது சமஷ்டி என்று கூறினாலோ அது பேரினவாத சிந்தனை கொண்டவர்களுக்குத் தனி நாடு கோரிக்கை போன்றே உணர்வுகளை கிளறி விடுகின்றது. சிங்கள மக்களின் மனதில் துருப்பிடித்து போயிருக்கும் இந்தப் பசுமரத்தாணியை பிடுங்கும் வரை இங்கு யார் என்ன சொன்னாலும் எவரும் கேட்கப்போவதில்லை.

முதலில் தமிழ்க்கட்சிகள் தமக்கிடையே ஒரு புரிந்துணர்வையும் கூட்டையும் ஏற்படுத்துதல் அவசியம். மேற்படி ஒன்றிணைந்த கட்சிக் கலந்துரையாடலில் நாட்டின் வடக்கு - கிழக்கு மத்திய மலைநாட்டு பகுதிகளையும் மேல் மாகாணத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஈடுபட்டிருந்தன. நவம்பர் மாதம் 2 ஆம் திகதி, முதல் சந்திப்பு வடக்கிலும் பின்னர் இரண்டு சந்திப்புகள் தலைநகரிலும் இடம்பெற்றன. கலந்துரையாடலின் இறுதியில் இம்மக்களின் நிரந்தர அரசியல் தீர்வு குறித்து ஆவணமொன்றைத் தயாரித்து அதை இந்தியப் பிரதமருக்கு கையளிக்க முடிவு காணப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தச்சட்டம் மட்டுமே இம்மக்களுக்கான நிரந்தர தீர்வாக அமையாது எனத் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் இக்கூட்டத்தில் பேசியிருந்த அதே வேளை அதை முழுமையாக அமுல்படுத்துவதே இப்போதைய தேவை என்றும் வலியுறுத்தியிருந்தார்.

வடமாகாண முதலமைச்சராக இருந்த போது இந்த மாகாண சபை முறை மூலம் தன்னால் என்ன சாதிக்க முடிந்தது என்பதை பற்றி அவர் நன்றாக அறிந்திருப்பார். வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தவிர்த்து இந்திய வம்சாவழி மலையக மக்கள் செறிந்து வாழ்ந்து வரும் மத்திய, ஊவா, சப்ரகமுவ ,மேல் மாகாணங்களில் இந்த மாகாண சபை முறை மூலம் இப்பிரதேச மக்கள் என்னதான் நன்மைகளைப் பெற்றனர், அல்லது பெறப் போகின்றனர்?

ஏனென்றால் வடக்கு - கிழக்கு மக்களினதும் மலையக மக்களினதும் பிரச்சினைகள் ஒன்றுக்கொன்று தொடர்புபடாதவை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் அரசியல் பிரச்சினைகளே பிரதானமாக உள்ளன. ஆனால், மலையக மக்களுக்கு அடிப்படை பிரச்சினைகளே இன்னும் தீர்க்கப்படாமலுள்ளது. முக்கியமாக 200 வருட காலமாக இவர்களுக்கு காணி உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. 6 தலைமுறைகளை கடந்து வாழ்ந்து வரும் இவர்களுக்கு காணி உரித்து என ஒன்றில்லை. மலையகத்தின் இரண்டு கட்சிகளையும் மேல் மாகாணத்தில் மட்டும் இயங்கும் தனது கட்சியையும் சேர்த்து தமிழ் முற்போக்குக்கூட்டணி என்ற அரசியல் கட்சியை பதிவு செய்து அதற்குத் தலைவராக விளங்கும் மனோ கணேசன் உணர்ச்சி வசப்பட்டு அறிக்கை விடும் அரசியல்வாதியாகவே இருக்கின்றாரே ஒழிய யாதார்த்த அரசியலை அவரிடத்தே காணமுடியவில்லை.

13 ஐ முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் மனதை வெல்லுங்கள் என்று அரசாங்கத்துக்குக் கோரிக்கை விடுக்கிறார் அவர். அப்படி அமுல்படுத்தினால் மலையக மக்களுக்கு உடனடியாகக் காணி உரிமை கிடைத்து விடுமா? பெருந்தோட்ட காணிகளை நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் வாங்கியிருக்கும் பெருந்தோட்ட கம்பனிகள் ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளுமா அல்லது அதற்கு அரசாங்கம்தான் உடன்படுமா? கொழும்பை தளமாகக்கொண்டியங்கும் அவரது கட்சி இந்த 13 ஆல் பெறப்போவது என்ன?

தன்னை முழு தீவுக்குமான அரசியல்வாதியென்று அவர் மட்டும்தான் கூறிக்கொள்கின்றார். ஆனால், கட்சிகளின் கலந்துரையாடலின் போது தனித்துவமான விடயங்களை முன்னிறுத்தாது கூட்டத்தோடு சேர்ந்து கைகளை உயர்த்தும் அரசியல்வாதியாகவே அவர் விளங்குகிறார். 13 ஆவது திருத்தச்சட்டம் என்பது வடக்கு - கிழக்கை அடிப்படையாகக்கொண்டு அக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்டது. இப்போது காலமும் காட்சிகளும் மாறி விட்டன. மஹிந்த தனது ஆட்சி காலத்தில் கூறியதை போன்று 13 பிளஸ் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்கில் இன்னும் பழமைவாதத்தில் ஊறிப்போன தமிழ்க்கட்சிகள் சமஷ்டியையும் அதிகார பரவலாக்கத்தையும் போட்டு குழப்பிக் கொண்டிருக்கின்றன. இவை இவ்வாறான பிரச்சினைகளை தாண்டி வந்த உலகின் ஏனைய நாடுகளை பற்றி ஆராய வேண்டும். இலங்கை தமிழர்களுக்கு என்ன பிரச்சினை என்பது குறித்து இனிதான் இந்தியா அறிந்து கொள்ள வேண்டுமா? அதற்கு இவர்கள் கொடுக்கும் ஆவணம்தான் விளக்கம் தரப்போகின்றதா? அந்த தீர்வை தர நினைத்தால் இந்தியா எப்போதோ அதை செய்திருக்கலாம். ஆசிய உபகண்டத்தில் சீனாவின் எழுச்சி, இலங்கையின் மீதான அதன் தலையீடு பற்றியெல்லாம் யோசிக்காது 1987 ஆம் ஆண்டு நடந்த இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றி இன்னும் பேசிக்கொண்டிருக்கின்றனர் இவர்கள். இன்னும் எத்தனை காலங்களுக்கு இந்த தமிழ் அரசியல்வாதிகள் இப்படி மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கப் போகின்றனர்?

# பிரபஞ்சநேசம்

✪ வேதநாயகம் தபேந்திரன்



வேலை முடிந்து மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு வந்து கொண்டிருக்கிறேன். மனைவியின் மோட்டார் சைக்கிளுக்குப் பெற்றோல் தேவை. போத்தலுக்கு அலைய வேண்டியதில்லை. வீதியோரம் இருந்த போத்தல் ஒன்றை எடுத்துத் தூய்மைப்படுத்தி விட்டுப் பெற்றோலை வாங்குகிறேன்.

இதுதான் எமது நாடெங்கும் உள்ள நிலை.

நாம் வாழும் பூமி எமக்குச் சொந்தமானது. அதை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற சமூகப் பொறுப்பு, அக்கறை எமது நாட்டில் பலரிடம் இல்லை என்பதே உண்மை.

அதாவது, நாம் வாழும் பிரபஞ்சத்தில் எமக்கு நேசம் இல்லை என்பதே மனவருத்தம் தரும் உண்மைச் செய்தியாகும்.

அதனால்தான் எவ்விதக் கூச்சம் நாச்சமின்றி வேலிகள் அழிக்கப் படுகின்றன. அவை மதில்கள் ஆகின்றன. எல்லை பிடிப்பார்கள். எல்லைப் பிரச்சினைக்காக வழக்காட முடியாது என்கிறார்கள். இதைப் பொய்யெனச் சொல்லவும் முடியாது.

மரங்களை அழித்து விட்டு நிலங்களுக்குக் கொங்கிறீற் இடுகின்றனர். குப்பை கஞ்சல் கூட்டி அள்ள வேலைக்கு ஆள் பிடிக்க முடியாமல் உள்ளது என்கின்றனர்.

இலைகுழை குப்பை ஒரு செல்வம் எனப் பார்த்து இயற்கை விவசாயத்தில் வாழ்ந்த வளர்ந்த சமூகம் அதை இன்று வேண்டத்தகாத ஒன்றாகப் பார்க்கிறது. தீயிட்டுக் கொளுத்துகிறது. மரங்களின் நிழல்களில் அமர்ந்து ஊஞ்சலாடி மகிழ்ந்த ஒரு சமூகம் அதனை வேண்டத்தகாத ஒன்றாகப் பார்க்கிறது. அவற்றை அழித்து விட்டுக் காசு கொடுத்து வீட்டைக் குளிர்மைப்படுத்திக் கொள்கிறார்கள்.

எம் பூமித்தாயைக் கொடும் கானலுக்குள் விட்டு விட்டுக் காசு மழையில் தம்மைக் குளிர்மைப் படுத்தும் மனித இனம் வாழும் காலத்தில் நாம் வாழுகின்றோம்.

நாம் வாழும் பூமியை நாம் நேசிக்கும் பண்பைப் பிரபஞ்சநேசம் எனலாம். இப் பண்பு உலகெங்கும் உள்ள மனிதர்களுக்கு ஊட்டப்படல் வேண்டும். இந்த விழிப்புணர்வு ஒன்றின் மூலமே பூகோளத்தின் சமநிலையைப் பாதுகாக்கலாம்.

கடந்த 2018 ஆம் ஆண்டில் காலமாகிய பிரித்தானிய விஞ்ஞானியாகிய ஸ்ரீபன் ஹவாக்கிங் “மனிதன் தான் வசதியாக வாழ்வதற்காகப் பூமியின் சமநிலையை அழிக்கின்றான். இன்னும் 100 வருடங்களில் பூமி மனிதர்கள் வாழ முடியாத ஒரு கிரகம் ஒன்றாகப் போகின்றது என்றார்.

“மனிதன் தான் வாழும் பூமியைத் தனது கழிப்பறையாகப் பாவிக்கின்றான். தனக்குத் தானே சவக்கிடங்கைத் தோண்டுகிறான்” என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்ரோனியா குட்ரெஸ் அண்மையில் எச்சரிக்கை விடுத்தார்.

ஸ்கொட்லாந்து நாட்டின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற சர்வதேச பருவநிலை மாறுதல் தொடர்பான மகாநாட்டில் உலகத் தலைவர்களின் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

பூமித்தாய் தனது வளங்கள் மூலமாக மனி தனை வாழ வைக்கின்றாள். மனிதனோ தனது பேராசையால் அந்த வளங்களை அழித்துப் பூமித் தாயை அழித்துக் கொள்ளுகின்றான்.

பலவித வைரஸ் நோய்த் தொற்றுகளால் மனிதன் பாதிக்கப்படுகிறான். ஆனால், மனிதனால் பூமிக்கு ஏற்படும் வைரஸ் காரணமாகப் பூமித் தாய் பரிதவிக்கிறாள்.

மனிதன் தனக்கு ஏற்படும் வைரஸ் தொற்றுக்குச் சிகிச்சை பெற்றுக் கொள்கிறான். ஆனால், பூமித் தாய் தனக்கு ஏற்படும் வைரஸுக்கு யாரிடம் சிகிச்சை பெறச் செல்வாள்.

தாய்க்குப் பிள்ளைகள் தானே சிகிச்சை செய்ய வழிவகை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளாகிய நாம் அதனைச் செய்கின்றோமா ?

எமது நாட்டைப் பொறுத்தவரையில் இல்லையெனலாம். அல்லது மிகவும் குறைவு எனலாம். ஆனால், வளர்ந்த மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரையில் தமது நாடுகளின் சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குறித்துப் பாடசாலை மட்டத்திலேயே மாணவர்களுக்கு உணர்வை ஊட்டி விடுகின்றார்கள். விளைவு பிள்ளைகள் தாம் வாழும் இடங்கள் அனைத்தையும் தூய்மையாக வைத்திருக்கப் பழகி விடுகின்றனர்.

சட்டத்தை முழுமையாக மதிக்கும் சமூக அமைப்பு ஒன்று உருவாகி விடுகின்றது. வளர்ந்த நாடுகள் முன்னாளில் தமது நாடுகளை அப்படியே வைத்துக் கொண்டு ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளைத் தமது காலனியாக்கி இயற்கையை அழித்துத் தமக்கு வளங்களைத் தேடிக் கொண்டார்கள்.

ஆபிரிக்கர் கண்டெடுத்த இருண்ட ஐரோப்பா எனும் நூல் வாசித்தேன். பெல்ஜியம் ருவாண்டா எனும் மத்திய ஆபிரிக்காவைத் தமது காலனியாக்கி அங்குள்ள இயற்கை வளங்களை எப்படிச் சூறையாடியது என்பதையும், இனக் குழுமங்களை மோதவிட்டுத் தமது தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதையும் அறிய முடிந்தது.

மேற்குலகுக்கு இரண்டு முகங்கள் எப்போதுமே இருக்கும். தமது நாடுகளை அமைதிப் பூங்காவாக்கி சுற்றுச் சூழலையும் பாதுகாத்துக் கொள்வார்கள்.

அதே நேரம் வளர்ச்சி அடைந்து வரும், வறிய நாடுகளைச் சுரண்டக் கூடியதாக ஆட்சி முறைகளையும், யுத்தங்களையும் உருவாக்கிக் கொள்வார்கள். அவர்கள் இந்த நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுக்கும் போது பிரிந்திருந்த அரசுகளை ஒன்றாக்கி விட்டுச் செல்வார்கள். எமது நாடு இதற்குச் சிறந்த உதாரணம்.

ஒன்றாக இருந்த நாட்டைப் பிரித்துக் கொடுத்து விட்டுச் செல்வார்கள்.

இந்த முரண்பாடுகள் ஊடாக வளர்முக நாடுகளைக் கையாண்டு தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள்.

சுற்றாடல் பாதுகாப்பு என்பது எமது நாட்டைப் பொறுத்த வரையில் மிகச் சிறப்பானதாக இல்லை என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

“ **பலவித வைரஸ் நோய்த் தொற்றுகளால் மனிதன் பாதிக்கப்படுகிறான். ஆனால், மனிதனால் பூமிக்கு ஏற்படும் வைரஸ் காரணமாகப் பூமித் தாய் பரிதவிக்கிறாள். மனிதன் தனக்கு ஏற்படும் வைரஸ் தொற்றுக்குச் சிகிச்சை பெற்றுக் கொள்கிறான்.ஆனால், பூமித் தாய் தனக்கு ஏற்படும் வைரசுக்கு யாரிடம் சிகிச்சை பெறச் செல்வாள். தாய்க்குப் பிள்ளைகள் தானே சிகிச்சை செய்ய வழிவகை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளாகிய நாம் அதனைச் செய்கின்றோமா ?** ”

இதற்கான அரச அமைப்புகள் இருக்கும் போதும் மக்கள் விழிப்புணர்வு பெற்றவர்களாகப் பெருமளவில் இல்லை என்பதே நாம் வீதியோரம் காணும் பிளாஸ்ரிக், பொலித்தீன்கள் தரும் செய்தியாகும்.

மழலைக் கல்வி, சிறுவர் கல்வி ஊடாகவே நாம் இதற்குரிய கட்டமைப்பை ஏற்படுத்தலாம். பாடசாலை விட்டு வெளியே வந்த ஒரு மாணவன் அதைப் பொதுசமூகத்தில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கத்தக்கதாக அரச சட்டங்களும் நிர்வாக நடைமுறைகளும் இல்லை என்பதே வருத்தத்திற்குரியது.

செவ்வாய்க்கும் வியாழனுக்கும் போவதற்கான ஆராய்ச்சிப் படிமுறையில் மனிதன் முன்னோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான். அமெரிக்கர்கள் இவ்வருடம் வெற்றிகரமான பாய்ச்சலைச் செய்துள்ளனர்.

இது ஒன்று மட்டும் போதாது. பிரபஞ்ச நேசத்தைக் கட்டியெழுப்பக் கூடியதாக உலக மாந்தர்களின் மனங்கள் உருவாக்கப்படுவது ஒன்றே பூகோளத்தை மனித வைரஸிலிருந்து பாதுகாக்க உதவும். ■



# ஆழிப்பேரலை நினைவுகளுடன் வாழும் வடமராட்சிக்கிழக்கு மக்கள்....

பானு

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 17 ஆண்டுகள் கடந்து சென்றிருந்தாலும் இறந்தவர்களின் நினைவுகளோடும் வலிகளோடும் கூடிய உள பாதிப்பிலும் பொருளாதாரத்தில் இருந்து மீள முடியாமலும்தான் இன்னமும் உறவுகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆண்டுகள் பல கடந்து போனாலும் அதன் பாதிப்புக்கள் இன்னும் ஏதோவொரு வழியில் தொடர்கிறது.

வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு கடற்கரைகளுக்குச் சென்றால் கட்டிடங்கள் தரைமட்டமாகவும், இயற்கையில் செழித்திருந்த மரங்கள் தலை இல்லாமலும் காட்சியளிக்கிறது. சுனாமி அனர்த்தம் ஒருபுறம் யுத்த அழிவு மறுபுறம் என இரண்டு அழிவுகளும் ஏற்படுத்திய பாதிப்புக்கள் ஏராளம். அதுவரை காலமும் யுத்தத்தின் வடுக்களைச் சந்தித்த மக்களை இறுதியில் இயற்கை கூட விட்டு வைக்கவில்லை. பல குடும்பங்கள் இல்லாமல் போயின. குடும்பத்தில் பல உயிர்கள் இழக்கப்பட்டன. குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பலரையும் கொத்துக் கொத்தாகக் காவு வாங்கியது பேரலைகள்.

மக்களுக்கு வருமானத்தை ஈட்டிப் பொருளாதாரத்தையே உயர்த்திய கடல் அலை பல உயிர்களை கொன்றொழித்து அங்கவீனர்களாக்கி பொருளாதார இழப்புக்களையும் சந்திக்க வைத்தது மட்டுமல்லாமல் கடற்கரையோரக் கிராமங்களையே இல்லாமல் ஆக்கிய துயர நிகழ்வை தமிழ் மக்களால் மறக்க முடியாத சோகத்தை ஏற்படுத்தியது.

2004 மார்கழி 26 அன்று காலை அந்த சோக சம்பவம் இடம்பெற்றது. இந்தோனேசியா சுமத்ரா தீவு அருகே ஆழ்கடலில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக எழுந்த பேரலைகள் தாய்லாந்து, இந்தோனேசியா, மலேஷியா, இந்தியா, இலங்கை உட்பட பல நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தியது.

இலங்கையின் கரையோர மாவட்டங்கள் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டன. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், காலி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, கொழும்பு மாவட்டத்தின் கரையோரத்தின் சில பகுதிகள் பாதிப்பை சந்தித்தன.

இவ் அனர்த்தத்தால் எமது நாட்டில் மட்டக்களப்பு -2975, திருகோணமலை-984, யாழ்ப்பாணம்-1256, முல்லைத்தீவு-2902, கிளிநொச்சி-32 என மாவட்டரீதியாக உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை கணக்கிடப்பட்டது.

தமிழர் பகுதிகளில் ஆழிப்பேரலையில் ஏற்பட்ட அழிவு என்பது நினைத்துப் பார்க்க முடியாதளவு பேரழிவு. அதுவும் கரையோர மக்களின் பொருளாதாரத்தை அடியோடு ஆட்டம் காண செய்தது.

> **“பண்டைய காலத்தமிழர்கள் கடற்கரைகளில் கடல்சார் மரங்கள் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர் தடுப்புகளை, பாதுகாப்பு அரணாக அமைத்து ஆழிப் பேரலைகளின் பாதிப்புக்களை குறைத்தார்கள். சங்ககால இலக்கியங்களில் இதற்கான ஆதாரங்கள் காணப்படுகிறது. எமது பிரதேச கடற்கரைகளில் கரையோரங்களில் வளரும் தாளை மரங்கள் போன்றவற்றை வைத்து இயற்கை அனர்த்தத்தின் வலிமையைக் குறைப்பதற்கான செயற்திட்டங்கள் மிக குறைவென்றே கூறலாம்.”**

ஆகையால் ஆழிப்பேரலை பற்றி அறிவியல் ரீதியான தேடலை மேற்கொள்ள வேண்டும். நீண்டகால யுத்தத்தை சந்தித்த 2002 ஆம் ஆண்டுக்கு பின்னர் சமாதானம் நிலவிக் கொண்டிருந்த காலப்பகுதியில் தான் சுனாமி என்ற இயற்கை அனர்த்தம் பல பாதிப்புகளை ஏற்படுத்தியது.

அதனால் இன்று 17 ஆண்டுகள் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு உருண்டோடினாலும் சுனாமி ஏற்பட்ட பாதிப்புக்களை வடமராட்சி கிழக்கு கடற்கரைக்கு சென்றால் அவதானிக்க முடியும். உறவுகளின் வலியும் தொடர்கிறது. பிள்ளைகளை இழந்த பெற்றோரும் பெற்றோரை இழந்த பிள்ளைகளும் உறவுகளை இழந்த சொந்தங்கள் என துயரங்களில் வாழும் அவல நிலை தொடர்கிறது.

சுனாமி அனர்த்தத்தைத் தவிர்க்கும் நடவடிக்கைகளை அறிந்து வைத்திருப்பது அவசியமாகும். முற்கூட்டியே எச்சரிக்கை பெறுவதனை உறுதிப்படுத்த வேண்டும்.

சுனாமியின் பின்னர் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசாங்கம் உருவாக்கினாலும், இப்போது பெரும்பாலும் சுனாமி பற்றிய விடயங்கள் பெரும்பாலும் பேசப்படுவதில்லை. ஒவ்வோராண்டும் அஞ்சலிப்பதோடு எல்லாம் முடிந்துவிடுகின்றன.

கடலுக்கடியில் ஏற்படும் நிலநடுக்கத்தால் நீர் உந்தப்பட்டு மிகப்பெரிய அலைகளாக உருவாகிக் கரையை தாக்கி சேதங்களை ஏற்படுத்துவதே சுனாமி. சுனாமி என்ற சொல் ஜப்பான் மொழியில் இருந்து வந்தது. இதனை தமிழர்கள் ஆழிப்பேரலை எனக் குறிப்பிடுகின்றனர். சிறிய உயரமுடைய அலைகள் சுனாமியால் பெரிய அலைகளாக மாறுகின்றன. சுனாமி ஏற்படும் போது கடற்கரையின் அலையின் உயரம் நிலநடுக்கத்தின் அளவுக்கு ஏற்ப இருக்கும் கரையில் இருந்து அதன் உயரத்திற்கு ஏற்ப கடல்நீர் தரைப்பகுதியினுள் ஊடுருவும் பின் இப்பெரிய அலைகள் தரையில் பரவிய இடத்திற்குப் பின்னே தொடர்ந்து நீர் அலைகள் வேகமாக முன்னேறிக் கொண்டே இருக்கும். சுனாமியின் அலைகளின் உயரத்திற்கு ஏற்ப அதனால் ஏற்படும் சேதங்களும் காணப்படும்.

சுனாமி அலைகளின் தாக்கத்திற்குப் பின், அந்த தரைப்பகுதியில் மாற்றங்கள் காணலாம். கடல் நீர் சுனாமி அலையின் மூலம் இடம் பெயர்ந்ததனால் முன்னர் நிலப்பகுதியாக இருந்தவை நீராகவும் நீர்ப்பகுதியாக இருந்தவை நிலமாகவும் மாறுவதற்கு வாய்ப்புள்ளது.

கி.மு 426 கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ் சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை “பிலோப்போனேசியப் போர் வரலாறு” என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர்தான் முதன் முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும் எந்த இடத்தில் நிலநடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும், பின்பு திடீர் என பின் வாங்குதலும், மறு இரட்டைச் சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்பட வாய்ப்பே இல்லை எனக் குறிப்பிட்டார்.

கி.பி 365 இல் அலெக்சாந்திரியாவில் மிகப் பெரிய அழிவுக்கு பின் ரோமன் வரலாற்றாசிரியர் அம்மியனஸ் மாசில்லினுஸ் சுனாமி என்பது நிலநடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு அதைத் தொடர்ந்து ராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார். அதாவது நிலநடுக்கம் என்பது நிலப்பகுதியில் கடல்பகுதியில் மலைப்பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியில் உள்ள நிலத்தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளாக உருவாகின்றது. பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலத்தட்டுத்தான் இருந்தது. ஆனால் கண்டங்களாகப் பிரியப் பிரிய அதன் தட்பவெப்ப இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு நிலத்தட்டுகள் உருவாகின. இந்தத் தட்டுக்களின் மீது ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத்தட்டுக்கள் தான். இதைத்தான் “டெக்டானிக் பிளேட்கள்” என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர். ஆராய்ச்சியாளர் கூற்றுப்படி கி.மு 365 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி கிழக்கு மத்திய தரைக்கடலில் தோன்றி எகிப்திய அலெக்சாண்டிரியாவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறுகிறார்கள்.

அன்றைய காலத்திலே சுனாமி பற்றி விரிவாக கூறியுள்ளார்கள். சுனாமி அனர்த்தம் பல நாடுகளில் ஏற்பட்டுள்ளன. ஏப்ரல் 1946 இல் அலாஸ்காவில் சுவேடன் தீவுகளுக்கு அருகில் 7.8 ரிக்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டது. இதனால் 14 மீற்றர் உயரத்திற்கு அலைமேலே எழுந்து வளவாய் தீவில் உள்ள ஹிலோ என்ற இடத்தை அழித்தது. இவ்வாறு பல நாடுகளில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கை சுனாமி தொடர்பான அறிவை சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட நாடுகளிலிருந்து தெளிவான அறிவை 2004 ஆம் ஆண்டுக்கு முதலே பெற்றிருக்க வேண்டும்.

ஒரு அனர்த்தம் நிகழாது என கருதுவது மடமைத்தனம். அந்த அனர்த்தம் நிகழ முதலே அது தொடர்பான அறிவை பெற்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் போன்ற கருவிகளை முதலே பூட்டியிருந்தால் பல ஆயிரம் உயிர்களையும் பாதிப்புக்களையும் கூடியளவு தவிர்த்திருக்க முடியும். “வெள்ளம் வரும் முன்தான் அணை கட்ட வேண்டும்” என்பது போல் பாதிப்புக்கள் ஏற்பட முன் அது தொடர்பான அறிவூட்டலை பெற்றிருக்க வேண்டும்.

2004 சுனாமி ஏற்பட்ட நேரம் இலங்கையின் வடக்குக் கிழக்கு பெரும்பாலான பிரதேசங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.

2004 இல் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 230,000 மக்கள் உயிரிழந்தனர். சுமத்ராப் பகுதியில் அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுவதனால் அங்கு சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். 2004 ஆம் ஆண்டில் மார்கழி 26 ஆம் நாளன்று யுரேஷியன் நிலத்தட்டின் ஒரு பகுதியாக கருதப்படும் பர்மா நிலத்தட்டும் இந்தோ-ஆஸ்ரேலியன் நிலத்தட்டின் ஒரு பகுதியாகிய இந்தியன் நிலத்தட்டும், இந்தோனேசியாவில் வடக்கே சுமந்திரா தீவில் கடலுக்கடியில் மோதியது.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கையில் நிகழும் மொழிப் புறக்கணிப்புகள்

## சிறுபான்மை சமூகத்தின் உரிமை மீறல்களாகவே அமைகின்றது



சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**“யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தொடர்பில் இனவாதத்தை வெளிப்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் அதிகளவிலான கருத்துக்கள் பகிரப்பட்டன. இலங்கையிலுள்ள ஏனைய பகுதிகளில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்ற நிலையில், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விமான நிலைய பெயர்ப் பலகைகள் அனைத்தும் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன என மொழி சார்ந்து பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.”**

மொழி என்பது இணைப்புக் கருவியாகவும், சிக்கலான தொடர்பாடல் முறைமைகளைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்குமான வல்லமையாகவும் காணப்படுகின்றது.

மனிதருடைய மொழிகளில் ஒலியும் கை அசைவுகளும் குறியீடுகளாகப் பயன்படுகின்றன. இவ்வாறான ஒலிகளை எழுத்து வடிவமாக மாற்றமுடியும். ஆனால், சைகைகளை அவ்வாறு மாற்ற முடியாது. மனிதருடைய மொழிகளில் இக்குறியீடுகள் சொற்கள் என்றும் அவற்றைக் கையாள்வதற்கான விதிகள் இலக்கணங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

மொழியானது தொடர்பாடலாகும். மொழியினைக் கற்க முற்படும் அறிவியலுக்கு மொழியியல் எனப்பெயர். மொழியின் வளர்ச்சிப்பாதை பேச்சு, எழுத்து, புரிதல், விளக்கம் எனும் படிகளைக் கொண்டது. மனிதர்களின் பயன்பாட்டுக்காக மொழிகளின் இலக்கணங்களையும் சொற்களையும் இணைத்து புதிய மொழி ஒன்றை உருவாக்கும் முயற்சிகளும் நடந்துள்ளன.

மொழி எப்போது உருவானது என்பது பற்றி பல்வேறு விதமான கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. இருந்தாலும் உலகில் தோன்றிய முதல் மொழி என்பதற்கு பல ஆதாரங்களை கிரேக்க மொழி கொண்டுள்ளது. அவரவர்களின் கலாசாரத்தைப் பொறுத்து இவை மாறுபடுகின்றன.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் குறிப்பிட்ட விவாத நெறிமுறையாகவே அங்கு நிலவிய மொழிகள் விளங்கின. மேலும் அவர்களின் கலாசாரத்தினை வெளிப்படுத்தும் ஒரு கருவியாகவும் அவைகள் விளங்கின. மொழிகள் உச்சரிப்பில், சொல்லகராதி மற்றும் இலக்கணத்தில் மட்டும் வேறுபட்டு இருப்பன அல்ல. மாறாக அவைகள் அந்தந்த இடங்களின் கலாச்சாரத்தின் மூலமாகவும் வித்தியாசப்படுகின்றன. இதன் மூலம் அது எவ்வாறு மற்றவர்களின் கலாசாரத்திலிருந்து வேறுபட்டுள்ளது என்பதனை எடுத்துக்கூறுகிறது. ஒரே கலாசாரத்தினைப் பின்பற்றுபவர்கள் கூட மொழியினை பயன்படுத்துவதில் வித்தியாசப்படுகின்றனர். அவர்கள் அதனை உச்சரிப்பதிலும், சைகை காண்பிப்பதிலும் வேறுபடுகின்றனர்.மொழிக்கான கட்டமைப்புகள் அதனைப் பயன்படுத்தும் மக்களின் மூலமாகவே சென்றடைகின்றன.

இவ்வாறு மொழி மக்களின் வாழ்விலும், கலாசாரத்திலும் கலந்துவிட்டது. மொழி என்பது நமது அனைத்து நடவடிக்கைகளுக்கும் தேவையான ஒரு விடயமாகும். சமூகத்தில் ஒவ்வொரு இடங்களிலும் சக மனிதர்களோடு உரையாடல் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள மொழி அவசியமாகின்றது.

இலங்கையில் பயன்படுத்தப்படும் பிரதான மொழிகளாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவை உள்ளன. நாட்டு மக்கள் அனைவராலும் மூன்று மொழிகளிலும் உரையாடக் கூடிய தன்மையும் ஆற்றலும் இல்லை. இன்னும் சிலர் யாதாயினும் இருமொழிகளில் உரையாடக்கூடிய ஆற்றலுடன் இருப்பார்கள். ஆனால், பெரும்பாலான மக்கள் தமது தாய் மொழியில் மாத்திரமே உரையாடக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறு தனது தாய்மொழியில் மாத்திரம் உரையாடக் கூடியவர்களால் சமூகத்திலுள்ள வேறு மொழி பேசுபவர்களோடு சாதாரணமாகப் பழகக் கூடிய நிலைமையை உருவாக்க முடியவில்லை. அதுமட்டுமன்றி இலங்கையின் தேசிய மொழியாக சிங்களம் உள்ளது. இதனால் நாட்டு மக்களுக்காக பொதுவான சேவைகளை வழங்கும் அலுவலகங்கள், நிலையங்களில் சிங்கள மொழியே பயன்பாட்டில் உள்ளன. இதனால் வேறு மொழி பேசும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

இலங்கை நாடு அதன் வரலாற்றில் முகங்கொடுத்து வந்த அனைத்துப் பிரச்சினைகளையும் பட்டியலிட்டு பார்க்கும் பட்சத்தில் அப்பட்டியலில் முதலிடம் பிடிக்கும் பிரச்சினையாக இருப்பது இந்த மொழிப் பிரச்சினையேயாகும். சுதந்திரத்தின் பின்னரான காலத்தில் மிக உக்கிரமடைந்த இப்பிரச்சினை பிற்காலத்தில் இந்நாட்டை பெரும் யுத்தத்தில் இழுத்துத் தள்ளியதற்கான முக்கிய காரணமாகவும் அமைந்தது.

ஆரம்ப காலத்திலேயே இப்பிரச்சினையின் பாரியத்தன்மையை உணர்ந்து இந்நாட்டை சரியான பாதையில் இட்டுச்செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்க முயன்ற தலைவர்களும் கணிசமான அளவு இருந்தனர். சிலவேளைகளில் அவர்கள் தமது உயிரைப் பணயம் வைத்துச் செயற்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. இப் பின்னணியிலேயே இலங்கையில் மொழி உரிமைகள் தொடர்பான புதியதோர் கலந்துரையாடல் ஏற்பட்டிருக்கின்றது.

மொழி உரிமைகள் தொடர்பில் இந்நாட்டு மக்கள் மத்தியில் புரிந்துணர்வையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் நோக்கிலான பல்வேறு செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் தற்போது மொழி உரிமை பற்றி கவனம் செலுத்தும் பெரும்பாலான அமைப்புக்களின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.




மொழி உரிமை தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக கல்வியை எடுத்துக் கொள்ளலாம். கல்வி கற்பதற்காக சம உரிமை கிடைக்காத பட்சத்தில் மொழி உரிமை என்பது முழுமை பெறாது. இதை இன்னும் தெளிவாகக் கூறுவதாயின் எழுத்தறிவு என்பது மொழி உரிமை என்ற விடயத்துடன் நேரடியாகவே தொடர்புபட்டிருப்பதை தெளிவாகக் காணலாம். முன்னைய அநேகமான விடயங்களைப் போன்றே எழுத்தறிவு தொடர்பிலும் இந்நாட்டில் சமமற்ற நிலை காணப்படுகின்றது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

ஒருபுறத்தில் நகரம், கிராமம் என்ற வேறுபாடு எழுத்தறிவில் காணப்படுகின்ற அதேசமயம், மறுபுறத்தில் நகரத்திற்கும் தோட்டப்புறத்திற்கும் இடையிலும், கிராமத்திற்கும் தோட்டப்புறத்திற்கு இடையிலும் எழுத்தறிவு தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. தோட்டப்புற கல்வியை பாதிக்கும் முக்கிய காரணியாக ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகின்றது. 2003 மே மாதம் தமிழ்மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறை 10121ஆக இருக்கையில் சிங்கள மொழிமூலமான ஆசிரியர்கள் 6704 மேலதிகமாக இருந்தனர். (கல்வி வளர்ச்சி அறிக்கை - 2003) ஆசிரியர் பற்றாக்குறை என்பது எண்ணிக்கை வாரியாகவும் தகைமை வாரியாகவும் ஏற்பட்டுள்ள ஒரு சிக்கலாக மாறியுள்ளது.

அநேகமாக ஆசிரியர் நியமனங்கள் குறைந்த கல்வித்தகைமை, குறைந்த தொழில்சார் முன் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அவர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். சிங்கள மொழிமூல ஆசிரியர் ஆலோசகர் பற்றாக்குறை 9 வீதமாக இருக்கையில் தமிழ் மொழி மூல ஆசிரியர் ஆலோசகர் பற்றாக்குறை 51 வீதமாக இருந்தது.

கல்வி சார்ந்து மொழி பிரச்சினை இவ்வாறிருக்க, சமூகத்தில் ஏனைய இடங்களில் மொழிப் பிரச்சினை தொடர்பில் பல விடயங்கள், புகார்கள் முன்வைக்கப்பட்டன.

அந்தவகையில், வடகிழக்குப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று தமது தேவைகளைத் தமது தாய் மொழியில் நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கின்ற வேளைகளில் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு பின்னர் மொழி பிரச்சினையை தவிர்த்துக்கொள்ள உதவும் நோக்கில் அப்பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தப் படக்கூடிய வகையில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸ் அதிகாரிகளை சேவையில் இணைத்தக்கொள்ள அரசினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

மேலும் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யும் மருந்து வகைகளைப்பாவிக்க வேண்டிய முறை பற்றிய ஆலோசனைகள் உட்பட்ட முக்கியத் தகவல்கள் எதுவும் இந்நாட்டின் தேசிய மொழிகளான சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் பாவனையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்காமை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் புகார் செய்துள்ளது. மருந்து உற்பத்தியின் அடிப்படைத் தகவல்கள் ஆங்கில மொழியில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மூலம் இந்நாட்டின் குடிமக்களின் மொழி உரிமை மட்டுமன்றி பாவனையாளர்களினது உரிமையும் மீறப்படுவதாக இங்கே சுட்டிக்காட்டப்பட்டது.

புகையிரத நிலையங்களில் புகையிரதக் கால அட்டவணை பற்றிய விபரங்கள் மும்மொழிகளிலும் இடம்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி தெரிவிக்கப்பட்ட புகார்கள், அழுத்தங்கள் காரணமாக இலங்கையின் அனைத்து புகையிரத நிலையங்களிலும் மும்மொழிகளிலும் புகையிரத கால அட்டவணை பற்றி அறிவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை அரச கரும மொழிகள் ஆணைக்குழு உட்பட்ட பொறுப்பு வாய்ந்த பெரும்பாலான அரச நிறுவனங்களுக்குக் கடந்த காலத்தில் இது தொடர்பான புகார் செய்யப்பட்டது.

இவ்வாறு பல இடங்களில் மொழி ரீதியான பிரச்சினை இலங்கையில் ஏற்பட்டது. இவை நாட்டு மக்களின் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கு எதிரான செயலாகவே காணப்பட்டன. இதுவரை காலமும் பொதுவாக அனைத்து மொழி பேசும் மக்களுக்கும் மொழி சார்ந்த பிரச்சினைகள் ஏற்பட்டது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# மலையகக் கவிதைகளில் பெண்களும் சிறுவர்களும்

இக்பால் அலி

தமிழ் இலக்கிய ஆய்வுத் துறையில் புதிய ஆய்வுகளைத் தேட வேண்டும் என்ற முனைப்புடன் செயற்படுபவர் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவரும் முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி ஸாதியா பௌஸர்.

மலையகத்தில் இதுவரையிலும் ஆய்வு செய்யப்படாத மலையக நவீன கவிதைகள் பற்றிய நுண் ஆய்வுநூல் இதுவாகும். மலையக ஆரம்ப வரலாறு முதல் இற்றை வரை மலையகத்தில் காண நேர்ந்த அவலங்களையும் கொடூரங்களையும், அவர்கள் அல்லல்படுவதையும் அவற்றில் மாறுதல்களையும் மலையகம் வேண்டி நிற்கும் இலட்சியங்களையும் மலையகக் கவிஞர்கள் நிதர்சனப்படுத்தி படைத்த கவிதைகளில் இருந்து ஆழ ஊடுருவி அலசி ஆராய்ந்துள்ளார். சிறுகதை, நாவல் இலக்கியம் போன்றவற்றுடன் ஒப்பிட்டு மிகவும் நிதான முறையில் ஆய்வு நூலை வெளிக்கொணர்ந்துள்ளார்.

நூலின் பொருளடக்கத்தில் முதல் தலைப்பில் மலையகக் கவிதைகளும் மலையகப் பெண்களும் என்ற தலைப்பின் உப தலைப்புக்களாக ‘மலையகப் பெண்களும் குடும்பமும்’ என்ற தலைப்பில் விரிவான ஆய்வினை செய்து கவிஞர்கள் தம் படைப்புக்களில் சித்தரிக்கும் விடயங்களைச் சுட்டிக்காட்டி எழுதியுள்ளார்.

‘பெண்களின் வேலைப் பளு, பால்ய திருமணம், கைபொம்மை, வறுமை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுதல், பொறுப்பற்ற எவ்வித தொழிலும் புரியாத கடின போக்குடைய கணவனால் அநியாயப்படுத்தப்படல், குடும்பச் சுமைகள் முழுவதையும் சுமத்தல், வேலைத் தளங்களிலும் பாதைகளிலும் துன்பங்களுக்கு உட்படுத்தப்படல் முதலிய பல்வேறு விடயங்களாலும் நாளாந்தம் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.’ என்று அவரது மலையகப் பெண்கள் தொடர்பில் நூலில் விளக்கமொன்றை அளித்துள்ளார்.

தமிழோவியனின் ‘சிறிய வெளிச்சம்’, ‘நரகம்’ பெனியின் ‘காட்சி மாற்றம்’ “ஒரு சுமைதாங்கியின் சுயசரிதை” முரளிதரனின் ‘தியாக இயந்திரங்கள்’ றசீனா புகாரியின் ‘இவளுக்கும் மலரட்டும்’ முதலிய கவிதைகள் இந் நிலைமைகளைச் சித்தரித்துக் காட்டும் கவிஞர்களது கவி வரிகளை எடுத்துக்காட்டி மிகவும் துல்லியமாக விளக்குகின்றார் ஸாதியா பௌஸர்.

இயந்திரமயப்பட்ட வாழ்க்கை, அளவுக்கதிகமான குடும்பச் சுமைகளைச் சுமத்தல், கணவன்மாரால் துன்புறுத்தப்படல் குடும்பத் திட்டமிடலின்மை எனச் சிறு தலைப்பின் கீழ் றசீனா, தமிழோவியன், குறிஞ்சித் தென்னவன், குறிஞ்சி நாடன் ஆகிய கவிஞர்களுடைய கவிதைகள் எடுத்து ஆராயப்பட்டு மலையகப் பெண்களினதும் பிள்ளைகளினதும் வாழ்வியலை இந்த ஆய்வு நூல் அம்பலப்படுத்துகிறது.


“மலையகப் பெண்களும் தேயிலை தோட்டத் தொழிலும்” எனும் முதலாவது தலைப்பின் கீழ் வரும் இரண்டாவது உப தலைப்பு இதுவாகும்.

இது தொடர்பில் வேலைத் தளங்களிலும், காமப் பேய்களுடன் போராடியும் பல்வேறு துன்பங்களை அனுபவிப்பர். திரும்பி வரும் வழிகளிலும் பல்வேறுபட்ட இடர்களை அனுபவித்துக் களைப்போடு வீடு திரும்பினால் வேலைக்குச் செல்லும் போது விட்டுச் சென்ற மீதி வேலைகளுடன் போராட வேண்டியவர்களாகக் காணப்படுவர் (பக்கம் 19) தோட்டத் தொழில்களில் பெண்கள் படும் அவஸ்தைகளையும் துயரங்களையும் புலமைப்படுத்தும் கவிதை வரிகளை முழுமையான மதிப்பீடுகளுடன் பதிவு செய்துள்ளார்,

கவிஞர்கள் தான் வாழும் சூழல் பற்றிய புரிதலையும் மற்றும் மண்ணோடும் மக்களோடும் உள்ள உறவையும் மிக நேர்த்தியாக தம் ஆய்வு நூலில் வெளிக்கொணர்ந்துள்ளார் நூலாசிரியர். சமூக மாற்றத்திற்கான விழிப்புணர்வூட்டும் கவிஞர்களின் கவிதைகளைத் தொட்டுக் காட்டி அவர்கள் வாழும் காலமெல்லாம் முன்னணிமிக்க கவிஞர்களாக இடம்பெறுவதற்கான அவர்களது அடையாளத்தையும் அவர்களது ஆளுமைகளையும் சான்றுகளுடன் நிரூபித்துள்ளார்.

இக்பால் அலி, இரா. நித்தியானந்தன், தமிழோவியன், பூண்டுலோய தர்மு, பன்னீர் செல்வம், சி.வி. வேலுப்பிள்ளை, குமார்.சி. சிவ. இராஜேந்திரன், இ. தம்பையா, சிவசேகரம், சி.சந்தனம் சத்தியபனந்தன் ஆகியோர்களது முக்கிய கவி வரிகள் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

‘.... வினைமனைகளிலும்
வேலைத்தளத்திலும்
மனம் விரும்பாத
மங்கையர் தம்மை
அற்பர்களான
அதிகாரிகளோ
கற்பைக் கெடுக்கும் காமப் பேய்களாய்
அற்பப் பாரத்தை என்(று)
அவற் சொற்கேட்டு
அழிந்த பெண்ணையும்பேயாதே ..
வேலுப்பிள்ளை சி. வி. (1969)




கள்ளத் துரையின் காமப் பார்வை
என் ஆசை வள்ளியின் மேனியில் பட்டது
வாய்க்கால் கரையை வள்ளி கடந்தாள்
வந்த துரை
வாய்க்காலை கடந்தான் மின்னல் முட்டும்
அவனின் உணர்வு இடியாய் ஒலித்தது.
அவளின் கதறலை வாய்க்கால் நீரும் சலவை
செய்தது
என் வள்ளியை அவன் எச்சிலாக்கினான்
இரா. நித்தியானந்தன்

புல்லுக்குள் மறைந்திருந்து
இரத்தம் உறிஞ்சிக் குடிக்கும்
ஆதிகார அட்டைகள்
எங்கள் கால்களில்

எங்கள் கண்களுக்குத் தெரியாமல்
ஒட்டிக் கொள்வதனாலேதான்
எங்களால் எழுந்து நடக்க முடியாதுள்ளது
இக்பால் அலி

அதே போன்று மலையக விதவைகள், முதிய பெண்கள், பாலியல் தொழிலாளர் நிலை குறித்து தனியாக சிறு தலைப்பில் கவிதைகளைத் தரம்பிரித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது,

இத்தகைய பெண்கள் படும் அவஸ்தையினை நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? உண்மையிலேயே மலையகக் கவிஞர்கள் மலையகப் பெண்கள் அனுபவிக்கும் சொல்லொண்ணாத் துயரத்தையும் அவர்கள் எதிர் நோக்கும் சவால்களையும் கவிஞர்களின் கவி வரிகளில் இருந்து உணர்த்தக் கூடிய கருத்துக்களை புரியாதவர்களும்புரிந்து கொள்ளும் வகையில் நூலாசிரியர் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். எளிமையான மலையக மண் வாசனையுடன் கூடிய மொழி வழக்கின் மூலம் எழுதப்பட்ட அற்புதமான கவிதைகளை தொட்டுக் காட்டி, தம் ஆய்வினைத் திறம்படச் செய்துள்ளார் நூலாசிரியர்.

சந்தனம் சத்தியானந்தன், அல் அஸூமத், வீ.கே. பெரியசாமி, சி. வி.வேலுப்பிள்ளை, சி.சிவசேகரம், இ.தம்பையா, சிவ.இராஜேந்திரன், றசீனா, சண்முகநாதன், பன்னீர் செல்வம், வி. நித்தியானந்தன், கணபதி, இரா நித்தியானந்தன், சு. முரளிதரன், ஏ. செல்வராஜ் முதலியவர்களுடைய கவி வரிகள் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

முதலாவது தலைப்பின் கீழ் வரும் மற்றுமொரு உப தலைப்பு ‘மலையகப் பெண்களின் மன உணர்வுப் போராட்டங்கள், ‘பற்றிப் பேசப்படுகிறது. ஆணாதிக்கவாத சமூகத்தில் அடிமைப்படுத்தப்பட்ட பெண்கள் பல்வேறு வகையான உடலியல் ரீதியான துன்புறுத்தல்களும் உட்படுத்தப்படுவது மாத்திரமன்றி உளவியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இது பற்றி கவிஞர்களான றசீனா, சி. சிவசேகரம், இ. தம்பையா, சிவ. இராஜேந்திரன், இரா. நித்தியானந்தன், நாகபூஷணி, வி. கே. பெரியசாமி, மை. பன்னீர்ச் செல்வம் முதலியவர்களுடைய கவிதைகள் பாடுபொருளாக உள்ளன.

அத்தியாயம் இரண்டில் மலையகக் கவிதைகளும் மலையகச் சிறுவர்களும் எனும் தலைப்பில் மலையகச் சிறுவர்கள் பற்றி எடுத்தியம்பப்படும் கவிதைகளை ஆய்வு செய்து தமிழ்ப் படைப்புலகின் பார்வைக்கு நூலாசிரியர் கொண்டு வந்துள்ளார். நூலாசிரியரின் பங்கு மிக முக்கியமானது. ஏனைய சிறுவர்களைப் போல் வாழ்வதற்கு வாய்ப்பின்மை, சிறுவர்களுக்கு பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் சரிவரக் கிடைக்காமை, சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படல், சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படல், மலையகச் சிறுவர்கள் கல்வியில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் முதலிய உப தலைப்புக்களில் கவிஞர்களின் படைப்புக்களை நுண் ஆய்வு செய்து மலையகச் சிறுவர்களுடைய பிரச்சினைகளை இனங்கண்டு மிகத் திறம்பட செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் சி. வி. வேலுப்பிள்ளை, அல் அஸூமத், இராகலை பன்னீர், றசீனா, குறிஞ்சி நாடன், சந்தனம் சத்தியானந்தன். குறிஞ்சி இளந்தென்றல், குறிஞ்சித் தென்னவன், சி. சிவசேகரம், இ. தும்பையா, சிவ. இராஜேந்திரன், பெனி. தமிழோவியன், மலைமேகம், சி. வே. ராமையா, இரா. நித்தியானந்தன், இக்பால் அலி, பெனி, இளங்கதிர், நாவண்ணன், சு.முரளிதரன், ஏ. செல்வராஜ், சண்முகநாதன், ஏ. செல்வராஜ், இராகலை பன்னீர் ஆகியோர்களது வியக்கத்தக்க கவிவரிகள் நூலில் எங்கும் பரவிக் காணப்படுகின்றன.

மலையக சிறுவர்களுடைய வாழ்க்கை முறையினை புனரமைப்பதற்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல திடசங்கற்பம் பூண வேண்டும். இப்போராட்டத்தின் வெற்றி, அரசியல் மற்றும் சமூகப் பணியாளர்களிலேயே தங்கியுள்ளது. இப்போராட்டத்தை வலுப்படுத்துவதற்கு இந்த ஆய்வு நூல் மிகப் பயனுள்ளதாக அமையும் என்பதில் மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

மூன்றாவது அத்தியாயத்தில் மலையகக் கவிதைகளும், மலையகத்தின் அண்மைக்கால போக்குகளும் என்ற தலைப்பில் ஆறு உப தலைப்புக்கள் வந்துள்ளன. நான்காவது அத்தியாயத்தில் மலையகக் கவிதைகளும் மலையகப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் என்ற தலைப்பில் 10 உப தலைப்புக்களில் முன்னோடிக் கவிஞர் சி. வி. வேலுப்பிள்ளை குறிஞ்சித் தென்னவன் மலையக மக்களின் வலியைப் பிரதிபலிக்கும் முகமாக எழுதப்பட்ட கவிவரிகளோடு ஏனைய கவிஞர்களுடைய கவிதைகளை ஒப்பிட்டு வழங்கியுள்ள இந்நூல் மலையகத்தின் பெண்கள் சிறுவர்களுடைய வாழ்வை நோக்கி நம் கவனத்தை ஈர்த்துள்ளது.

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மலையக தமிழாராய்ச்சி மாநாட்டில் மலரில் குறிப்பிட்டது போல பெண்களின் நிலையைப் பற்றிய பிரக்ஞை இன்னும் போதியளவு உணரப்படாமலே உள்ளன. பெருந்தோட்டத் துறை தொழில் நிலை வாழ்க்கையின் யாதார்த்தங்கள் இன்னும் பூரணமாக வெளிக் கொணரப்படவில்லை என்ற கருத்திற்கு ஏற்ப கலாநிதி ஸாதியாக பௌஸர் அவர்களினால் ஆய்வு செய்யப்பட்ட ‘மலையகக் கவிதைகளும் பெண்களும் சிறுவர்களும்’ எனும் இந்நூல் பயனுள்ளதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்நூலின் அணிந்துரையில் பேராசிரியர் செ. யோகராசா குறிப்பிடுகையில் ‘மலையக நவீன கதை தொடர்பாக ஆய்வுகளெவையும் நடைபெறவில்லை. எனினும் நீண்ட காலத்திற்கு முன்னரே இந்நூலாசிரியர் மலையக நவீன கவிதை வளர்ச்சி தொடர்பாக நுண் ஆய்வினை செய்திருந்தாரென்பது அவ்வாய்வு நூலுருப் பெறாமை காரணமாக அறியப்பட்டிருக்கவில்லை. எனினும் அவ்வாய்வு எழுதப்பட்டு. இப்போது நூலுருப் பெற்று வெளிவருவதும் இவ்விதத்தில் மலையக நவீன கவிதை சார்ந்த முதல் ஆய்வாளர் என்ற தகுதியை இந்நூலின் வரவின் ஊடாக இவ்வாய்வாளர் பெற்றிருப்பது பாராட்டிற்குரிய விடயமாகின்றது.’

கலாநிதி ஸாதியா பௌஸர் எழுதிய இந்நூலானது ஆய்வுத் துறை சார்ந்தவர்களுக்குத் தான் தேவைப்பாடுடையது அதில் குறிப்பிடப்பட்டுள்ள கவிஞர்களுக்குத் தான் அவசியம் என்ற குறுகிய எல்லைக்குள் நின்று கணிப்பீடு செய்யாது இது மலையகத்திற்கு மட்டுமல்ல முழு நாட்டுக்கும் இது வரவேற்கத்தக்கதொரு தமிழ் ஊழியம் என உபாசித்து தமிழ் பேசும் சமூகம் இந்நூலின் முக்கியத்துவத்தை மதித்து இதனை வாங்கி ஊக்கமளித்தல் நாளைய சந்ததியினருக்கு தேடி வைக்கும் சொத்தாகும்.

கண்டி கெலிஓயாவை பிறப்பிடமாகக் கொண்ட ஸாதியா பௌஸர், தனது தமிழ்ச் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் முதுகலைமாணிப்பட்டத்தையும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டவர். அப்பல்கலைக்கழகத்திலேயே பேராசிரியர் க.அருணாசலம், பேராசிரியர் துரை மனோகரன் ஆகியோர்களின் வழிகாட்டலில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பேராசிரியர்களான வ. மகேஸ்வரன், றமீஸ் அப்துல்லா ஆகியோர்களின் வழிகாட்டலின் கீழ் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். இவர் தற்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகவும் மொழித்துறைத் தலைவராக கடமையாற்றுகின்றார்.

■

புதுப்புனல் – 23

# திருமலை மண்ணில் இருந்து வெளிவரும் கவிதைக்கான இதழ் நீங்களும் எழுதலாம்

## இதழின் சாதனைப் பயணம் குறித்த ஒரு பார்வை

புலோலியூர் வேல்நந்தன்

தீம்புனலின் இவ்வார புதுப்புனல் பகுதியில் அறிமுகம் காண்பது திருகோணமலை மண்ணில் இருந்து எஸ்.ஆர். தனபாலசிங்கம் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு வித்தியாசமான வடிவமைப்பில் வெளிவந்து கொண்டிருக்கும் "நீங்களும் எழுதலாம்" கவிதைக்கான இதழ் முயற்சியாகும். ஈழத்தில் தொடர்ச்சியாக முப்பது கவிதைக்கான இதழ்களைக் கொண்டு வந்துள்ள இதழ் முயற்சி என்ற வரலாற்றுச் சாதனையை அண்மையில் வெளிவந்த முப்பதாவது இதழ் மூலம் பெற்றிருக்கிறது இச் சஞ்சிகை. ஈழத்து கவிதை இதழ் வரலாற்றில் வேறெந்த கவிதை இதழ்களும் நிகழ்த்தாத ஒரு வரலாற்றுச் சாதனையாய் இது விளங்குகிறது.

இச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக விளங்கும் எஸ்.ஆர். தனபாலசிங்கம் அவர்கள் பிறப்பால் வடமராட்சி அல்வாயைச் சேர்ந்தவர், தொழில், வாழ்வு நிமிர்த்தம் திருகோணமலையில் வசித்து வருபவர் அவரே ஒரு கவிஞராக விளங்கும் சிறப் புக்கும் உரியவர். என்றும் கொள்கைத் தடம் மாறாத இடதுசாரிய மாக்ஸ்சிய சிந்தனை வழி இலக் கிய உலகில் இயங்கிக் கொண்டிருப்பவர். பிற்பட நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டம் என்ற இலக்கியச் செயற்பாட்டு அமைப்பை நிறுவி அதன் வழியாகவும் திருகோணமலையில் பல நூல் அறிமுக நிகழ்வுகள், பயிற்சிப் பட்டறைகள், எழுத்தாளர் கௌரவிப்பு நிகழ்வுகள், மறைந்த எழுத்தாளர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் எனப் பலவற்றை நடத்தி வரும் சிறப்பும் இவருக்குரியது. பிள்ளைகளை கல்வியால் உயர வைத்த நல்ல தந்தையாகவும் ஓய்வுநிலை ஆசிரியராகவும் விளங்குகிறார். சமகால இலக்கியப் போக்குகள் குறித்த விமர்சனப் பார்வையையும் கொண்டிருப்பவர். இவரது "நீங்களும் எழுதலாம்" என்ற இக் கவிதை இதழ் முயற்சியானது. 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வித்தியாசமான அட்டை வடிவமைப்புடன் ரூபா 20 என்ற மிகச் சிறிய பணப் பெறுமதியில் கவிதைக்காக பயில் களமாய் இம் முயற்சியை இவர் தொடங்கினார். ஈழத்தின் மூத்த கவிஞர்களான சிவசேகரம், சோ. ப, எம். ஏ.நுஃமான், தாமரைத் தீவான், மேமன் கவி, சூசை எட்வேட், ஷெல்லிதாசன், நந்தினி சேவியர், ஜின்னா செருபுத்தீன் போன்றோர் முதல் இளைய கவிஞர்களான தில்லைநாதன் பவித்திரன், பெரிய ஐங்கரன், யாழவன், சத்திய தேவன், செ.சுதர்சன், சண்முகம் சிவகுமார் வரை பலரும் இவ்விதழில் தமது கவிதைகளை எழுதியுள்ளனர். கவிதை உலகில் எனக்கும் ஒரு களம் கிடைக்குமா? முகவரி கிடைக்குமா? என ஏங்கி இருந்த பல கவிஞர்களுக்கு நீங்களும் எழுதலாம் என்ற நம்பிக்கையைக் கொடுத்து அதன் வழி இன்று ஈழத்தின் கணிப்பு மிக்க கவிஞர்களாக அவர்களை மாற்றியதில் கூட இச் சஞ்சிகைக்கு முக்கிய பங்குண்டு என்றால் அது மிகையல்ல. "தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி" என்ற மகுட வாசகத்துடன் வெளிவரும் இவ்விதழில் கவிதைகள் மட்டுமின்றி கவிதைத் தொடர்பான கட்டுரைகள், விவாதங்கள் நூல் அறிமுகக் குறிப்புகள், நிகழ்வுகளின் பதிவுகள், கவிஞர்கள் குறித்த அறிமுகக் குறிப்புக்கள் எனப் பல விடயங்களும் அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக இவ்விதழின் இறுதிப் பக்கங்களின் மூலமும் பெயர்ப்புமாய் வெளிவரும் மொழி பெயர்ப்புக் கவிதைகள் இவ்விதழின் தனித்துவங்களில் ஒன்றாக விளங்கி, சிறப்புப் பெறுகிறது. அதில் ஈழத்தின் புகழ் பூத்த மொழிபெயர்ப்புக் கவிஞர்களான சிவசேகரம், சோ.பத்மநாதன், கே.எஸ். சிவகுமாரன், வை. சுந்தரேசன், சத்தியபாலன், எம். ஏ.நுஃகுமான் போன்றோரின் பங்களிப்புகள் சிறப்புக்குரியதாய் அமைந்துள்ளன.




ஒரு காலகட்டத்தில் இவ் இதழின் இதழ் வடிவமைப்பில் சத்தியதேவன் அவர்களும் அட்டைப்பட ஓவியத்தில் பா.கபிலன் அவர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். அவ்வவ்போது ஆண்டு சிறப்பு மலர்களையும் இவ் இதழ் முயற்சி கண்டு வந்துள்ளது. மிக அண்மையில் இவ் இதழின் முதல் 12 இதழ்கள் தொகுக்கப்பட்டு நீங்களும் எழுதலாம் கவிதை இதழ்த் தொகுப்பு (I) என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. அந்தத் தொகுப்பு நூல் கூட வித்தியாசமான வடிவமைப்பில் வெளிவந்துள்ளது. தனது தந்தைக்கும் தாய்க்கும் இந்நூலை ஆசிரியர் சமர்ப்பித்துள்ளார். இத்தொகுப்புக்கான அணிந்துரையை பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் வழங்கியுள்ளார். அவர் தமது உரையில் தேன்மொழி (1955) தொடக்கம் மறு பாதி (2009) வரை ஈழத்தில் கவிதைக்கான இதழ்கள் முப்பதுக்கும் மேற்பட்டவை வெளிவந்துள்ளன. இவற்றுள் நீண்டகாலமாக வெளிவரும் இதழாக (2007- இன்று வரை) நீங்களும் எழுதலாம் திகழ்கிறது என்று கருத வாய்ப்புள்ளது என்று கூறியிருப்பது முக்கியமானதொரு விடயமாகும். அத்துடன் எதிர் காலத்தில் இவ்விதழ் தனது கவிதைத் தேர்விலும், வடிவத்திலும் உள்ளடக்கம் மொழி என்பவற்றிலும் கூடிய கவனம் செலுத்தி கவிதைகளைப் பிரசுரிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார். இதே போல மிக அண்மையில் இவ் இதழ்கள் குறித்த விரிவான பார்வையொன்றை தினக்குரல் பத்திரிகையில் புலோலியூர் இரத்தின வேலோன் அவர்கள் எழுதியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத் தொகுப்பின் உள்ளே இதழ் ஒன்று முதல் பன்னிரண்டு வரையான இதழ்கள் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளதுடன் பிற்சேர்க்கையாக இதழ் 13 - 24 வரையான படைப்பாளர் பட்டியலும், ஊடகவியலாளனின் பார்வையில் என்ற விடயமும் இலக்கியச் செயற்பாட்டுப் பதிவுகளும் மீண்டும் உங்களுடன் என்ற பகுதியும் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கவிதை இதழானது பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, கல்வியற் கல்லூரி மாணவர்கள் தொடக்கம் ஈழத்தின் பல மூத்த கவிஞர்கள், இஸ்லாமிய கவிஞர்கள், பெண் கவிஞர்கள், மலையகக் கவிஞர்கள் இணையக் கவிஞர்கள், மொழி பெயர்ப்புக் கவிஞர்கள், கவிதை விமர்சகர்கள் எனப் பலரது ஆக்கங்களுக்கும் களம் தந்து ஈழத்துக் கவிதைப்பரப்பில் ஒரு பரந்துபட்ட கவிதை வெளியை உருவாக்கியதுடன் நாங்களும் எழுதலாம் எனப் பலரிடம் நம்பிக்கையை விதைத்து அவர்கள் கவிதை உலகில் வளர்வதற்கான அடித்தளத்தை இட்டது என்பதை மறுக்க முடியாது. அண்மையில் தனது 30 ஆவது இதழையும் சற்று வித்தியாசமான காத்திரமான முறையில் வெளியிட்டு பெருமை பெற்றுள்ளது. ■

# பறந்து பறந்து துடைக்கும் 'ட்ரோன்'!



சூரிய மின் பலகைகளுக்கு எதிரி தூசி தான். அவை பெரும்பாலும் கட்டடங்களுக்கு மேலே அல்லது ஆளில்லாத சமவெளிகளில் அமைகின்றன. அங்கு தூசி படியும் சூழல் அதிகம். தூசி படிந்தால், சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கும் மின்சாரத்தின் அளவு 24 சதவீதம் வரை குறையும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதனால் சூரிய மின் பலகையை வாரத்திற்கு ஒரு முறையாவது துடைக்க வேண்டியுள்ளது. ஆனால், சூரிய ஒளிப் பண்ணைகளில் ஆட்களை வைத்து சுத்தப்படுத்துவது கட்டுப்படியாகாது. இந்த சவாலுக்கு, இஸ்ரேலைச் சேர்ந்த சோலார் 'ட்ரோன்' மற்றும் 'ஏர்ரோபாடிக்ஸ்' ஆகியவை கூட்டாக ஒரு தீர்வை உருவாக்கியுள்ளன.

இந்த தொழில்நுட்பம் ஒரு தானோட்டி. நான்கு சுழல் விசிறிகள் கொண்ட ஒரு ட்ரோனில், திரவத் தொட்டி ஒன்றை பொருத்தியுள்ளனர். தூசி தும்புகளை சூரிய மின் பலகைகள் மீதிருந்து துப்புரவாக அகற்ற உதவும் திரவம் அந்த சிறு தொட்டியில் இருக்கும். ட்ரோன் ஒது ஆளுயர பெட்டி போன்ற அறையின் கூரையைத் திறந்துகொண்டு, சூரியப்பலகைகள் மீது திரவத்தை பீய்ச்சி அடிக்க கிளம்பிச் செல்கிறது.

மின் பலகைகளின் இருப்பிடம், அவற்றின் நீள அகலம் போன்றவற்றை உணரக்கூடிய லிடார், கமராக்கள் போன்றவை அந்த ட்ரோனிலேயே பொருத்தப்பட்டுள்ளன. எனவே, பலகைகள் மீது துல்லியமாக துப்புரவுப் பணியை முடித்துவிட்டு, தானாகவே அந்த ட்ரோன் பறந்து வந்து பெட்டிக்குள் நுழைகிறது.


அங்கே மின்னேற்றப்பட்ட மின் கலன் மற்றும் தூய்மைத் திரவம் ஆகியவற்றை, அதுவாகவே மாற்றிக்கொண்டு மறுபடியும் மீதமுள்ள பலகைகளை பளிச்சென்று ஆக்குவதற்காக பறந்து செல்லும். இப்படியாக, 24/7 என்று வேலை பார்க்கும் திறன் அதற்கு உண்டு என சோலார் ட்ரோனின் அதிகாரிகள் கூறியுள்ளனர். சூரிய மின் பலகைகளை துடைப்பது இப்போது பல நூறு கோடிகள் மதிப்புள்ள தனி சேவைத்துறையாக வளரத்துவங்கியுள்ளன. இந்த ட்ரோன் அந்தத் துறையினருக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். ■

# கல்யாணக்கனவு

கனவு 03

யாழ் சத்யா

"இன்று பார்த்த வைஷாலி முற்றிலும் வேறு என்று தான் சொல்ல வேண்டும். தோள் அளவில் வெட்டியிருந்த அவள் முடியும், மெலிந்த தோற்றமும் அவளை வேறு யாரோ போலத்தான் காட்டியது. அவள் நெற்றியில் இருக்கும் விபூதியும் பொட்டும் கூட இல்லை. தமிழ் முறைப்படி சேலை அணிந்திருந்தாலும் அவள் அணிந்திருந்த பற்றிக் சேலை பெரும்பாலும் சிங்களவர்கள் அணிவது. இந்தக் கோலத்தில் அவளைக் காணும் யாரும் அவள் வைஷாலி என்று நம்புவது கடினமே."



வாழ்க்கையில் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் அவை பற்றிக் கவலைப்படாது தனது வேலையைச் செவ்வனே செய்வது இந்த வயிறு ஒன்று தான். தன் சோகத்தில் மூழ்கியிருந்த சஞ்சயனின் வயிறும் தன் கடமையைச் செவ்வனே செய்ய எண்ணி ராகம் பாடியது. அது பாடிய முராரியின் ஓலம் தாங்க முடியாது தனது இருக்கையில் கொழுவியிருந்த குளிரங்கியை எடுத்து அணிந்து கொண்டு தனது மோட்டார் சைக்கிளை நோக்கிச் சென்றான்.

இரவு பதினொரு மணி காட்டியது கைக்கடிகாரம். இப்போது எந்த உணவகம் திறந்திருக்கும் என்று எண்ணமிட்டவாறே அந்த மலைப் பாதையில் மெதுவாய் வண்டியைச் செலுத்தினான். சுல்தான் ஃபாய் கடை திறந்திருக்கும் என்ற ஞாபகம் வரத் தன் வீட்டருகே இருந்த அந்த சிறு கொத்துப் பரோட்டா உணவகத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு உள்ளே சென்றான்.

"நல்ல காலம் இப்ப வந்தீங்க தம்பி... கடையைப் பூட்டுவம் என்று நினைச்சன். இன்னைக்கு யாவாரம் பெருசா இல்ல... நானே ஃபோன் பண்ணி வாறீயளோன்னு கேப்பம் என்று இருந்தன்..."

ஃபாய் கூறியவாறே அவனுக்கு உணவை எடுத்து வைத்தார். இவன் வீட்டுக்கு அருகே இருந்த மையால் சஞ்சயன் அடிக்கடி இரவு உணவை முடித்துக் கொள்வது இங்கேதான். கூடுதலான நாட்கள் இரவு பன்னிரண்டு மணி வரைக்கும் கடை திறந்திருப்பதால் சஞ்சயனுக்கும் இதுவே வசதியாகிப் போய் விட்டது.

அவனது மென்மையான சுபாவமும் இலகுவில் எல்லோரோடும் பொருந்திப் போகும் தன்மையும் ஃபாயையும் அவனையும் இந்த மூன்று மாத காலத்தில் இறுக்கமாய்ப் பிணைத்திருந்தது.

அவன் சாப்பிடவும் ஏற்கனவே கடையைச் சுத்தம் செய்திருந்தனைளமயால் வேலை எதுவுமில்லாமல் இருந்த சுல்தான் ஃபாய் அவன் முன்னே வந்து அமர்ந்தார்.

"என்ன தம்பி... முகம் சரியாக வாடிப் போய்க் கிடக்கு... வேலை ரொம்ப அதிகமோ...? இல்லை வீட்டு யோசினை வந்திட்டுதோ... இதுக்குத்தான் தம்பி... காலகாலத்தில கலியாணத்தைக் கட்டிப் போடோணும். வேலை முடிச்சு வீட்டுக்குப் போனா... கதவு திறந்து விட்டு, வா என்று கூப்பிட ஒரு மனுசர் இருக்க வேணுமெல்லோ தம்பி... என்ன நான் சொல்லுறது ஞாயம் தானே..."

அவர் சொல்லவும் விரக்தியாகச் சிரித்து விட்டுத் தொடர்ந்து உண்ண ஆரம்பித்தான் சஞ்சயன். அவன் கூட உண்மையில் சில நேரங்களில் இவ்வாறு நினைத்ததுண்டு. ஒரு திருமணம் செய்து கொண்டால் என்ன என்று.

தனிமை என்பது மிகவும் கொடுமையான ஒன்று. அதுவும் அலுத்துக் களைத்திருக்கும் நேரத்திலோ, ஒரு சுகவீனமடையும் நேரத்திலோ இன்னொருவர் துணையையும் ஆறுதலையும் மனம் மிகவும் எதிர்பார்க்கும். அந்த நேரங்களில் வாய்க்கும் தனிமை, மிகக் கொடியது.

வேலை முடித்துத் தானே திறப்புப் போட்டு வீட்டைத் திறந்து சென்றால் அங்கே வீடு இருளடைந்து போயிருக்கும். மின் விளக்குகளைத் தடவிப் போட்டு விட்டுப் பார்த்தால் அங்கே நிலவும் நிசப்தம் மனதைப் பிசையும். உடனடியாக வானொலியையோ, தொலைக்காட்சியையோ உயிர்ப்பித்து விட்டு, அன்றைய அலுப்புத் தீர வெந்நீரில் ஒரு குளியல் போட்டு விட்டு வர மனம் கொஞ்சம் சமனப்பட்டு விடும். அந்த வீட்டின் தனிமையும் பழகிப் போய் விடும்.

சிறிது நேரம் தொலைக்காட்சியில் எதையாவது பார்த்து விட்டுப் படுக்கையில் வீழ்ந்தால், சில நேரங்களில் விட்டத்தைப் பார்த்தவாறு மனம் பழைய யோசனைகளில் ஆழ்ந்து விடும். சில நேரங்களில் களைப்பில் யாரோ அடித்துப் போட்டது போல் படுத்த உடனேயே தூங்கி விடுவான்.

பல தடவைகள் சஞ்சயன் திருமணத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்திருக்கிறான். ஏன் தமக்கை பார்த்து ஒழுங்கு செய்த ஒரு பெண்ணைக் கூடப் பார்த்துப் பேசியிருக்கிறான்.

ஆனால், அன்றைக்கே அவனுக்குக் கடைசியும் முதலுமாய்த் தெரிந்து விட்டது. அவளை வரித்த மனதில் வேறொருத்திக்கு இடமில்லை என்று. இனித்தான் யாரை மணந்தாலும் அது ஒப்புக்குச் சப்பான போலியானதொரு வாழ்வேயன்றி அங்கு உண்மையான மகிழ்ச்சியும் நிம்மதியும் இடம் பெறப் போவதில்லை என்று. அப்படியொரு வாழ்க்கைக்கு இந்தத் தனிமையே மேல் என்று முடிவெடுத்தவன், அதன் பிறகு திருமணத்தைப் பற்றி எண்ணுவதில்லை.

தனது தனிமையைப் போக்குவதற்காய் ஒரு திருமணத்தைச் செய்து, பிள்ளைகளைப் பெற்று, மனைவியென்று வருபவளின் நிம்மதியைக் கெடுத்து பிள்ளைகளோடு ஒட்டாத ஒரு போலியான வாழ்வை வாழும் பாவத்தைச் செய்ய அவன் தயாராக இல்லை. அன்று கைவிட்ட எண்ணம் தான். இன்றுவரை தனிமையே தனிப் பெருந்துணையாய் அவன் காலம் நகர்கிறது.

சுல்தான் ஃபாயோ, வேறு யாருமோ ஏதாவது சொன்னாலும் ஒரு சிறு புன்முறுவலோடு அமைதியாக இருந்து விடுவான். இப்போதும் அவ்வாறே சிரித்துக் கொண்டு சாப்பிட்டு முடித்துப் பணத்தைச் செலுத்தி விட்டு வீட்டுக்குச் சென்று நேராய்ப் படுக்கையில் வீழ்ந்தான்.

மூடிய கண்களுக்குள் வைஷாலி வந்து நின்றாள். அவளைப் பார்த்து ஏழெட்டு வருடங்களுக்கு மேல் என்று எண்ணியவனிடமிருந்து நீளமாய் ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. எவ்வளவு மகிழ்ச்சியான காலமது என்று சிந்தனை வயப்பட்டவன் முகத்தில் ஒரு மலர்ச்சி பரவியது.

'வைஷாலி நிறையவே மாறி விட்டாள் என்ன?' என்று மனசுக்குள் எண்ணியவன் அவளின் இந்த தோற்ற வித்தியாசத்தை எடை போட்டான்.

அப்போதெல்லாம் கொஞ்சம் குண்டாக அமுலு பேபி ரகம்தான் அவள். நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து 'எந்தக் கடையில் அரிசி வாங்கிறாய்?' என்று கேலி பேசுவார்கள். இடையைத் தாண்டி நீண்டிருக்கும் அவள் கூந்தலுக்கே ரசிகர்கள் ஏராளம். இரட்டைப் பின்னலிட்டுக் கீழே ரிபன் கட்டியிருப்பாள். மலர்ந்த கண்களும் சிரித்த முகமும் அவளுக்கு.

எப்போதும் புருவத்தின் மத்தியில் ஒரு கறுத்தப் பொட்டும் அதன் மேலே ஒற்றை விரலால் ஒரு விபூதிக் கீறொன்றும் இருக்கும்.

இன்று பார்த்த வைஷாலி முற்றிலும் வேறு என்றுதான் சொல்ல வேண்டும். தோள் அளவில் வெட்டியிருந்த அவள் முடியும், மெலிந்த தோற்றமும் அவளை வேறு யாரோ போலத்தான் காட்டியது. அவள் நெற்றியில் இருக்கும் விபூதியும் பொட்டும் கூட இல்லை.

தமிழ் முறைப்படி சேலை அணிந்திருந்தாலும் அவள் அணிந்திருந்த பற்றிக் சேலை பெரும்பாலும் சிங்களவர்கள் அணிவது. இந்தக் கோலத்தில் அவளைக் காணும் யாரும் அவள் வைஷாலி என்று நம்புவது கடினமே.

ஆனால், சஞ்சயனுக்குத்தான் அவளை மூன்று வயதிலிருந்தே தெரியுமே. அதனால் அவளின் தோற்றத்தில் என்ன மாற்றமிருந்தும் அவன் இலகுவாக அடையாளம் கண்டுகொண்டான்.

'இவள் ஏன் இங்கே வேலை செய்கிறாள்? யாழ்ப்பாணத்திலோ கொழும்பிலோ தானே இருக்கிறாள் என்று நினைத்தேன்... நான் கதைச்சிருக்கலாம். ஏன் தெரியாத மாதிரி வந்தேன்'

என்று தன்னையே கடிந்து கொண்டவன், நகையைத் திரும்ப எடுக்கச் செல்லும் போது அவள் கூடப் பேசுவது என்று முடிவெடுத்து விட்டு அப்படியே தூங்கி விட்டான்.

**கனவு நனவாகுமா?**

# இலக்கியச் செயற்பாட்டாளர் க.பரணீதரன்

த.அபிநாத்



காலம் அற்புதமானது! அந்தக் காலத்திற்குத் தேவையான மனிதர்களைத் தானே தேர்ந்தெடுக்கிறது. அதிவேகம் மிகுந்த இலக்கியச் செயற்பாட்டாளரான பரணீதரன் அவர்கள் இக்காலத்திலே பிறந்தமை தற்செயல் நிகழ்வாக இருக்காது. காலத்தின் தேர்வாகவே அமையுமென நம்புகிறேன். ஈழத்து இலக்கிய வெளியில் எந்தக் கூடாரத்திலும் ஒதுங்காது, தனக்கான பிரத்தியேக சாலையிலே பயணிப்பவராகவும் இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் விசுவாசமானவராகவும் அமைந்துள்ளார். ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் மிக முக்கிய இடத்தைத் தனக்குரியதாக்கியதாய் ஜீவநதி விளங்குகிறது. ஜீவநதியின் பிரதம ஆசிரியரான இவர், ஆதி உந்துதலோடும், பொருளாதார இழப்புகளோடும் உன்னத முயற்சியினை முன்னெடுத்து வருகிறார்.

2007 ஆவணி மாதம் மாதமிரு முறை இதழாய் மலர்ந்த ஜீவநதி காலவோட்டத்தில் மாத இதழாகப் பரிணமித்தது. இன்றுவரை 14 ஆண்டு மலர்களைத் தன் இலக்கியப் பாதையின் விழுதுக ளாக ஊன்றிய ஜீவநதியாகிய ஆல விருட்சம், காத்திரமான கட்டுரைகளையும், கனதியான கவிதைகளையும் சிறுகதைகளையும் நேர்காணல்களையும் நூலறிமுகக் குறிப்புக்களையும் தன்னுள்ளே தாங்கி வருகின்றது. பல்வேறு கசப்பினைச் சந்தித்த போதும் அனைத்தையும் துச்சமென மதித்து துணிச்சலோடு நடைபோடுகின்றது.

இவற்றின் பெறு பேற்றால் ஈழத்தின் சிறந்த சஞ்சிகைக்கான சின்னப்ப பாரதி விருதினை இந்தியாவிடமிருந்து பெற்றுள்ளது. அனைத்திற்கும் மூல கர்த்தாவான க. பரணீதரன் இலக்கியத்தை ஓர் இயக்கமாகக் கட்டமைக்கும் வல்லமை மிகுந்தவர். நல்ல வாசகனாக அமைந்து, தீவிர செயற்பாட்டாளராகவும் காணப்படுகிறார்.

தனக்குரிய மிடுக்குடன் தனிச் சிறப்போடு மலரும் இச் சஞ்சிகை, ஈழத்தில் அதிக சிறப்பிதழ்களை வெளியிட்ட ஒரே சஞ்சிகை என்ற பெருமைக்கு உரித்தானது. பெண் சிறப்பு மலர், சிறுகதை சிறப்பு மலர், சிறுவர் சிறப்பிதழ், ஈழம் - ஹைக்கூ சிறப்பிதழ், கவிதைச் சிறப்பிதழ், திருகோணமலை மாவட்டச் சிறப்பிதழ், மலையகச் சிறப்பிதழ், கனடா சிறப்பிதழ், அவுஸ்ரேலிய சிறப்பிதழ், சர்வதேச எழுத்தாளர் மாநாட்டுச் சிறப்பிதழ், குழந்தை ம. சண் முகலிங்கம் சிறப்பிதழ், தெணியான் பவளவிழாச் சிறப்பிதழ், செங்கையாழியான் சிறப்பிதழ், சட்டநாதன் பவளவிழாச் சிறப்பிதழ், கே. எஸ். சிவகுமாரன் சிறப்பிதழ்,கே.ஆர். டேவிட் சிறப்பிதழ் மலரன்னைச் சிறப்பிதழ், அ.யேசுராசா சிறப்பிதழ், கோகிலா மகேந்திரன் சிறப்பிதழ் போன்றவை பரணீதரனின் கடும் பிரயத் தனத்தால் இலக்கிய உலகிற்குக் கிடைத்தன.

துரு துரு வேகத்தோடு இயங்கும் பரணீதரனுக்கு ஈடு கொடுத்து இயங்குவதில் சிரமப்படுவதாக நண்பர்களும் கருத்துரைக்கின்றனர். அண்மையில் யாழ் பொதுசன நூலகத்தில் நடைபெற்ற “எங்கட புத்தகங்கள்” கண்காட்சியில் விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கோடு முதல் நாள் கொடுத்த கையெழுத்துப் பிரதியினை மறுநாள் அச்சுவாகனம் ஏற்றி “சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்” என்ற நூலாக வெளியிட்டமை வியப்புக்குரித்தான விடயமாகும்.

உளவியற் பட்டதாரியான இவர், இசை நாடகங்களில் நடிப்பதிலும் மிகுந்த ஆர்வமுடையவர்.




“மீண்டும் துளிர்ப்போம்”, “அல்வாய்ச் சண்டியன்” என்ற இவரது சிறுகதைத் தொகுதிகள் சிறப்பானவையாகும். “இலக்கியமும் எதிர்காலமும்”, “ஒளிரும் நட்சத்திரங்கள்”, “உளவியற் பிரிவுகள் ஒரு பார்வை” ஆகிய கட்டுரைத் தொகுதிகளையும் வெளி யிட்டு உள்ளார். மேலும் கால நதியின் கற்குழிவு, நேர்காணல்கள் உட்பட பல்வேறு தொகுப்புக் களையும் வெளியிட்டுள்ளார்.

ஜீவநதி பதிப்பகம் ஊடாக இருநூற்றுக்கும் அதிகமாக நூல்களை வெளியிட்டுள்ள க.பரணீதரன், கொரோனா தீநுண்மி பரவற்காலத்திலும் சிற்றிதழை உரிய காலத்திலே அச்சிதழாக வெளியிட்ட தன்மை அவர் தம் புகழை சாஸ்வதமாக இயம்பி நிற்கிறது. கடல் எனும் கல்வி இதழையும், நடி எனும் அரங்கு இதழையும் நாங்கள் எனும் ஆவண இதழையும் கூட வெளியிட்டு வருகிறார். இவ்விதம் தீவிர இலக்கியச் செயற்பாட்டாளராக அமைந்த க.பரணீதரன் அவர்களைத் துர்க்கை அம்மனோடு இணைத்துச் சிலேடையாக,

“அல்வாய் கலைக்கும் பரணிக்கும் பீடு தரும்
சொல்லணி திங்கள் தலையெடுக்கும் - நல்ல
இலக்கியங்கள் ஏற்றித் தரிசிக்கும் துர்க்கை
வளமான ஜீவநதி வாழ்த்து.”

என இரட்டைக்கரு முட்டைகள் நூல் விதந்தோதியுள்ளமை குறிப்பிடதக்கது. ■

# ஆழிப்பேரலை நினைவுகளுடன்...



(08 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அதனால் ஏற்பட்ட பூகம்பத்தால் தோன்றிய அலைகள் தான் இந்திய பெருங்கடலில் சுனாமியை ஏற்படுத்தியது.

2004 ஆம் ஆண்டில் மிகப்பெரிய ஒரு இயற்கை அழிவு 2004 சுனாமி அனர்த்தத்தின் பின் இந்தியப் பெருங்கடலில் சுனாமி எச்சரிக்கை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

தமிழர் தாயகத்தில் சுனாமிக்கு பின்னரான விடுதலைப்புலிகளின் மீட்பு நடவடிக்கைகளை உலகின் பல பத்திரிகைகளும் பாராட்டி எழுதி இருந்தன.

பேரழிவுக்கு பின்னர் விடுதலைப்புலிகளின் தலைவர் தனது அனுதாப செய்தியொன்றை வெளியிட்டார். “ஆற்ற முடியாத துயரத்தாலும் வேதனையிலும் துடிக்கின்ற உலக மக்களிற்கு எமது அன்பையும் ஆறுதலையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அது போலவே தமிழ் பேசும் தாயக மண்ணிலும் தென்னிலங்கை கடலோர பகுதிகளிலும் தமது உற்றார் உறவினரைப் பலிகொடுத்த ஆறாத துயரிலும் ஆழ்ந்திருக்கும் இஸ்லாமிய, சிங்கள சகோதரர்களிற்கு எனது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. தென்னாசிய நாடுகளிலும் இந்தியாவிலும் குறிப்பாக தமிழ் நாட்டிலும் உயிரிழப்புக்களை சந்தித்து துயருறும் மக்களின் சோகவுணர்விலும் பங்கு கொண்டு எமது ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றேன்.” குறித்த அனுதாபச் செய்தியை வெளியிட்ட பின் தாயகத்தில் என்னென்ன உதவிகள் மக்களிற்கு செய்ய வேண்டுமோ அவற்றைத் தாராளமாகவே செய்யுமாறு போராளிகளுக்கும் தளபதிகளுக்கும் பணித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பண்டைய காலத்தமிழர்கள் கடற்கரைகளில் கடல் சார் மரங்கள் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர் தடுப்புகளை பாதுகாப்பு அரணாக அமைத்து ஆழிப் பேரலைகளின் பாதிப்புக்களை குறைத்தார்கள். சங்ககால இலக்கியங்களில் இதற்கான ஆதாரங்கள் காணப்படுகிறது. எமது பிரதேச கடற்கரைகளில் கரையோரங்களில் வளரும் தாளை மரங்கள் போன்றவற்றை வைத்து இயற்கை அனர்த்தத்தின் வலிமையை குறைப்பதற்கான செயற்திட்டங்கள் மிக குறைவென்றே கூறலாம். கடற்கரைப் பகுதிகள் பெரும்பாலும் மரங்கள் இல்லாமல் வெட்ட வெளியாக காணப்படுகிறது. ஒவ்வொரு பிரதேச ரீதியாக கவனத்தில் எடுத்து மரங்கள் வைக்கப்பட்டு அதை பராமரிக்க வேண்டும். இதனால் எதிர்காலத்தில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டாலும் பெருமளவான பாதிப்புக்களை குறைக்க வாய்ப்பாக இருக்கும். இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

எமது நாட்டில் சுனாமி எச்சரிக்கை கோபுரத்திலிருந்து எச்சரிக்கை அலாரம் ஒலித்தவுடன் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக விழிப்புணர்வு பிரதேசசெயலகம், தன்னார்வத் தொண்டர்கள், முப்படையின் பொலிஸ் ஒத்துழைப்புடன் கிரமமான முறையில் இடம்பெற வேண்டும். இதனால் மக்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் செயற்படுவார்கள்.

சுனாமியில் உயிர்நீத்த உறவுகளுக்கு உடுத்துறை சுனாமி நினைவாலயம் அமைத்து அவர்கள் நினைவு கூரப்படுகிறார்கள். அதேபோல் முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற நாட்டின் பல பகுதிகளின் உயிர்நீத்த உறவுகள் நினைவு கூறப்படுகின்றார்கள். ■

# அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் பலமடையும் பாரதீய ஜனதா

வர்மா



தமிழக அரசியலில் தாமரை மலராது என கூறியவர்களின் வாயை அடைத்து சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றது பாரதீய ஜனதாக் கட்சி.

மேய்ப்பன் இல்லாத அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மேய்ப்பனாக இருக்கிறது பாரதீய ஜனதாக் கட்சி. ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் தலைமைத்துவப் போட்டியில் சிக்கிச் சீரழிகிறது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணியில் இருந்த விஜயகாந்தும், டாக்டர் ராமதாஸும் கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டார்கள். பாரதீய ஜனதாக் கட்சி மட்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கிறது. இலாப நஷ்டக் கணக்குகள் பார்த்துத் தான் கூட்டணியில் கட்சிகள் இணைவது வாடிக்கை. தேர்தல் காலக் கூட்டணி அதன் பின்னர் காணாமல் போய்விடுவதும் உண்டு.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் இருந்து பாட்டாளி மக்கள் கட்சி வெளியேறிவிட்டது. வாசனின் கட்சி ஒட்டும் உறவும் இல்லாமல் இருக்கிறது. பாரதீய ஜனதாக் கட்சி மட்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இறுக்கமாக உள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள், முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகள் ஒற்றுமையுடன் இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் தேர்தல்கால இலாப நஷ்டக் கணக்குகள்தான்.

காங்கிரஸ் கட்சிக்குத் தனிப்பட்ட அளவில் பெரிய செல்வாக்கு எதுவும் கிடையாது.தேசியளவில் காங்கிரஸ் மிகவும் பலவீனமாக உள்ளது. சிறுபான்மை வாக்குகள் கொஞ்சம் இருக்கக்கூடும். எனினும் எத்தகைய விமர்சனங்கள் வந்தாலும் காங்கிரஸைக் கழற்றி விடாமல் கூட்டணியில் தக்கவைத்துக் கொள்கிறார் ஸ்டாலின். காங்கிரஸ் கூட இருப்பது சிறு லாபத்தையாவது கொடுக்கும். இது ஏனைய கட்சிகளுக்கும் பொருந்தும்.

கூட்டணிக் கட்சிகளால் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஓரளவுக்கு லாபம் என்றாலும், கூட்டணிக் கட்சிகளுக்குத்தான் அதிக லாபம். ஒருவேளை இந்தக்கட்சிக்கு இந்தத் தொகுதியில், இந்த வார்டில் சீட் கொடுத்தால் நிச்சயம் தோற்கும் என்கிற ரிப்போர்ட் வந்தால், கண்டிப்பாக நஷ்டம் என்று தெரிந்தும் அக்காரியத்தை ஸ்டாலின் செய்ய மாட்டார். சீட் கொடுக்காமல் ஒதுக்குவாரே தவிர, முழுமையாக கூட்டணியை விட்டு விலக்கிவிட மாட்டார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் பாரதீய ஜனதா இருப்பதால் அ.தி.மு.க-வுக்கு ஆரம்பத்தில் இருந்தே நஷ்டம்தான் ஏற்பட்டு வருகிறது. ஜெயலலிதா மறைந்ததில் இருந்து, கட்சியை தனது கட்டுப்பாட்டில்வைத்திருக்கிறது பாரதீய ஜனதாக் கட்சி.

2001 இல் திராவிட முன்னேற்றக் கூட்டணியின் உதவியால் தமிழக சட்டமன்றத்தில் முதன் முறையாக நுழைந்தது பாரதீய ஜனதாக் கட்சி. 20 ஆண்டுகள் கழித்து இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தயவால் பாரதீய ஜனதாக் கட்சி நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றது.

தமிழகத்தில் காலூண்றவே முடியாது, என்று சொல்லப்பட்ட ஒரு கட்சிக்கு நான்கு எம்.எல்.ஏ-க்கள் கிடைப்பது என்பது மிகப்பெரிய விஷயம். இதுதான் பாரதீய ஜனதாவுக்கான இலாபம். குறைந்த முதலீட்டில் அதிக லாபம் என்ற டெக்னிக் தொழில் துறையில் கூட சிலருக்குத் தான் தெரியும். அரசியலில் அந்த டெக்னிக்கை லாவகமாகக் கையாண்டு வருகிறது பாரதீய ஜனதா. இரண்டு கட்டங்களாக நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் சொல்லிக்கொள்ளும்படியான வெற்றி பா.ஜ.க-வுக்குக் கிடைக்கவில்லை என்கிறபோதும், அவர்களின் எண்ணமே அடுத்து வரக்கூடிய 2024 நாடாளுமன்றத் தேர்தல்தான்.



தமிழகத்தில், 2019 எம்.பி தேர்தலிலும், தொடர்ந்து நடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலிலும் தோல்வியைத் தழுவினாலும் 2021 சட்டமன்றத் தேர்தலில் எதிர்பாராத வெற்றியைப் பெற்றது பராதீய ஜனதாக் கட்சி போட்டியிடும் வேட்பாளர்களின் செலவுகளைக் கூட அ.தி.மு.க- வை கவனிக்க வைத்துவிடுகிறதாம் பா.ஜ.க. மேலும், தற்போது பா.ம.க-வும் கூட்டணியில் இல்லாததால், 2024 எம்.பி தேர்தலில் கூடுதல் தொகுதிகளைப் பெறுவதற்கு பா.ஜ.க முயற்சிக்கும். ஆதலால், இந்தக் கூட்டணி தொடர்வது முற்றிலும் பா.ஜ.க-வுக்குத்தான் லாபம்.

அதுவே அ.தி.மு.க-வைப் பொறுத்தவரை, பா.ஜ.க-வுடனான, கூட்டணியால் சிறுபான்மையினரின் நம்பிக்கையையும், வாக்கு சதவிகிதத்தையும் தொகுதிகளையும் இழந்து நிற்கிறது அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதும் சரி, இப்போதும் சரி டெல்லி பா.ஜ.க-வின் சொல்லைக் கேட்டுத்தான் நடக்கிறது அ.தி.மு.க. அதனால், தொடர்ந்து பா.ஜ.க என்கிற சுமையினால், நஷ்டம் ஏற்பட்டு வருகிறதே எனக் கூட்டணியை விட்டு கழற்றிவிடவும் வாய்ப்பில்லை. தமிழக பா.ஜ.க அவர்களாகவும் கழன்று கொள்ளாது. இப்படியே நிலை நீடித்தால், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலிலும், 2024 எம்.பி தேர்தலிலும் கூட்டணி தொடருமேயானால், வெற்றிக்கு பாதிப்பு என்று தெரிந்தும் கூட புலிவாலைப் பிடித்த கதையாக அ.தி.மு.க திணறுகிறது. அதனால், அ.தி.மு.க-வுக்கு இது பெருத்த நஷ்டமே.


இரட்டைத் தலைமைப் பிரச்சினையால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுள் குழப்பம் ஏற்பட்டு வரும் நிலையில் சசிகலாவை சேர்த்தால் கட்சி வலுவடையும் என தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அண்ணாமலை சொல்லியுள்ளார். ஜெயலலிதா உயிரோடு இருந்திருந்தால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆலோசனை சொல்லும் துணிவு யாருக்கும் ஏற்பட்டிருக்காது.

தப்பு செய்தவர்களை மன்னித்து கட்சியில் சேர்க்கலாம் என்பது ஓ.பன்னீர்ச்செல்வத்தின் நிலைப்பாடு. எடப்பாடி அதற்கு நேர்மாறான முடிவில் இருக்கிறார். பன்னீர்ச்செல்வத்துக்கு ஆதரவாக அண்ணாமலை கொடுக்கும் குரல் யாருக்கானது என்பது அரசியல் களத்தில் உள்ளவர்களுக்கு நன்கு தெரியும்.

லேடியா டாடியா என நேருக்கு நேர் கேட்டவர் ஜெயலலிதா. பாரதீய ஜனதாவின் குரலாக அண்ணாமலை ஒலிப்பதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் விரும்பவில்லை. பாரதீய ஜனதாவில் சசிகலாவைச் சேர்க்கலாம் என பதிலளித்துள்ளனர்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுள் குழப்பங்களும் பிரச்சினைகளும் தலைமைத்துவப் போட்டியும் ஏற்படுவதால் பாரதீய ஜனதாக் கட்சிக்கு அட்தி இலாபம். ■

# அணுகுண்டை புதுப்பிக்கும் அமெரிக்கா!



அமெரிக்கா தன் பழைய குண்டுகளை புதுப்பிக்கத் துவங்கியுள்ளது. அமெரிக்காவும் சோவியத் யூனியனும் எழுபதாண்டுகால பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்தன. அதன் பின் இரு தரப்பும் அணு ஆயுத நிறுத்த ஒப்பந்தம் போட்டன.

அமெரிக்கா சில அணுகுண்டுகளை தயார் நிலையில் வைத்திருந்தது. என்றாலும், பழசாகிவிட்ட அவற்றை, புதுப்பிக்காவிட்டால் 'வீணாகிடும்' என வல்லுனர்கள் தெரிவித்தனர். இது குறித்து கடந்த 10 ஆண்டுகளாக விவாதம் நடந்தது. அண்மையில்தான் அமெரிக்கா, நவீன விமானங்களில் சுமந்துபோய் போடுவதற்கு ஏற்ப குண்டுகளை மறுசுழற்சி செய்ய முடிவெடுத்தது. கடந்த நவம்பர் 23 அன்று , பி61 ரக குண்டுகள் தயாரிக்கப்பட்டு நிலத் தடிகிடங்கில் கொண்டுபோய் சேர்க்கப்பட்டது.

இப்போது மறுவடிவமைப்பு செய்யப்படும் நான்கு ரக அணுகுண்டுகளும் 0.3 கிலோ டன் முதல் 340 கிலோ டன் வரையிலான டி.என்.டி., வெடிப்புத் திறன் கொண்டவை. அலட்டல் இல்லாத அதிபர் ஜோ பைடனின் ஆட்சியில் இப்படி ஒரு அணுகுண்டு ஏற்பாடு நடப்பது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. ■



# 'ஹைடெக்' விவசாயம் தரும் பலன்கள்!

இஸ்ரேல் மற்றும் டச்சு கூட்டணியில் உருவாகியுள்ள 'பியூச்சர் கிராப்ஸ்' ஒரு வித்தியாசமான முயற்சி. செங்குத்து அடுக்கு முறையில், உள்ளரங்கில் பலவிதமான கீரைகளை வளர்க்கும் உயர்தொழில்நுட்ப வேளாண்மை அது. நெதர்லாந்தின் வெஸ்ட்லேண்ட் பகுதியில் உள்ள இந்த வேளாண்மை நிலையம், 8 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில், ஒன்பது அடுக்குகளில் இயங்குகிறது. சூரிய ஒளி நேரடியாகப் படாதபடிக்கு இருட்டான அரங்கில் இந்த விவசாயம் நடந்தாலும், சூரிய மின்சாரத்தைப் பெற்று, அதில் எரியும் வண்ண விளக்குகள்தான் கீரைப் பயிர்களின் ஒளிச்சேர்க்கைக்கு உதவுகின்றன.

கணினிகளும், வேளாண் அறிவியல் பயின்றோரும் ஒவ்வொரு வகை கீரைச் செடிக்கும், சூரிய ஒளிக்கற்றையில் உள்ள ஏழு வண்ணங்களில், எந்த வகை வண்ணம் தேவையோ அதை அறிந்து, அந்த வண்ணத்தைத் தரும் எல்.இ.டி., விளக்குகளை அந்த கீரைகளின் மேல் பொருத்துகின்றனர். அதேபோல, இரவு நேரத்தை, செடிகள் உறங்கும் நேரமாக கருதி, விளக்குகளை போதிய நேரம் அணைத்தும் வைக்கின்றனர். ஒவ்வொரு செடியின் தேவையையும் அறிந்து, சத்துக்களை கணினிக் கட்டுப்பாட்டில் பாய்ச்சுகின்றனர்.

இதனால் கிடைக்கும் விளைச்சல், அபாரமான ருசியுடனும், ஆரோக்கியத்துடனும் இருப்பதாக பியூச்சர் கிராப்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எதிர்கால விவசாயம் இப்படித்தான் இருக்கப்போகிறது. ■

# காதலும் கற்று மற!

அமுதயாழினி

“டேய் கரன்! அவள் வாறாளா என்று பாருடா கொஞ்சம்..” “வந்தால் சொல்லுவன்தானே.. இதோட பதினோராவது தரம் கேட்டிட்டாய் ஹறி.. வாத்தி வேற இங்க தான்டா பாத்து முறைக்கிறார்..”

“இல்லடா.. வழக்கமாக அவள் இந்த நேரம் வந்திருப்பாள்..”

“கடவுளே..! இவனிட்ட இருந்து என்னைக் காப்பாற்றும்.. எனக்கு இண்டைக்கு அடி வாங்கித் தராமல் விட மாட்டான் போல கிடக்கே..”

அந்த டியூஷன் சென்டரில் பதினோராம் வகுப்பில் தான் இந்த உரையாடல் நடந்து கொண்டிருந்தது.

“டேய்.. பாடத்தைக் கவனிக்காமல் அங்க என்ன கதை..”

கூறியபடி அவர்கள் அருகில் வந்த அந்த ஆசிரியர் கையில் வைத்திருந்த பிரம்பால் இருவர் முதுகிலும் ஒவ்வொன்று போட்டார்.

“சேர்...!”

என்றபடி நெளிந்து கொண்டே வெளியே பார்த்த ஹறியின் முகமோ வெட்கத்திலும் அவமானத்திலும் சிவந்தது. யாரின் வருகைக்காக இவ்வளவு நேரமாகத் தவம் இருந்தானோ, அவள் தான் கொடுப்புக்குள் அடக்கிய புன்னகையோடு இவர்களை ஒரு பார்வை பார்த்து விட்டு தலையைக் குனிந்தவாறு தனது வகுப்பறை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். வாங்கிய அடியின் வலி மறந்து,

“ஐயோ... பாத்திட்டாளே’

என்ற மனக்குன்றல்தான் அதிகமிருந்தது.

அன்றைய பாடங்கள் முடித்துத் தமது துவிச்சக்கர வண்டிகளை எடுத்த ஹறியும் கரனும் டியூசன் வாசலிலே காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

“டேய் ஹறி.. அம்மா மில்லுக்குப் போக வேணும் என்று கெதியா வீட்ட வரச் சொன்னவாடா. மில் பூட்டிட்டாங்கள் என்றால் அம்மாட்ட நல்ல மண்டகப்படி வாங்க வேணும்..”

“இன்னொரு அஞ்சு நிமிசம்டா.. பத்தாம் ஆண்டுக்கு வகுப்பு முடிஞ்சிடும். அவள் வீடு வரை போய்ட்டுப் போவம்.. நேற்று அவன் சரவணனும் அவனிட கூட்டுகளும் அவளுக்குப் பின்னால கத்திக் கொண்டு போனவங்களாம் என்று ராஜா சொன்னவன்டா”

“ஓ..! சரவணனுக்கும் நிறைய நாளா அவளில ஒரு கண் தானே.. உங்கள் ரெண்டு பேரில அவளுக்கு யாரைப் பிடிச்சிருக்கோ..?”

“டேய் கரன்.. நீ எனக்குத் தானே ப்ரெண்ட்.. எனக்கு சப்போர்ட் பண்ணாம இப்பிடிச் சொல்லுறாய்.. அவள் வாறாளடா.. சைக்கிளை எடு...”

அவள் தனது நண்பிகளோடு துவிச்சக்கர வண்டியை வெளிவாயில் வரை உருட்டிக் கொண்டே வந்தவள், வாயிலில் இவர்களை கண்டதும் ஹறியை நோக்கி ஒரு கடைக் கண் பார்வையைச் செலுத்தி விட்டு மிதிவண்டியில் ஏறிய மர்ந்து மிதிக்க ஆரம்பித்தாள்.

கரனும் ஹறியும் இவர்களுக்குப் பின்னால் தொடர ஆரம்பித்தார்கள். சிறிது தூரம் போனவர்கள் பின்னாலிருந்து அவள் பெயரை அழைத்த சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். அந்தச் சத்தம் கேட்டு அவளும் இன்னமும் வேகமாக வீட்டை நோக்கி பறக்க ஆரம்பித் தாள். இவர்களுக்குப் பின்னால் சரவணனும் அவன் நண்பர்களும் அவளது பெயரையும் சரவணன் பெயரையும் மாறி மாறிக் கத்திக் கூப்பிட்டுக் கொண்டு பின் தொடர்ந்தார்கள்.

“டேய் கரன்..! இண்டைக்கு இவங்களை நான் ரெண்டுல ஒண்டு பார்க்காமல் விடப் போறதில்லை. பாவம் அவள்.. இப்பிடி ரோட்டில கத்திக் கொண்டு போனால் பாக்கிற சனம் அவளைப் பற்றி என்ன நினைக்கும்?”

“டேய் ஹறி.. வேணாம்டா.. நாங்கள் ரெண்டு பேர் தான். அவங்கள் ஆறேழு பேர் வர்றாங்கள். அம்மா வேற மில்லுக்குப் போகப் பார்த்துக் கொண்டு நிப்பா. மா அரைக்
காட்டி பாண் தான்டா பிறகு சாப்பிட வேணும்..”

“ஏன்டா நான் இங்க என்ர வாழ்க்கைப் பிரச்சினை பற்றிக் கதைச்சுக் கொண்டிருக்கிறன். உனக்குப் பாண் சாப்பிடுறதோ.. புட்டுச் சாப்பிடுறதோ தான் பெரிய விசயமாக இருக்கோ...?”

“அதில்லை மச்சி.. சோறு தானே முக்கியம்..”

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டே துவிச்சக்கர வண்டியை மெதுவாக மிதிக்கவும் சரவணன் கோஷ்டி இவர்களை நெருங்கியது. சரவணன், ஹறியைப் பார்த்து வெளிப்படையாகவே முறைத்தான். அதைப் பார்த்த ஹறிக்கோ கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போக, அவர்களை முன்னேற விடாமல் தனது மிதிவண்டியைக் குறுக்கே விட்டு அவர்களை மறித்தான்.

“இப்ப எதுக்கு தம்பியவை ரோட்டில கத்திக் கொண்டு போறியள்?”

“ரோட்டென்ன உங்கட அப்பன் வீட்டுச் சொத்தே..? நாங்கள் கத்திட்டுப் போனால் உங்களுக்கு என்ன பிரச்சினையாம்?”

“தேவையில்லாம எதுக்கு பொம்பிளைப் பிள்ளையிட பேரைச் சொல்லிக் கத்துவான் என்று தானே கேட்கிறன்..?”

“சரவணனும் அவளும் காதலிக்கினம்.. நாங்கள் அதுதான் பட்டம் பழிக்கிறம்.. இது எங்கட வகுப்புப் பிரச்சினை.. உங்களுக்கு என்ன வந்தது?”

“அவள் சொன்னாளா சரவணனை காதலிக்கிறன் என்று.. பொய் சொல்லக் கூடாது. இனிமேல் ஒரு தடவை இப்பிடிக் கத்தினாலும் சரவணா உன்ர அப்பாட்டத்தான் போய் சொல்லுவன்...”

“நானும் வயசுக்கு மரியாதை குடுத்தால் தேவையில்லாம எதுக்கு என்ர பிரச்சினைக்கு வாறிங்கள்.. உங்களுக்கும் அவளில ஒரு கண் என்றது எங்களுக்குத் தெரியாதே.. வந்திட்டார் பெருசா அவளுக்குப் பாதுகாப்புக்கு.. நீங்க என்ன அவளுக்கு அண்ணவோ? அப்பாவா?”

“டேய்.. உனக்கு வாயால சொன்னால் புரியாது போல..”

ஹறி கோப மிகுதியில் சரவணனை அறைய, ஆளாளுக்கு மிதிவண்டியைப் போட்டு விட்டு கைகலக்க ஆரம்பித்தார்கள். வீதியில் போன பெரியவர்கள் வந்து இவர்களை பிரிக்கும் வரை சண்டை தொடர்ந்தது. சின்னச்



சின்ன நகக் கீறல்களோடு ஆளையாள் முறைத்துக் கொண்டு தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

சில நாட்கள் நகர்வில்,

“கரன்.. இந்த சேர்ட் வடிவாத் தானேடா கிடக்கு எனக்கு..”

“ஓமடா.. எல்லாம் நல்லாத்தான் கிடக்கு..”

“அவள் இப்ப ஒரே திருநீறு பூசினபடி வாறாள். அதுதான் நானும் இப்ப பூசிறனான்..”

“டேய் ஹறி..! அது பக்தில
தான்டா வைக்க வேணும்.. உனக்கு இப்பவே முக்தி வந்திட்டுது போல..

“சும்மா போடா.. நானா அந்த சரவணனா என்று ஒரு கை பாக்காமல் விடுறேல்ல.. அவள் இதால போகேக்க வரேக்க என்னை பார்க்காமல் போக மாட்டாள் தெரியுமே.. சரவணனுக்கும் ஒரு நினைப்பு.. தன்னைப் பாப்பாள் என்று..”

“அவள் அவனிட வகுப்புத்தானே.. பாக்கிறாளோ என்னவோ.. யார் கண்டது..?”

“இந்த பீலிங் எல்லாம் அனுபவிச்சவனுக்குத் தான்டா புரியும்.. அவள் சும்மா கடைக்கண்ணால பாத்திட்டுப் போனாலே இதயம் தாளம் போடத் தொடங்கிடும்.. அவள் பாத்துச் சிரிச்சா சும்மா ஜிவ்வெண்டு பறக்கிற போல இருக்கும்.. அதெல்லாம் புத்தகப்புழு உனக்கு எங்கயடா விளங்கப் போகுது..?”

“எனக்கு விளங்காமலே இருக்கட்டும்.. உன்ர வீட்டில இந்த விசயம் தெரிஞ்சுது எண்டால் கொப்பரிட்ட பெல்ட்டாலயே வாங்குவாய்.. அதையும் ஞாபகம் வைச்சுக் கொண்டு வானத்தில பற.. இன்னும் சோதினைக்கு ரெண்டு மாசம் தான் இருக்கு...”

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி,

கரனும் ஹறியும் இவர்களுக்குப் பின்னால் தொடர ஆரம்பித்தார்கள். சிறிது தூரம் போனவர்கள் பின்னாலிருந்து அவள் பெயரை அழைத்த சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். அந்தச் சத்தம் கேட்டு அவளும் இன்னமும் வேகமாக வீட்டை நோக்கி பறக்க ஆரம்பித்தாள். இவர்களுக்குப் பின்னால் சரவணனும் அவன் நண்பர்களும் அவளது பெயரையும் சரவணன் பெயரையும் மாறி மாறிக் கத்திக் கூப்பிட்டுக் கொண்டு பின் தொடர்ந்தார்கள்.

மாதங்கள் வருடங்களாகி பதினைந்து வருடங்கள் கடந்து விட்ட ஒரு நாளில் திருமண நிகழ்வு ஒன்று.

“ஹப்பி மரீட் லைப் மச்சான்..”

மேடையில் மணமகனாக நின்ற கரனை கட்டியணைத்து வாழ்த்தினான் ஹறி.

“நீ லண்டனில இருந்து வருவாய் என்று எதிர்பார்க்கவே இல்லை மச்சான்.. தாங்ஸ்டா நண்பா..”

“பெருசா சீனைப் போடாதை.. இந்த வருசம் வரப்பிளான் பண்ணித்தான் இருந்தனான்.. என்ன ரெண்டு மாசம் முதல் வர வேண்டியதாப் போச்சு.. சரி பிறகு ஆறுதலா வந்து சந்திக்கிறன்டா..”

கூறியபடி மேடையை விட்டு இறங்க முயன்ற ஹறியை அழைத்தான் கரன்.

“டேய் ஹறி.. ஒரு நிமிசம்.. இது யார் என்று தெரியுதா?”

அவன் பின்னால் நின்றிருந்த அந்த இளம் பெண்ணை கூர்ந்து நோக்கினான் ஹறி. சில நொடிகளில் யார் என்று புரிந்து விட மலர்வாய் புன்னகைத்தான்.

“என்ன ஹறி அண்ணா தெரியேல்லயா என்னை?”

அருகே ஐந்து வயது மதிக்கத்தக்க பையன் ஒருவன் அவளை அணைத்தபடி நின்றிருக்க, அவள் கைகளில் இரண்டு வயதுப் பெண் குழந்தையைத் தூக்கி வைத்தபடி சின்னச் சிரிப்போடு அவனைக் கேட்டவள் அவளேதான்.

ஹறியின் பார்வையோ அவளைத் தாண்டி அவளின் பின்னால் நின்றிருந்த இளைஞனிடம் தான் சென்றது.

இத்தனை வருடங்கள் கழிந்த பிறகும் அது சரவணன் இல்லை என்று தெரிந்தவுடன் வந்த ஒரு சின்ன நிம்மதிப் பெருமூச்சோடு அவளோடும் அவள் கணவனோடும் பேசியபடியே மேடையை விட்டு இறங்கிச் சென்றான்.

அப்போது கையில் நாலைந்து மாதக் கைக் குழந்தை
யோடு அங்கு வந்த ஒரு இளைஞன்,

“எப்பிடி இருக்கிறீங்கள் ஹறி அண்ணா? எப்ப வந்தனீங்கள்? பத்துப் பன்னிரெண்டு வருசம் வருமென்ன பாத்து..”

சிறு தொப்பையோடு முகம் முழுக்கத் தாடியோடு நின்ற அந்த இளைஞனை யார் என்று அடையாளம் புரியாது பார்த்தான் ஹறி.

“அண்ணா..! இவனைத் தெரியேல்லயா? எங்களோட படிச்ச சரவணன்..”

இப்போது சரவணனைப் பார்த்த ஹறிக்கோ அடக்க முடியாத சிரிப்புத்தான் வந்தது. படிக்கிற காலத்தில் அவளுக்காக அடிக்கடி சண்டை போட்டதென்ன? கோபம் சாதித்தது என்ன? கடைசியில் விதி மூவரையும் வேறு வேறு நபர்களோடு இணைத்து விட்டது.

மூவருக்குமே பள்ளிக்காலம் தான் ஞாபகத்துக்கு வந்ததோ என்னவோ ஆளையாள் பார்த்துச் சிரித்த அந்த முறுவலில் கோபதாபங்களற்ற சுகமான நினைவுகள் மட்டுமே வந்து சென்றன. ஹறி சிரித்தபடி சரவணனின் பிள்ளையை வாங்கி விளையாட்டுக் காட்ட, அவளது கணவனோடு பேசிக் கொண்டிருந்தான் சரவணன்.

யதார்த்த உலகில் கடந்த காலங்கள் வெறும் நினைவுகளாகிப் போக, நிகழ்காலமோ புரிதலை உண்டாக்கி விடுகிறது.

■

# தமிழ்க்கட்சிகளிடையே...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

விக்னேஸ்வரனும்.

கூட்டமைப்பு தேர்தல் ஆணையத்தில் பதிவாகாதமையினால், தமிழரசுக்கட்சியின் வீடு சின்னத்திலேயே போட்டியிட்டது. ஒரு கட்டத்தில் விக்னேஸ்வரனுக்கு இக்கூட்டமைப்பில் அதிருப்தி தோன்றியதும், அவர் தனி வழிசென்றார். அத்துடன் தேர்தல் காலத்தில், “ வீட்டை விட்டு வெளியேறி புள்ளடி போட வாருங்கள்” என்று இரட்டை அர்த்தத்திலும் பேசினார்.



ஒருகாலத்தில் அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியிலும், உடுப்பிட்டி மு. சிவசிதம்பரம் தமிழ்க்காங்கிரஸிலும் இருந்தனர். 1970 களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் கூட்டரசாங்கம் வந்தபோது, 1972 இல் அமுலுக்கு வந்த புதிய அரசியலமைப்பினால், பிரிந்திருந்த இவர்கள் ஆனந்தசங்கரியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பினை உருவாக்கி, தமது தேர்தல் சின்னமாக உதயசூரியனை அறிவித்தனர்.

அந்தச்சூரியனும் காலப்போக்கில் மங்கி மறைந்தாலும், ஆனந்தசங்கரி தொடர்ந்தும் விடாப்பிடியாக கடிதங்களும் அறிக்கைகளும் வெளியிடும் கட்சியாக அதனை காப்பாற்றிவருகிறார்.

இக்கூட்டணியிலிருந்த அமிர், யோகேஸ்வரன் ஆகியோர் 1989 இல் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உருவாகியது.

சுரேஷ் பிரேமசந்திரனின் ஈ. பி. ஆர். எல். எஃப், செல்வம் அடைக்கல நாதனின் ரெலோ, தருமலிங்கம் சித்தார்த்தனின் புளட் ஆகியனவும் இந்த அமைப்பில் சம்பந்தருடன் இணைந்தன.

2009 ஆம் ஆண்டு புலிகள் மௌனிக்கப்பட்டதனால், இந்தக் கூட்டமைப்பிலிருந்தவர்கள் தத்தமக்கு சாதகமான பாதைகளை தேர்ந்தெடுத்து தனித் தனி வழிசென்றனர்.

இதற்கிடையில் ரெலோ இயக்கமும் பிளவுபட்டு, ஸ்ரீகாந்தாவும் சிவாஜிலிங்கமும் புதிய கட்சியை ஆரம்பித்தனர்.

நீதியரசர் விக்னேஸ்வரனும் வடக்கு மாகாண சபையில் சில வருடங்கள் பெயருக்கு முதல்வராக இருந்துவிட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முரண்பட்டு, தனக்கென ஒரு கட்சியை உருவாக்கி தனிவழிசென்றார்.

ஜெனீவாவுக்கு தமிழர் பிரச்சினை தொடர்பாக ஒத்த தீர்மானம் எடுக்கமுடியாத கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சுமந்திரனும் ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கை சமர் புரிந்தனர்.

தற்போது, இந்த முரண்பாடுகளின் மொத்த உருவமான தமிழ்த்தேசியம் பேசும் கட்சிகள், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனையும் இணைத்துக்கொண்டு தமிழ்க்கட்சிகள் ஒற்றுமைப்பட்டுள்ளன என்ற தோற்றப்பாட்டை கொழும்பில் உருவாக்கியுள்ளன.

குறிப்பிட்ட தமிழ்த்தேசியம் பேசும் கட்சிகள், இந்த சந்திப்பில், இதர தமிழ்க்கட்சிகளையும் அவற்றின் சார்பில் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருக்கும் தலைவர்களையும் கண்டுகொள்ளவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும்.

குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா, வியாழேந்திரன், பிள்ளையான் என்ற சிவனேசதுரை சந்திரகாந்தன், ரிஷார்ட் பதியூதீன், இ.தொ. கா. ஜீவன் தொண்டமான் மற்றும் ஊடகங்களில் பேசப்படும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி ஆகியோரையும் இச்சந்திப்பில் இணைத்துக் கொள்ளவில்லை.

இவர்களும் தமிழ்பேசும் அரசியல் தலைவர்கள் தான்.

அதனால்தான், தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமை குறித்து கொழும்பில் நடந்த சந்திப்பு பல கேள்விகளை எழுப்புகின்றது.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு அமைவாக கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் முறைமையை அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசின் நிகழ்ச்சி நிரலுக்காக திடீரென ஏற்படுத்தப்பட்ட ஒன்றுகூடல் சந்திப்புத்தானா இது..?

எது எப்படி இருந்தாலும், தமிழ்பேசும் சிறுபான்மைக்கட்சிகளை காலத்துக்குக் காலம் இவ்வாறு ஒன்றிணைப்பது பேரினவாதம் பேசும் சிங்கள அரசியல் கட்சிகள்தான் என்பது மிகவும் தெளிவானது.

1972 வரையில் பிரிந்து நின்று ஏட்டிக்குப் போட்டியாகத் தேர்தல் மேடைகளில் திட்டித்தீர்த்த ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸும், செல்வநாயகத்தின் தமிழரசுக்கட்சியும் ஸ்ரீமா காலத்தில் கொல்வின் ஆர் டீ. சில்வாவினால் உருவாக்கப்பட்ட ஜனநாயக சோஷலிசக் குடியரசின் புதிய அரசியலமைப்புக்கு எதிராக அறப்போராட்டம் நடத்தி கைதான அமிர்தலிங்கம், ஆனந்தசங்கரியை விடுவிப்பதற்காக ட்ரயல் அட்பார் நீதிமன்ற விசாரணைகளில் ஒன்றுபட்டதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

அப்போது ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அமிர்தலிங்கமும் தேர்தலில் தோல்வி கண்டு தத்தம் வீடுகளில் தான் இருந்தனர்.

காலமும் பொது எதிரியும் அவர்களை ஒன்று சேர்த்துவிட்டிருந்தது. அந்த ஒற்றுமையாவது நீடித்திருந்ததா..?

ஜீ. ஜீ. யின் மகன் குமார் பொன்னம்பலமும், அமிர்தலிங்கமும் ஏட்டிக்குப்போட்டியாக வரிந்து கட்டினார்கள். இருவரும் வேறு வேறு சந்தர்ப்பங்களில் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

குமாரின் மகன் கஜேந்திர குமார் பொன்னம்பலமும் சம்பந்தரும் ஆனந்தசங்கரியுமாவது ஓரணியில் ஒற்றுமைப்பட்டார்களா...?

நீதியரசர் விக்னேஸ்வரனும், அவரது மாணவர் மதியாபரணம் சுமந்திரனுமாவது கருத்தொற்றுமை கொண்டிருந்தனரா..?

இந்தப்பின்னணிகளுடன் தனிவழிசென்றவர்கள், இப்பொழுது ரவூப் ஹக்கீமையும் மனோ கணேசனையும் அழைத்துக்கொண்டு ஒற்றுமை பற்றி பேசத்தொடங்கியுள்ளனர்.

ஆம், ஒற்றுமைப்படவேண்டியதுதான். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வுதான். சந்தேகம் இல்லை.

ரவூப்ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிதா மகர் அஷ்ரப்பும் அதில் இணைந்திருந்த மசூர் மௌலானாவும் ஒரு காலத்தில் தமிழரசுக்கட்சியின் முக்கிய அங்கத்தவர்கள்தான் என்பதையும் வரலாற்றின் ஏடுகள் பதிவுசெய்துள்ளன.

மசூர் மௌலானா தமிழரசுக்கட்சியின் சார்பில் கல்முனைத்தொகுதியில் முன்னர் போட்டியிட்டவர்தான் !.

அந்த ஒற்றுமைக்கு பின்னர் நேர்ந்த கதி என்ன..?

தமிழ்ப்பேசும் அனைத்து சிறுபான்மை இனத்தவரும் ஒன்றுபடல்வேண்டும். இம்மக்களின் அடிப்படை உரிமைகளை ஏற்று மதிக்கின்ற சிங்கள முற்போக்கு சக்திகளுடனும் புரிந்துணர்வு மிக்க உறவு உருவாக வேண்டும்.

அப்போதுதான் இந்த ஒற்றுமை பலன் தரும். இல்லையேல் தேர்தல் காலத்தேவைக்காக இந்திய நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்புடையாதாகத்தான் இதுபோன்ற சந்திப்புகள் அமையும் என்பதே அனுமானமாகும்.

■

## காகிதமும் இனிய பியானோவாகும்!




அச்சிடும் மின்னணுத் துறையில் ஆஸ்திரியாவிலுள்ள ‘பிரீலோனிக்’ புதுமைகள் படைத்துவருகிறது. அண்மையில் காகிதத்தில் ஒரு பியானோவை அச்சிட்டு அசத்தியிருக்கிறது.


இன்று எல்லா மொபைலிலும் அருகாமை தகவல் தொடர்புப் புலம் இருக்கிறது. அதை வைத்து கடைகளில் கட்டணம் செலுத்துவது போன்ற பணிகளைத் தவிர பல புதிய புதிய பயன்களை தினமும் பலர் உருவாக்கி வருகின்றனர்.

‘பிரீலோனிக் இன்டராக்டிவ் பேப்பர்’ என்ற அந்தக் கருவியை மிக எளிதான முறையில் உருவாக்கி உள்ளனர். சாதாரண காகிதத்தில், பியானோ பொத்தான்கள் போல படத்தை அச்சிட்டு, அதனுடன் அச்சிட்ட சர்க்யூட் மற்றும் ஒரு மலிவு விலை சில்லு ஆகியவற்றை ஒட்டி காகித பியானோ தயாரிக்கப்படுகிறது.

இதில் சில்லு உள்ள பகுதி மீது மொபைலை வைக்க வேண்டும். மொபைலின் ஆன்டெனா அலைகள் வாயிலாக சில்லுக்கு மின்சாரம் கிடைக்கும். பியானோவுக்கும் மொபைலுக்கும் அருகாமை தகவல் தொடர்புப் புலத்தின் வாயிலாகத் தொடர்பு ஏற்படும்.

மொபைலில் இதற்கென உருவாக்கப்பட்ட செயலியை வைத்திருந்தால், அதன் வாயிலாக, ஒரு பியானோவுக்குரிய எல்லா அம்சங்களும் உடனே காகித பியானோவுக்குக் கிடைத்துவிடும். காகித பியானோவில் அச்சிடப்பட்ட கட்டைகளை அமுக்கி வாசித்தால், மொபைலில் இனிய பியானோ ஒலி கேட்கிறது. ஏறக்குறைய மாயாஜாலம் போல் தோன்றினாலும் எல்லாமே, அச்சிட்ட மின்னணுவியலின் மகிமைதான்.

■




கொரோனா வைரசை எதிர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட தடுப்பூசிகளால், ஒமிக்ரோன் என்ற திரிபு வைரசை எதிர்க்க முடியுமா? இந்தக் கேள்விக்கு, சற்று ஆறுதல் தரும் செய்திகள் வரத் துவங்கியுள்ளன.

பைசர் மற்றும் பயோன்டெக் ஆகியவற்றின் தடுப்பூசிகளைக் கொண்டு நடத்திய சோதனையின் முதற்கட்ட முடிவுகள் நம்பிக்கை தருவதாகக் கொரோனா சிகிச்சை வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

ஒமிக்ரோன் வைரசின் அமைப்பை ஒத்திருக்கும் புரதங்களை ஆய்வகத்தில் வைத்து, அதற்கு தற்போதைய தடுப்பூசிகள் எப்படி போரிடுகின்றன என்று பைசர் மற்றும் பயோன்டெக் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் சோதித்தனர்.


ஒமிக்ரோன் புரதத்திற்கு அந்த இரு தடுப்பூசிகள் போதிய எதிர்ப்பைத் தெரிவித்திருப்பதும் இரத்த மாதிரிகளில் அதற்கான ஆன்டிபாடிகள் உருவாகியிருப்பதையும் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

இருந்தாலும், இரண்டு முறை தடுப்பூசி போட்டவர்களின் உடலில், சிலருக்கு ஒமிக்ரோனை எதிர்க்கும் திறன் இருக்காமல் போகக் கூடும் என்பதை அவர்கள் ஆய்வின் வாயிலாக கணித்துள்ளனர்.

இத்தகைய குறையைப் போக்க, மூன்றாவது முறையாக பைசர் அல்லது பயோன்டெக்கின் தடுப்பூசிகளை, ‘பூஸ்டர் ஷாட்’ போல போட்டுக் கொள்வது, ஒமிக்ரோனிலிருந்து பலமடங்கு பாதுகாப்பைத் தரும் என இரு நிறுவனங்களின் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

இதனால் தானோ என்னவோ, மேற்கத்திய நாடுகளில் பலவற்றில், பூஸ்டர் தடுப்பூசி போடுவது நல்லது என்ற முடிவுக்கு அரசுகள் வந்துள்ளன. விரைவில், சிறுவர்களுக்கான தடுப்பூசிகள் வந்துவிடும். இத்துடன் பெரியவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியும் போட்டால் போதும். திடீர் கொரோனாத் தொற்றுகள் ஓங்குவதையும் அதன் திரிபு வைரஸ்கள் பரவுவதையும் வெகுவாகக் கட்டுப்படுத்த முடியும்.

■




# ‘BlockChain’ என்றால் என்ன? இதோ ஒரு எளிமையான விளக்கம்!

அரசு மற்றும் தனியார் துறை செயல்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தொழில்நுட்பமாக ‘பிளாக்செயின்’ உருவாகியிருக்கும் நிலையில் இந்த நுட்பம் குறித்த ஆர்வமும் மக்களிடையே அதிகரித்துள்ளது.

கிரிப்டோகரன்ஸி பரிவர்த்தனைகளுக்கு உதவுவதோடு, பிளாக்செயின் உலகளாவிய பரிவர்த்தனை மற்றும் டிஜிட்டல் சொத்து நிர்வாகம் உள்ளிட்டவற்றுக்காக பயன்படுத்தப்படுகிறது.

கிராண்ட் வியூ ஆய்வின் படி, உலகளாவிய Blockchain தொழில்நுட்பச் சந்தை, 2020 இல் 3.67 பில்லியன் டாலராக மதிப்பிடப்பட்டிருந்தது. 2028 இல் இது 82.4 சதவீத வளர்ச்சி காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உங்களுக்கு பிளாக்செயின் நுட்பத்தை அறிந்து கொள்வதில் ஆர்வம் இருந்தால் அதன் அடிப்படை அம்சங்கள் இதோ:

**பிளாக் செயின் அடிப்படை**

பிளாக்செயின் அடிப்படையில், சங்கிலித்தொடரான கட்டங்களாகும். கட்டங்களில் தரவுகள் சேர்க்கப்படும் போது, ஏற்கெனவே உள்ள கட்டங்களின் மீது புதியவை உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு கட்டமும், கிரிப்டோ முறையிலான ஹாஷ் (புதிய கட்டத்தை பழைய கட்டத்துடன் இணைக்கும் தகவல் துண்டு), கால சின்னம் மற்றும் பரிவர்த்தனை விவரத்தைக் கொண்டிருக்கும்.

ஹாஷ்கள், சங்கிலிகளை பிணைத்திருப்பதால், சங்கிலித்தொடரான கட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

பரிவர்த்தனைகள் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு கம்ப்யூட்டர்கள் மற்றும் சாதனங்களில் பதிவு செய்யப்படுகின்றன. இவை ‘முனை’ (nodes) என்றும் அழைக்கப்படுகிறது.

பிளாக்செயினின் மற்றொரு அம்சம், அவை ‘பியர் 2 பியர்’ (peer-to-peer (P2P) வலைப்பின்னல் பயனாளிகளால் நிர்வகிக்கப்படுகிறது.

இந்தப் பயனாளிகள் வலைப்பின்னலில் மைய சர்வர் அல்லது நிர்வாகி கிடையாது. பயனாளிகள் மற்றொருவருக்கு தகவல் பரிமாற விரும்பினால் நேரடியாக அனுப்பலாம்.

**மையமில்லா தன்மை**

பரிவர்த்தனை தரவுகள் கொண்ட பொது பதிவேட்டின் (public ledger) நகலை பலர் வைத்திருப்பதால் பிளாக்செயின் பங்கீடு தன்மை கொண்டதாகக் கருதப்படுகிறது. எனினும் இது எல்லா நேரங்களிலும் மையமில்லாத் தன்மை கொண்டதாகக் கருதப்படுவதில்லை.

மையமில்லா வலைப்பின்னலில், எந்த ஒரு பயனாளியும் பரிவர்த்தனையில் பங்கேற்கலாம். மேலும், பரிவர்த்தனையின் துல்லியம் மற்றும் பிரச்சினைகளைச் சரி செய்யும் அம்சம் இருக்க வேண்டும்.

பிளாக்செயின் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட முதல் கிரிப்டோ நாணயமான பிட்காயினை பொருத்தவரை அகழ்வு - மைனிங் (கணிணி புதிரை விடுவித்து புதிய நாணயங்களை உருவாக்குவது), பணி நிரூபணம் (குறிப்பிட்ட கணிணி செயலாக்கம் நிகழ்ந்துள்ளது என்பதற்கான நிரூபணம்) ஆகியவை பதிவேட்டின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய மற்றும் அமைப்பின் பாதிப்பைத் தடுப்பதற்காக உள்ளன.

இந்தக் காரணத்தினால்தான், பிளாக்செயின் உருவாக்கத்தில் பிட்காயின் புரட்சிகரமானதாகக் கருதப்படுகிறது.

**பிட்காயின் முக்கியத்துவம்**

2018 இல் வெளியிடப்பட்ட பிட்காயின் வெள்ளை அறிக்கையில், இதன் அனாமதேய நிறுவனர் சடோஷி நகமோட்டோ, நிதி அமைப்பின் வாயிலாகச் செல்லாமல், ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு ஒன்லைன் பணத்தை நேரடியாக அனுப்ப வழி செய்யும் முற்றிலும் பயனாளிகள் இடையிலான ‘மின்னணு ரொக்கம்’ என பிட்காயினை குறிப்பிட்டிருந்தார்.

முதல் பிளாக்செயின் பற்றி அவர் இப்படி குறிப்பிட்டிருந்தார்:

“ஹாஷ் அடிப்படையிலான பணி நிரூபணம் சார்ந்த தொடர் சங்கிலியிலான கால சின்னம் கொண்டவையாக பரிவர்த்தனைகளை இந்த வலைப்பின்னல் அமைத்து, பணி நிரூபணத்தை மாற்றி அமைத்தால் மட்டுமே பதிவுகளை மாற்றலாம் எனும் நிலையை உண்டாக்குகிறது. நீண்ட சங்கிலி, பரிவர்த்தனை சங்கிலியின் அடையாளமாக மட்டும் அல்லாமல், இவை பல்வேறு கம்ப்யூட்டர் ஆற்றலில் இருந்து வந்ததையும் நிரூபிக்கிறது”.

கம்ப்யூட்டர் முனைகள் வலைப்பின்னலில் இருந்து வெளியேறி பின்னர் இணையலாம் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.


**பிளாக்செயின் பரிவர்த்தனை**

பிளாக்செயின் செயல்பாட்டை புரிந்து கொள்ள பிட்காயின் பிளாக் செயின் செயல்படும் உதாரணத்தை பார்க்கலாம்:

வழக்கமாக ஒருவர் இன்னொருவருக்கு ரூ.1,000 அனுப்பி வைக்க வேண்டும் எனில், அவர் வங்கிக்கு தெரிவித்து இந்த பரிவர்த்தனையை துவக்கி வைப்பார். இதற்கான தொகை இருப்பதை உறுதி செய்து கொண்ட பின் வங்கி அந்த தொகையை பரிவர்த்தனை செய்யும்.

இதனையடுத்து, அனுப்பியவர் வங்கிக் கணக்கில் 1,000 குறைந்து, பெறுபவர் கணக்கில் 1,000 அதிகமாகும்.

இதற்குப் பதிலாக பிட்காயின் வடிவில் பணம் அனுப்ப விரும்பினால், இதற்கான செயல்முறை வேறுபட்டது. இதில் வங்கி போன்ற மைய அமைப்பு பரிவர்த்தனைகளை உறுதி செய்வதில்லை. இதற்கான ஒற்றை அமைப்பும் இல்லாத நிலையில், அனைத்து கம்ப்யூட்டர் முனைகளும் பரிவர்த்தனையை உறுதி செய்வதில் ஈடுபடுகின்றன. விநியோகிக்கப்பட்ட அமைப்பே இதற்கு காரணம். ■




---

# ஜனவரியில் வருகிறது OnePlus 10 Pro




உலகம் முழுவதும் அதிகம் எதிர்பார்க்கபட்ட OnePlus 10 Pro ஜனவரியில் வெளியாகும் என்று அதன் இணை நிறுவனர் மற்றும் CEO Pete Lau உறுதிப்படுத்தியுள்ளார். ஒன்பிளஸ் 9 ப்ரோவின் அடுத்த அப்டேட்டாக இந்த 10 Pro இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது Snapdragon 8 Gen 1 SoC உடன் வரும் என்று கூறப்படுகிறது. OnePlus 10 Pro ஆனது OnePlus 10 மாடலுடன் இணைந்தே வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரண்டு OnePlus 10-Series போன்கள் வெவ்வேறு வாடிக்கையாளர்களைக் குறிவைக்க சிறிய வேறுபாடுகளைக் கொண்டிருக்கும் என்று கூறப்படுகிறது.

OnePlus 10 Pro போன் ஜனவரியில் வெளியாகும் என்று கூறிய Pete Lau Weibo, சரியான வெளியீட்டு திகதியைக் கூறவில்லை. மேலும் OnePlus நிறுவனம் ஜனவரி 5 ஆம் திகதி லாஸ் வேகாஸில் மிக பிரமாண்டமாக இதன் வெளியீட்டை நிகழ்த்த திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது. அந்த அரங்கில் நாம் OnePlus 10 மற்றும் OnePlus 10 Pro ஐப் பயன்படுத்தும் வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன. இந்த வார தொடக்கத்தில் Qualcomm வெளியிட்ட Snapdragon 8 Gen 1 SoC, இரண்டு போன்களிலும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய OnePlus 10 Pro ஆனது 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உலகெங்கிலும் உள்ள சந்தைகளுக்கு வர உள்ளது.

ஒன்பிளஸ் 10 ப்ரோ பின்புற கேமரா மாட்யூலைக் கொண்டிருக்கலாம், ஒன்பிளஸ் 9 ப்ரோவின் ஜூம் அம்சங்களைத் தக்க வைத்துக் கொள்ளலாம். பின் பகுதியில் 48 மெகாபிக்சல் முதன்மை கமராவும் இருக்கும்.

120Hz புதுப்பிப்பு வீதத்துடன் 6.7-இன்ச் QHD+ டிஸ்ப்ளே, 12GB வரை LPDDR5 ரேம், அதிகபட்சம் 256GB UFS 3.1 சேமிப்பு மற்றும் 5,000mAh பேட்டரி ஆகியவை அடங்கும். ஸ்மார்ட்போனில் தூசி மற்றும் நீர் எதிர்ப்பிற்கான ஐீ68-சான்றளிக்கப்பட்ட கட்டமைப்பையும் கொண்டிருக்கலாம். மேலும், போனில் OnePlus இன் வேகமான சார்ஜிங் தொழில்நுட்பம், அதன் ஒரு பக்கத்தில் எச்சரிக்கை சைடர் மற்றும் ஆண்ட்ராய்டு 12-அடிப்படையிலான OxygenOS 12 இருக்கும் என்று எதிர்பார்க்கபடுகிறது. ■




Table VI
University Admissions in 1975: Distribution of Students by their Districts of Origin

| District | Population Percentage | Medicine & Dental Surgery: Actual Selection on District Basis | Medicine & Dental Surgery: Hypothetical Selection According to order of Merit | Engineering & Sciences: Actual Selection on District Basis | Engineering & Sciences: Hypothetical Selection According to order of Merit |
|---|---|---|---|---|---|
| Colombo | 21.03 | 110 | 132 | 70 | 129 |
| Kalutara | 5.76 | 15 | 11 | 20 | 16 |
| Kandy | 9.34 | 24 | 17 | 31 | 11 |
| Matale | 2.49 | 8 | 03 | 8 | 3 |
| Nuwara Eliya | 3.57 | 2 | 02 | 6 | - |
| Galle | 5.80 | 29 | 18 | 20 | 24 |
| Matara | 4.63 | 8 | 05 | 15 | 20 |
| Hambantota | 2.68 | 1 | - | 8 | - |
| Jaffna | 5.54 | 29 | 61 | 20 | 56 |
| Mannar | 0.61 | 1 | 01 | 1 | - |
| Vavuniya | 0.75 | - | - | - | - |
| Batticaloa | 2.03 | 6 | 04 | 7 | 2 |
| Amparai | 2.14 | - | - | 1 | 1 |
| Trincomalee | 1.51 | 3 | 01 | 5 | 5 |
| Kurunegala | 8.09 | 12 | 03 | 26 | 9 |
| Puttalam | 2.99 | 3 | 02 | 10 | 2 |
| Anuradhapura | 3.06 | 2 | 01 | 4 | 1 |
| Polonnaruwa | 1.29 | 1 | - | 1 | - |
| Badulla | 4.84 | 2 | 01 | 7 | 2 |
| Moneragala | 1.51 | - | - | 2 | 1 |
| Ratnapura | 5.21 | 11 | 07 | 10 | 5 |
| Kegalle | 5.13 | 8 | 06 | 18 | 3 |
| Sri Lanka | 100.00 | 275 | 275 | 290 | 290 |

# சரிந்துகொண்டிருக்கும்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்விச்சரிந்திரங்களை அரசியல் ஆதிக்கத்தால் சரிக்க எடுத்த முயற்சிகளின் நீண்டகாலப் பாதிப்புகளின் எச்சங்கள் என்பதை மறந்து விட முடியாது.

இன்று திணிக்கப்பட்ட நியாயங்களுக்காக அன்று நிகழ்த்தப்பட்ட அநியாயங்களை வரலாற்றில் இருந்து அகற்றி விடவும் முடியாது. இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் அனைத்து பிரதேச மக்களுக்கும் கல்வி வாய்ப்புகள் சமனாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் எனக்கும் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், அவை ஒரு இன அரசியலை அடிப்படையாகக் கொண்டு ஒரு இனத்தின் சாதனைகளைசரித்துப் பறித்து இன்னொருவருக்குக் கொடுப்பதாக அமையக் கூடாது. மாறாக ஏனைய பகுதிகளையும் வலுவூட்டி, கற்றல் கற்பித்தல் தரங்களை அதிகரித்து ஏற்கெனவே இருந்த வெற்றிகரமான பல்கலைக்கழக அனுமதிகளின் எண்ணிக்கையைக் குறைக்காமல், ஏனைய பிரதேசங்களின் பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கையை அதிகரித்திருக்கலாம். அதில் ஒரு நியாயமும் தர்மமும் இருக்கும்.

தவிர மற்றைய பிரதேசங்களை சம தரத்துக்கு முன்னேற்ற ஒரு குறித்த கால எல்லையை வகுத்து திட்டமிட்டு அந்த பிரதேச மாணவர்களின் கல்வியை முன்னேற்றியிருக்கலாம். குறிப்பிட்ட கால எல்லையின் பின்னர் அனைத்து பிரதேசங்களும் ஒரே தரத்திற்கு வந்த பின்னர் மீண்டும் மெரிட் முறையிலான தரப்படுத்தலை தொடர்ந்திருக்கலாம். ஒரே பாடத்திட்டத்தில் ஒரே பொதுப்பரீட்சையை எதிர்கொள்பவர்களாக அதுவே நியாயமானதும் கூட.

ஆனால், எல்லாப் பிரதேசங்களையும் சம அளவில் முன்னேற்றவோ, சமூகப் பொருளாதாரக் காரணிகளை மேம்படுத்தி கல்வித்தரத்தை உயர்த்த உழைக்க அரசாங்கங்கள் தவறுவதன் விளைவும், தங்கள் பணிகளை செய்யத் தவறியதன் விளைவுகளை மூடி மறைத்து அரசியல் நாடத்தும் விளைவுகளுமே எல்லையற்ற தொடர்கதையாக பிரதேச ரீதியான விகிதாசாரத் (Quota) தரப்படுத்தல் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இன்றைய தலைமுறை சரிந்துகொண்டிருக்கும் ஒரு சரித்திரத்தின் ஆரம்ப காலங்களை தெரிந்திருக்க வேண்டியது அவசியம். அதுவே அவர்களுக்கான ஒரு உத்வேகத்தைக் கொடுத்து நிமிர்வுக்கான பாதைகளைத் தேட ஊக்குவிக்கும். உச்சம் பெற்ற போரும் போரின் விளைவுகளும் இன்றைய கல்வித் துறையில் தொடரும் சவால்களும் சாத்தியங்களும் இனிவரும் அத்தியாயங்களில் தொடரும்...




# இலங்கையில் நிகழும்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், சமீபகாலமாக தமிழ் மொழியைப் புறக்கணிக்கும் பல செயற்பாடுகள் இந்நாட்டில் நடந்தேறியது.

2021 ஆம் ஆண்டுக்கான சுதந்திர தின நிகழ்வில் இலங்கை அரசியலமைப்பின்படி தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைக்க முடியும் எனச் சட்டத்தரணிகள் கூறிய போதிலும் சிங்கள மொழியில் மாத்திரமே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என அரசு அதிகாரியால் வலியுறுத்தப்பட்டு அவ்வாறே தேசிய கீதம் சிங்கள மொழியில் மாத்திரம் இசைக்கப்பட்டது.

இதே போன்று இலங்கையில் ஈஸ்டர் தினத்தன்று தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அரபு மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக மன்னார், காத்தான்குடி போன்ற பகுதிகளில் அரபு மொழிக்கு முன்னுரிமை வழங்கி பெயர்ப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் அதிகளவில் கருத்துக்கள் பகிரப்பட்டன.

இலங்கையில் சீனாவினால் முன்னெடுக்கப்படும் நலத்திட்டங்களில் பெரும்பாலான இடங்களில் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் அதேவேளை, சீன மொழிக்கும் அதே அளவிலான முன்னுரிமை வழங்கப்பட்டு, தமிழ் மொழி முழுமையாகவே புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தொடர்பில் இனவாதத்தை வெளிப்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் அதிகளவிலான கருத்துக்கள் பகிரப்பட்டன.

இலங்கையிலுள்ள ஏனைய பகுதிகளில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்ற நிலையில், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விமான நிலைய பெயர்ப் பலகைகள் அனைத்தும் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன என மொழி சார்ந்து பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

இதன் போது இலங்கை அரசியலமைப்பின் மொழி தொடர்பான சரத்துக்கள் பற்றி பேசப்பட்டது. அதாவது ''சிங்களமும், தமிழும் இலங்கை முழுவதிலும் நிர்வாக மொழிகளாக இருத்தல் வேண்டும். அத்துடன், வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தவிர்ந்த இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் சிங்களம் நிர்வாக மொழியாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பொதுப் பதிவேடுகளைப் பேணி வருவதற்காகவும், பகிரங்க நிறுவனங்களினால் அலுவல்கள் யாவும் கொண்டு நடாத்தப்படுவதற்காகவும் சிங்கள மொழி பயன்படுத்தப்படுதலும் வேண்டும். வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் தமிழ் மொழி அவ்வாறு பயன்படுத்தப்படுதல் வேண்டும். மொத்த சனத் தொகைக்குச் சிங்கள அல்லது தமிழ் மொழிவாரியான சிறுபான்மைச் சனத் தொகை என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதனைக் கருத்திற் கொண்டு சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும், அல்லது அத்தகைய இடப் பரப்பு அமைந்திருக்கக்கூடியதான மாகாணத்தில் நிர்வாக மொழியாகப் பயன்படுத்தப்படுதல் மொழி தவிர்ந்த அத்தகைய இடப்பரப்பிற்கான நிர்வாக மொழியாகப் பயன்படுத்தப்படலாம் எனச் ஜனாதிபதி பணிக்கலாம்" என அரசியலமைப்பின் மொழிசார் சரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




இதற்கமைய, அரசியலமைப்பில் குறிப்பிடப்படாத சீன மற்றும் அரபு மொழிகள் நாட்டின் பல பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்க முடியும் என அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள பின்னணியில் பல கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

சுதந்திரத்தின் பின் இலங்கையில் மூழ்கிக் கிடந்த பிரச்சினைகளில் மொழி உரிமை என்பது ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்தது என்பது யாவரும் அறிந்த விடயமாகும். சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளை இல்லாது செய்யும் வகையில் இவ்வாறான மொழி புறகணிப்புகள் அமைந்துள்ளதாகத் தமிழர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தமது மொழியில் பற்றுடையவர்களாக உள்ளனர். அது அவர்களுடைய உரிமை ஆகும். இவ்வாறான மொழி புறக்கணிப்பு விடயங்கள் வேறுப்பட்ட சமூகங்களிற்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த வல்லன. இதை தவிர்பதனூடாக நாட்டின் ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் பாதுகாக்க முடியும். ■



# 2021 ஆம் ஆண்டு திருமணம் செய்த கிரிக்கெட் பிரபலங்கள்

இந்திய ஆல்ரவுண்டர் விஜய் சங்கர், வைஷாலி விஸ்வேஸ்வரன் இந்த ஆண்டு ஜனவரி மாதம் திருமணம் செய்து கொண்டனர். தமிழ் நாட்டு நடிகை தனது திருமண புகைப் படங்களை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார்.

புதுச்சேரி உள்நாட்டு கிரிக்கெட் அணியின் கப்டன் ரோகித் தாமோதரனுக்கும் ஐஸ்வர்யாவுக்கும் கடந்த ஜூன் 27 ஆம் திகதி திருமணம் நடந்தது. மணமகள் பிரபல இயக்குனர் ஷங்கரின் மகள்.

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவுக்கும், விளையாட்டு தொகுப்பாளினி சஞ்சனா கணேசனுக்கும் கடந்த மார்ச் 15 ஆம் திகதி திருமணம் நடைபெற்றது.

இந்திய கிரிக்கெட் வீரர் ஜெய்தேவ் உனத்கட் தனது திருமணத்தை சமூக வலைதளங்களில் அறிவித்துள்ளார். இந்தியன் பிரீமியர் லீக்கில் (ஐபிஎல்) ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக விளையாடி வரும் இவர் பெப்ரவரி 2 ஆம் திகதி குஜராத்தில் ஒரு தனியார் விழாவில் திருமணம் செய்து கொண்டார்.

இந்திய ஆல்-ரவுண்டர் ஜெயந்த் யாதவ், அவரது காதலி திஷா சாவ்லாவை பெப்ரவரி 6 ஆம் திகதி திருமணம் செய்து கொண்டார்.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் மற்றொரு சூப்பர் ஸ்டார் ராகுல் தேவடியாவுக்கும் ரிதி பன்னுவுக்கும் நவம்பர் 29ஆம் திகதி திருமணம் நடை பெற்றது. இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இந்த ஜோடிக்கு நிச்சயதார்த்தம் நடந் தது. பெப்ரவரி 16 அன்று திருமணம் செய்து கொண்டனர்.

இந்தியாவின் சிவம் துபேக்கும் அவரது காதலி அஞ்சுகானுக்கும் ஜூலை 16 ஆம் திகதி திருமணம் நடை பெற்றது. ஐ.பி. எல் தொடரில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக விளையாடி வரும் துபே, தனது திருமண புகைப் படங்களை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்தார்.



# 2018 லேயே ஓய்வுபெற்றிருப்பேன் மனம்திறந்த அஷ்வின்

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக திகழ்ந்துவரும் ரவிச்சந்திரன் அஷ்வின் கடந்த 2010 ஆம் ஆண்டு இந்திய அணிக்காக அறிமுகமாகி 111 ஒருநாள் போட்டிகள், 51 ரி20 போட்டிகள் மற்றும் 81 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அறிமுகமான காலத்திலிருந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த அஷ்வின் இந்திய அணியின் முதன்மை பந்து வீச்சாளராக திகழ்ந்து வந்தார். ஆனால் 2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு அவருக்கு ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் தொடர்ச்சியாக வாய்ப்பு கிடைக்காமல் கழற்றி விடப்பட்டார். அதை தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடி வந்த அஷ்வின் அயல்நாட்டு டெஸ்ட் போட்டிகளிலும் பெஞ்சில் அமர வைக்கப் பட்டு வந்தார். இருப்பினும் தனது நம்பிக்கையை எந்த இடத்திலும் தவறவிடாத அஷ்வின் சிறப்பாகப் பந்து வீசி தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டில் பல் வேறு சாதனைகளைப் படைத்து வருவது மட்டுமின்றி ரி20 கிரிக்கெட் அணியிலும் இடம்பிடித்துள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற உலகக் கிண்ண ரி20 தொடரில் விளையாடிய அஷ்வின் இனிவரும் தொடர்களிலும் இந்திய அணிக்காக தொடர்ச்சியாக விளையாடுவார் என்பது உறுதியாகியுள்ளது. இந்நிலையில் தான் கடந்து வந்த கடினமான பாதை குறித்தும், அவர் பட்ட கஷ்டங்கள் குறித்தும் தற்போது பேட்டி ஒன்றினை அளித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில் : 2018 ஆம் ஆண்டு வாக்கில் எனக்கு ஏற்பட்ட காயம் மற்றும் சில வீரர்களின் வருகை என எனது இடம் பெரிய கேள்விக்குறியாகியது.

அதுமட்டுமின்றி இங்கிலாந்து தொடர், அவுஸ்திரேலிய தொடர் என எனக்கு அடுத்தடுத்து வாய்ப்புகள் மறுக்கப்பட்ட போது என்னுடைய கிரிக்கெட் பயணம் முடிந்ததோ என்ற கவலையில் இருந்தேன். மேலும் அப்போது கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று விடலாம் என்று கூட யோசித்தேன். ஆனால் நான் இதுபோன்று அழுத்தத்தில் இருக்கும் போதெல்லாம் என்னுடைய மனைவியிடம் மனம் திறந்து பேசுவேன். அதேபோன்று அந்த கஷ்டமான நேரங்களில் எனது தந்தையும் எனக்கு உறுதுணையாக இருப்பார். அப்போது அவர் என்னிடம் ஒரு முறை பேசுகையில் : நான் உயிரோடு இருக்கும்போதே ஒயிட் பால் கிரிக்கெட்டில் உன்னுடைய கம்பேக்கை நிச்சயம் பார்ப்பேன் என்று என்னிடம் கூறியிருந்தார். அவர் கூறியபடியே தற்போது நான் ரி20 கிரிக்கெட்டில் இடம் பிடித்து விளையாடி வருகிறேன். விரைவில் ஒருநாள் அணியிலும் இடம் பிடித்து விளையாடுவேன் என்றும் கூறினார். என்னுடைய தந்தை அன்று கூறிய வார்த்தையை இன்றளவும் என்னால் மறக்க முடியாது என நெகிழ்ச்சியான கருத்தினை அஷ்வின் பகிர்ந்து கொண்டார்.



# கவனக்குறைவினால் ஆட்டமிழந்த ஜோஸ் பட்லரை பாராட்டிய மைக்கல் ஹசி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இராண்டாவது டெஸ்ட் போட்டியில் குதிக்காலால் விக்கெட்டைத் தட்டி ஆட்டமிழந்த ஜோஸ் பட்லரை அனைவரும் விமர்சனம் செய்கையில் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மைக்கல் ஹசி பாராட்டியுள்ளார்.

2 ஆவது இன்னிங்சின் போது இங்கிலாந்து வீரர்கள் மளமளவென ஆட்டமிழந்தும் வெளியேற ஒரு பக்கம் நிலைத்து நின்று ஆடிய ஜோஸ் பட்லர் 207 பந்துகளை சந்தித்து வெறும் இரண்டே பவுண்டரிகளை மட்டும் அடித்து 26 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தார். அதிரடி ஆட்டக்காரரான இவர் இப்படி 207 பந்துகள் களத்தில் நின்று மிக நிதானமாக விளையாடி இறுதியில் அவர் தனது கவனக்குறைவினால் மோசமான முறையில் ஆட்டமிழந்து வெளியேறியது வீடியோவாகத் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரிச்சர்ட்ஸன் வீசிய பந்தை தட்டி விட்டு ஓட முயற்சித்த பட்லர் அந்த பந்திற்கு ஓட முடியாது என்பதால் மீண்டும் கிரீசுக்கு திரும்பினார். ஆனால் அதற்கு முன்னரே அவர் பந்தை அடிக்கும் போது தவறுதலாக பின்காலால் ஸ்டம்பை இடித்து விட்டார். இதன் காரணமாக அவர் ஹிட் விக்கெட் முறையில் வெளியேறிய போது சோகமாக பெவிலியன் திரும்பினார்.

இங்கிலாந்து அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஜோஸ் பட்லரை புகழ்ந்து அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மைக்கல் ஹசி சில கருத்துகளை தெரிவித்துள்ளார். அதிலும் குறிப்பாக 207 பந்துகளை சந்தித்து வெறும் 26 ஓட்டங்களை மட்டுமே அடித்த அவரை ஏன் புகழ்ந்துள்ளார் என்பதே இதில் சிறப்பான விடயம். இதுகுறித்து அவர் கூறுகையில் ,

கடந்த மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற ரி20 உலகக் கிண்ணத் தொடரின் போது ஒவ்வொரு பந்தையும் அடித்து விளையாடி மைதானத்திற்கு வெளியே அனுப்பிய பட்லர் இப்போது டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு ஏற்றவாறு அந்த பாணியை அப்படியே மாற்றி முழுக்க முழுக்க இங்கிலாந்து அணியை காப்பாற்ற தடுப்பாட்டம் விளையாடினார். எந்த ஒரு கட்டத்திலும் அவர் தனது பொறுமையை இழந்து பெரிய ஷாட்டுக்கு செல்லவில்லை. முடிந்த அளவிற்கு போட்டியை கொண்டு செல்ல வேண்டும் என்று, மிகக் கவனத்துடன் தெளிவான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஒரு பக்கம் அதிரடியாக ஒயிட்பால் கிரிக்கெட்டில் விளையாடி வந்தாலும் மறுபக்கம் தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது அவரது திறமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. அவரது இந்த முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள் என பட்லரின் பேட்டிங்கை புகழ்ந்து மைக்கல் ஹசி பேசினார்.

இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த 16 ஆம் திகதி அடிலெய்டு ஓவல் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக துவங்கியது.

முதல் டெஸ்ட் போட்டியை போன்றே இந்த போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி துவக்கத்திலிருந்தே ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தது. இந்தப் போட்டியின் முதலாவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 473 ஓட்டங்களைக் குவிக்க அடுத்ததாக விளையாடிய இங்கிலாந்து அணி 236 ஓட்டங்களை மட்டுமே அடித்தது அதை தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 230 ஓடங்ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்ய இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு 468 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இங்கிலாந்து அணி தங்களது இரண்டாவது இன்னிங்சில் 192 ஓட்டங்களை மட்டுமே அடித்து 275 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்று தொடரில் 2 க்கு 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# இளமை தரும் திராட்சை விதை



மனிதனுக்கு முதுமை வந்துவிட்டது என்பதற்கு உடற்கூறு அடையாளங்கள் பல. அவற்றில் முக்கியமானது செல்களில் ஏற்படும் சுணக்கம். இயல்பாக செல்கள் இரண்டாகப் பிரிந்து கொண்டே செல்லும் போது, உடலில் இளம் தசைகள், நரம்புகள் போன்றவை இருக்கும். இந்த செயற்பாடு மந்தமடையும் போது, செல்கள் பிளக்கும் வேகம் குறையும். அப்போது மனித உடல் முதிர்வதற்கான தோற்றத்தை வெளிப் படுத்தும்.

ஆனால், திராட்சை விதையில் உள்ள 'புரோசையானிடின் சி1' என்ற வேதிப் பொருள், செல்களின் இளமைத் தன்மையை நீட்டிப்பதை ஷாங்காய் சத்துணவு மற்றும் உடல்நல நிலையத்தின் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

வயதான எலிகள் மீது நடத்திய சோதனையில், அவற்றின் செல்கள், புரோசையானிடினால் தூண்டப்பட்டு, மீண்டும் புத்துணர்ச்சியுடன் இருப்பது தெரியவந்தது. மனித பரிசோதனைகளை சீன விஞ்ஞானிகள் இனிமேல்தான் துவங்கஉள்ளனர்.




# தற்பெருமை



வியப்பூர் என்னும் கிராமத்திலே மிதுலா, மாதுமை என்ற நண்பிகள் வசித்து வந்தார்கள். மிதுலா மிகவும் பணிவானவள். ஆனால், மாதுமையோ அவ்வாறில்லை தன்னைத் தானே புகழ்ந்து கொண்டிருப்பாள். மிதுலாவிற்கு "ஒன்றுமே தெரியாது அவளை விட நான்தான் கெட்டிக்காரி" என்று மனதில் நினைத்துக் கொள்வாள்.

ஒருநாள் இருவரும் வீதியோரமாகச் சென்று கொண்டிருந்த வேளையில் வயதான முதியவர் ஒருவர் இருவரையும் அழைத்து, "என்னிடம் சில மரக்கன்றுகள் உள்ளன. அதை வீதியோரம் நடுவதற்கு உதவி செய்வீர்களா? நான் எப்படி நட வேண்டும் என்பதைச் சொல்லித் தருகிறேன்" என்றார். உடனே மாதுமை மரக்கன்று நடுவதா? எனக்குத் தெரியும் என்று சொல்லிக் கொண்டு கன்றை வாங்கி நட்டுவிட்டு வீடு சென்றாள். மிதுலா முதியவரின் ஆலோசனைப்படி மரக்கன்றை வாங்கி நட்டாள். முதியவர் மரக்கன்றுகளைப் பராமரித்து வந்தார்.

இருவாரத்தின் பின் அவ் வீதி வழி இருவரும் செல்லும் போது தாங்கள் நட்ட மரக்கன்றைப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்! மிதுலாவின் மரக்கன்று செழிப்பாக வளர்ந்திருந்தது. மாதுமையினதோ கருகிக் காணப்பட்டதைப் பார்த்த அவள் ஏன்? என்ன நடந்தது? என்று மிதுலாவிடம் கவலையுடன் கேட்டாள்.

"நீ உனக்குத்தான் எல்லாம் தெரியும் போல முதியவரின் சொல் கேட்காமல் மரக்கன்றை நட்டாய் அது தான் கருகியிருக்கிறது" என்றாள் மிதுலா. இனியாவது மற்றவர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேள், அவர்களின் கருத்துக்கு மதிப்பளித்துக்கொள், தற்பெருமை கொள்ளாதே.

தன் தவறை உணர்ந்தாள் மாதுமை. இருவரும் சந்தோசமாக வீடு சென்றார்கள்...

**பி.ஜெஸ்மி**



# முயல் குட்டி

பஞ்சுப் பஞ்சு முயல் குட்டி
பாய்ந்து வரும் முயல் குட்டி
நீண்ட செவி முயல் குட்டி
நான் வளர்க்கும் முயல் குட்டி
புல் உண்ணும் முயல் குட்டி
புதுமை நிறைந்த முயல் குட்டி
எந்தன் அன்பு முயல் குட்டி
எந்தன் செல்ல முயல் குட்டி

**மம்மு**

# விடுகதைகள்

1. கீழேயும் மேலேயும் மண் நடுவிலே அழகான பெண். அது என்ன?
   **மஞ்சள் செடி**
2. சொன்ன நேரத்துக்கு தொண்டை கிழிய கத்துவான். அவன் யார் ?
   **அலாரம்**
3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் - அது என்ன?
   **தராசு**
4. பூவோடு பிறந்து நாவோடு கலந்து விருந்தாவான் மருந்தாவான். அவன் யார்?
   **தேன்**
5. நூல் நூற்கும் நெசவாளிக்குக் கட்டிக் கொள்ள துணியில்லை அது என்ன?
   **சிலந்தி**
6. உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை அது என்ன?
   **தக்காளி**
7. ஒட்டுத் திண்ணையில் பட்டுப் பாவாடை அது என்ன?
   **தோடு**
8. தலைக்குள் கண் வைத்திருப்பவன் இவன் மட்டும்தான் அவன் யார்?
   **நுங்கு**



# உருகும் பனிப்பாறை பெருகும் ஆபத்து!



காற்று மாசுபாட்டால் புவி வெப்பமாகி, பனிப் பாறைகள் உருகத் துவங்கியுள்ளன. பூமியின் இரண்டு துருவங்களிலும் பனிப் பாறைகள் பாளம் பாளமாக வெடித்து கரையும் காட்சிகளை செய்திகளில் காட்டியபடியே உள்ளனர்.

இந்த நிலையில் இன்னொரு கெட்ட செய்தி வந்துள்ளது. அது என்ன தெரியுமா? பல நூற்றாண்டுகளாக உறைந்திருக்கும் பனிப் பாறைகள் உருகி கடலில் கரையும்போது ஏராளமான நைத்திரஜன் ஒக்சைட் வெளிப்பட்டு, வளிமண்டலத்தில் கலக்கிறது.

இந்த நைத்திரஜன் ஒக்சைட் என்பது, ஆபத்தான பசுமைக்குடில் வாயுக்களில் ஒன்று. சைபீரியாவில் தற்போது நெடுங்காலமாய் உறைந்திருந்த பனிக் கட்டிகள் கரைவதால், அங்கு நைத்திரஜன் ஒக்சைட் நச்சு காற்றில் கலந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

காபனீரொட்சைட்டை விட, 298 மடங்கு பலமாக நைத்திரஜன் ஒக்சைட் புவி வெப்பமாதலை வேகப்படுத்தும் என விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர். அதேபோல, நைத்திரஜன் ஒக்சைட், பூமிக்கு மேலே போர்த்தி யிருக்கும் ஓசோன் படலத்தில் ஓட்டை போடுமளவுக்குப் பலம் வாய்ந்தது எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன், அமில மயமாகி வரும் கடலும், விவசாயத்தில் பயன்படுத்தும் செயற்கை உரமும்தான் காற்றில் நைத்திரஜன் ஒக்சைட் நச்சை காற்றில் கலக்கக் காரணமாக இருந்தன. இப்போது, பனிப்பாறை உருகுவதும் அந்தப் பட்டியலில் சேர்ந்துள்ளது. பனிப் பாறைகளில் வாழும் நுண்ணுயிரிகள் தான் நைத்திரஜன் ஒக்சைட் ஆபத்துக்கு முழு காரணம் என் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 25.12.2021 அன்று வெளியிடப்பட்டது.